REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 17 செப்டம்பர் ஒக்டேபர் 2010 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 133



## ஜனாதிபதியின் ஐ.நா. உரை கூறும் செய்தி!

வருடா வருடம் உலகத் தலைவர்கள் தத்தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்ற இடம் உலக மன்றமென அழைக்கப்படும் ஐ.நா சபையாகும். இதனை உலகின் பேச்சு மன்றம் எனவும் வேடிக்கையாக கூறுவதுண்டு. இம்முறை நடந்த மேற்படி வருடாந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றியுள்ளர். அத்துடன் அதே மன்றத்தில் இடம்பெற்ற புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குக்கள் என்னும் தொனிப் பொருளிலான கூட்டத்திலும் அவர் பேசியிருக்கிறார். இலங்கை ரூபாவில் பதினான்கு கோடி செலவாகும் நூற்றிமுப்பது பேர் கொண்ட பெருந் தூதுக் குழுவுடன் சென்ற ஜனாதிபதி அங்கு உரையாற்றும் போது நமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். அவரது உரையில் இலங்கை நாடும் அனைத்து மக்களும் வெவ்வேறு நிலைகளில் எதிர்நோக்கியுள்ள அடிப்படையான பிரச்சினைகள் பற்றியோ அவற்றுக்கான தீர்வுகள் சம்மந்தமாகவோ சுட்டிக்காட்டப்படவில்லை.

அதேவேளை அபிவிருத்தி சமாதானம் பற்றிய தமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வலியுறுத்தியதுடன் உலகத் தலைவர்கள் அதனை அவதானித்து ஆதரவு தரவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அவரது பேச்சின் தொனி உலகத் தலைவர்கள் இலங்கையின் அனுபவங்களில் இருந்து தகுந்த பாடங்களைப் படிக்க வேண்டும் என்று கூறுவது போன்றே காணப்பட்டது.

பொத்தாம் பொதுவான வகையில் நிகழ்த்தப்பட்ட அவ்வுரையில் இலங்கையின் இனப் பிரச்சினையை மனதில் வைத்து வெளியாரால் திணிக்கப்படும் தீர்வு எதுவும் இதுவரை வெற்றி பெறவில்லை. இனிமேலும் வெற்றி பெறமாட்டாது என்றும் கூறினார். அப்படியாயின் அவர் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியது கடந்த காலத்தில் இந்தியா ஒருபுறமாகவும் மேற்குலகு மறுபுறமாகவும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு முன்னின்ற முயற்சிகளையே ஆகும். வெளியார் தீர்வு முயற்சிகள் தத்தம் உள்நோக்கங்களை கொண்ட நிகழ்ச்சி நிரலை மறை முகமாகக் கொண்டிருந்தன என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனால் அவ்வாறு வெளியார் தலையிடவும் தீர்வு முயற்சிகளுக்கு முன்நிற்கவும் யார் இலங்கையில் இடந்தேடிக் கொடுத்தார்கள் என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும். இன்றும் கூட இதே ஜனாதிபதியானவர் இனப் பிரச்சினையின் தீர்ப்புக்கு நியாயமான ஒரு திட்ட த்தை வைப்பதற்கு மறுத்து வருபவராகவே காணப்படு கிறார். புலிகள் இயக்கத்தை அளித்ததோடு இனப் பிரச்சி னையையும் ஒழிந்து விட்டது என்றவாறே நோக்குகின்றார். ஆனால் உண்மையும் யதார்த்தமும் அவ்வாறு இல்லை. இன்றும் இன முரண்பாடும் அது சார்ந்த ஒடுக்குமுறை களும் தேசிய இனப் பிரச்சனையை பிரதானமாகவே சுட்டிக் காட்டி நிற்கிறது. இது கடந்த காலங்களில் உள் நாட்டில் அவ்வப்போது முயற்சிக்கப்பட்ட தீர்வுகள் எனப்ப ட்டவை. பேரினவாத முதலாளித்துவ நிலைப்பாடு களால் நிராகரிக்கப்பட்டவற்றின் எதிர்வி ளைவுகளுமாகும். இதன் பாடங்கள் கற்றறியப்படாமல் விடப்பட்டமையே இன்றைய நிலைக்குக் காரணமாகும். இன்றும் கூட அதே பழைய தவறு விடப்படுகிறது. ராணுவத் தீர்வின் மூலம் பெற்ற வெற்றியை நிரந்தரமானதும் இறுதியானதும் என நம்பும் போக்கே தலை தூக்கி நிற்கின்றது. எனவே தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படாது. தட்டிக் கழிக்கப்படுவ தானது ஏதோவொரு வழியில் அது மக்களின் எதிர்ப்பாகவும் போராட்டமாகவும் வளரச் செய்யுமென்ற வரலாற்று நியதி தொடரவே போகிறது.

அடுத்து அபிவிருத்தி பற்றி ஜனாதபதியின் உரையானது கடுகளாவாதும் ஏகாதிபத்திய பூகோள மயமாதலையும் அதன் கோர விளைவுகளையும் எதிர்ப்பதாகக் காணப்படவில்லை. முற்றிலும் அதற்கு அடிபணிந்து செல்வதையும் பூகோளமயமாதல் மூலம் அபிவிருத்தியை அடைந்து விடலாம் என்ற பொய்யான நம்பிக்கைக்கு சாமரை வீசிக் கொண்டதையுமே காண முடிந்தது. இதன் மூலம் ஜனாதிபதியின் உண்மை நிலை மேற்குலகிற்கு அவர் எதிரி அல்லர் என்பதையே கோடிட்டுக் காட்டியது. மேற்குலகாயினும் இந்தியாவாகிலும் அபிவிருத்தியின் பெயரால் தாராளமாக இங்கு வந்து பூகோளமயமாதற்கு சுரண்டலை நடாத்துங்கள். அதற்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம். ஆனால், இனப் பிரச்சினை, தமிழ் உரிமைகள், ஜனநாயகம், சுதந்திர செயற்பாடு என்பவை பற்றி அலட்டிக் கொள்ளாதீர்கள் என்ற மறைமுகச் செய்தியையே ஜனாதிபதியின் உரை சுட்டிக் காட்டியது. மேலும் யுத்த வெற்றியின் பெருமிதத்துடனும், பதினெட்டாவது திருத்தம் மூலம் அதிகாரக் குவிப்பு மகிழ்ச்சியோடும், இரண்டாவது பதவிக்காலக் கையேற்கவுள்ள மனநிறைவோடும் இடம் முறை ஐ.நா சபையில் உரையாற்றியுள்ளார். ஜனாதிபதி இலங்கை மக்கள் மத்தியில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. அபிவிருத்தியும் மீளக் கட்டியெழுப்புதலும் மட்டும் தான் தம்முன்னே உள்ள சவால்கள் என்றே கூறியுள்ளார். ஆனால், விடயங்களின் பாரதூரத் தன்மை அவற்றுக்கும் அப்பாலிருந்து வருகின்றது. அவை ஒவ்வொன்றும் உள்ளார்ந்த ரீதியில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவை கடும் காற்றாகிப் புயலாகி வீசவே செய்யும். மரம் அமைதியை விரும்பலாம். காற்று அதனை விடுவதில்லை என்பது போன்று பிரச்சினைகளை மூடி மறைக்கலாம். ஆனால் அவற்றின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது. ஜனாதிபதியின் உரை வழமை போன்று ஐ.நா சபைக் குரிய வெறும் உரை மட்டுமே ஆகம்.

★ ★ ★

**விசாரணை இல்லை**
**விடுதலையும் இல்லை**
**சிறைகளில் இருப்போர்**

**11 சிறைச்சாலைகளின்**
**734 பேர்**
**ஆண்கள் 684 பேர்**
**பெண்கள் 50 பேர்**
**குழந்தைகள் 5 பேர்**

## மலையக மக்களை அச்சுறுத்தி வரும் இன வன்முறைகள்

மலையக மக்கள் அன்றாட உழைப்போடும் வாழ்க்கைத் துன்பங்களோடு போராடி வருபவர்கள். அத்தகைய மக்களை அவ்வப்போது இன வன்முறை சூறையடிச் சென்று விடுகிறது. இவ்வாறான இன வன்முறை அடிக்கடி நிகழ்வது இரத்தினபுரி மாவட்டத்திலாகும். அண்மையில் நிவித்திகலை குக்குலுகல தோட்டத்தில் தொழிலாளர்கள் மீது வன்முறை ஏவப்பட்டது. அதில் நூற்றுக்கு மேற்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமது இருப்பிடங்களை இழக்க வேண்டி ஏற்பட்டது.

தனிப்பட்ட குரோதங்களால் ஏற்படும் தகறாறுகள் முடிவில் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களைப் பழிவாங்குவதில் சென்று முடிந்து விடுகிறது. இதன் போது இருப்பிடங்கள் எரியூட்டப்படுவது, அவர்களிடம் இருக்கும் அற்பசொற்ப பொருட்கள் சூறையாடப்படுவது, தாக்கப்பட்டு காயப்படுத்தப்படுவது. பெண்கள் பாலியல் பலாதிகாரம் செய்யப்படுவது சில வேளை களில் கொலைகள் செய்யப்படுவது என விடயங்கள் சென் றுவிடும்.

இவ்வாறு தான் நிவித்திகல குக்குலுகலத் தோட்டத்திலும் நடைபெற்றது. இவ் இனவன்முறையால் மக்கள் தமது வீடுவாசல்களை விட்டு வெளியேறியதுடன் மீண்டும் அங்கு சென்று குடியேற அஞ்சுகின்றனர். அந்தளவிற்கு அங்கு இனவெறி தலைவிரித்தாடியுள்ளது. அங்கு கசிப்பு வியாபாரம் சம்மந்தமாக ஏற்பட்ட ஒரு சிலருக்கிடையிலான அடிபிடியும் அதன் பின் ஏற்பட்ட கொலையும் ஒன்றுமறியாக தொழிலாளர்களைத் தாக்கும் இனவெறியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் வழிவழியாக வாழ்ந்து வந்த தமது பிரதேசத்தில் தொடர்ந்தும் வாழ முடியாத அச்சத்தில் தங்களை வேறு பாதுகாப்பான பிரதேசங்களில் குடியமர்ந்துமாறு கேட்டு வருகிறார்கள்

ஆனால் அரசாங்கத்திற்கு இது போன்ற விடயங்கள் அற்பமானவைகளேயாகும் மலையகத்தில் தொழிலாள ர்களாகவும் சிறுபான்மையினராகவும் உள்ள பிரதேசங்களில் பேரினவாதம் உக்கிரமாகத் தன்னை முன்னுறுத்தி வருகின்றது. அங்கெல்லாம் இன வன் முறை ஏவப்படும் போது பொலிசாரும் அரசாங்க நிர்வாகமும் ஏனொ தானோ என்ற நிலையிலேயே இருந்து விடுகின்றனர். தாக்கப்படுவது தொழிலாளர்களான தமிழர்கள் தானே என்ற பேரினவாத வக்கிரம் முன் நிற்கிறது.



இது பற்றி மலையகத் தலைமைகளுக்கும் பாராளுமன்ற உறுப் பிரனர்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. தமிழ் மக்களைக் காப்பற்றும் கடவுளர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்வரே அன்றி அவர்களது பிரச்சினைகளில் பங்கு கொள்வதில்லை அண்மையிலும் அவ்வாறு தான் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இவ்விடயம் பற்றி அக்கறை காட் டவில்லை. ஆனால் அங்கு மக்கள் இன்னமும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பவோ பாதுகாப்புப் பெறவோ இல்லை.

இது மலையக மக்கள் எதிர்நோக்கும் இன வர்க்கப் பிரச்சினைகளின் பூதாகாரத்திற்கு ஒரு சோற்றுப் பதமாகும். எனவே நிவித்திகல குக்குலுகலத் தோட்டத் தொழிலாளர்களான தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பும் இழப்புகளுக்கான நஷ்ட ஈடும் வழங்கப்படவேண்டும் இச் சம்பவம் மூலம் மலையகத் தமிழ் மக்கள் தமது இருப்பிற்கும் எதிர்காலத்திற்குமான மாற்று அரசியல் பற்றி சிந்திப்பது

**தடுத்து வைக்கப்பட்டுள்ள**
**புலிகள் இயக்கத்தவர்கள்**

**ஆண்கள் 8894 பேர்**
**பெண்கள் 2098 பேர்**
**திருமணமானோர் 4143 பேர்**
**செய்யா தோர் 6849 பேர்**
**மொத்தம் 10992 பேர்**



## விடுதலை செய்ய மறுப்பதேன்!

தோழர்கள் எஸ்.சுகேசனன் ந.பிரதீபன் ஆகியோர் தொடர்ந்தும் சிறையிலிருந்து விடுவிக்கப்படாதுள்ளனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நீதி மன்றத்தின் முன் வைக்கப்பட்டு விசாரணை எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை. வெறும் சந்தேக நபர்களாக எவ்வளவு காலத்திற்குத்தான் அவர்களைச் சிறையில் வைத்திருப்பது தோழர் சுகேசனன் ஒரு இளம் ஆசிரியர் தோழர் பிரதீபன் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவனும் சுயதொழில் புரிந்து வந்த குடும்பப் பொறுப்புள்ள ஒரு இளைஞர். இவர்களது பயனுள்ள இளமைக் காலத்தை இவ்வாறு சிறையில் வைத்து சிதைப்பதன் நோக்கம் தான் இவர்களைப் போன்றே சிறைகளில் சந்தேகத்தின் பெயரில் நீண்டகாலம் பலர் இருந்து வருகின்றனர். ஆதலால் விசாரணை செய் அல்லது விடுதலை செய் என நாம் வற்புறுத்தகின்றோம்.

## சபரகமுவ மாகாண தமிழ் மொழிக் கல்வி நிலை தொடர்பில் மக்கள் விசனம்

சபரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மலையக தமிழர்கள் அதிகளவில் வாழ்கின்றனர். தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலேயே இவர்களின் வாழ்வாதாரம் தங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறைக் காட்டிவருகின்றமையை காணமுடிகின்றது. நூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட பாடசாலைகள் பல்வேறு வகுப்பு மட்டங்களைக் கொண்டு இங்கு காணப்படுகின்றன. இந்நிலையில் இம்மாகாணத்தின் கல்வி மோசமான பாதிப்பிற்கும் சீரான வீழ்ச்சிக்கும் உள்ளாகி வருகின்றமை வேதனைக்குறிய விடயமாகும்.

கடந்த காலத்தில் இம்மாகாணத்தில் பிரதி கல்விப்பணிப்பாளர், உதவி கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் மாகாண மட்டத்திலும், வலயம் தோறும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பதவிகள் தமிழ் மொழிக்காக ஏற்படுத்தப்பட்டன. அப்பதவியில் அமர்ந்த "மகான்"களின் புண்ணியத்தினால் கல்வித்துறை சீர்கெட்டதுடன், அவர்கள் தத்தமது பைகளை நிரப்பிக் கொண்டனர் என்பது ஊர் அறிந்த உண்மை. 2007 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 3127 ஆசிரியர் நியமனத்தில் சபரகமுவ மாகாணத்தில் வழங்கப்பட்டபோது இந்நியமனத்தினை அரசியல் தலையீடு இன்றி மேற்கொள்வதற்கு சிவில் அமைப்புகள் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து போதும் பலன் கிடைக்கவில்லை.

அண்மையில் நியமனங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மோசடிகள் தொடர்பில் அப்போதைய மாகாண கல்வி பணிப்பாளரும் அவருக்கு பின் அப்பதவிக்கு வந்த பணிப்பாளரும் இரு வலய பிரதி கல்வி பணிப்பாளர்களும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் பிரதேச மக்களுக்கு பூரண உடன்பாடுண்டு. எனினும் தமிழ் மொழி பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ் மொழி நிர்வாக பிரிவுகள் ஆளனி பற்றாக்குறையினால் ஸ்தம்பிதமாகியுள்மை வருந்ததக்க விடயமாகும்.

எனவே சபரகமுவ மாகாணத்தின் தமிழ் கல்வி நிர்வாக பிரிவு செயற்பட வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்கு வழமைப்போல் அரசியல் செல்வாக்கினை தகைமையாக கொண்டு; மாணவர்களினதும் ஒட்டுமொத்த சமூகத்தினதும் எதிர்காலத்தை பாழடைய செய்யாது; பார பட்சங்கள் அற்ற வகையில் கல்வி தகைமை, அனுபவம் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு தகுதியான நியமனங்களை வழங்க வேண்டும் என பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கேகாலை நிருபர்

## நேரில் கண்டவர் கூறுகின்றார் எங்கள் அவலம்

தாண்டிக்குளத்தில் இருந்து ஆனையிறவு வரை 99 வீதமான மக்களது வீடுகளும், கடைகளும் உடைத்து அழிக்கப்பட்டுள்ளன. யுத்தப் பாதிப்பாயின் ஷெல் விழுந்த சேதமும், துவக்குக் குண்டு பாய்ந்த சேதமும் மட்டுமே இருக்கும். ஆனால், திட்டமிட்டு மக்களது வீடுகள் அழிக்கப்பட்டு கூரை, தகரம், அஸ்பெஸ்ரஸ் சீற், நிலை, யன்னல் கதவு என்பன அகற்றப்பட்டுள்ளன. இதை தர்மக் கொள்கையைப் பேசும் இலங்கையின் அரசாங்கத் தரப்பினர் செய்து முடித்துள்ளனர். அப்பாவி மக்களது வீடுகள் ஏன் அழிக்கப்பட்டன?

மெனிக் பாமில் இருந்து மீளக் குடியமர வன்னிக்குக் கொண்டு செல்பவர்கள் அங்குள்ள பாடசாலையில் சில நாட்கள் தங்க வைக்கப்பட்டு பின்பு அவர்களது சொந்த வளவில் கொண்டு போய் விடப்படுகின்றனர். ரூபா 5000/=மும், 16 தகரங்களும் 10 தடிகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. U.N.H.C.R உலக உணவுத் திட்டம் சில உபகரணங்களை வழங்குகின்றன. ஆனால் இருப்பதற்குப் பாதுகாப்பான வீடு அங்கு இல்லை. வீடுகள் உடைத்து அகற்றப்பட்டுள்ளன. இந்த வீட்டின் பொருட்கள் எங்கு எடுத்துச் செல்லப்பட்டன. யார் இதனை லொறிகளில் ஏற்றிச் சென்றார்கள்? இது மக்களுக்கு விளங்காத புதிராக உள்ளது. மக்கள் பாம்புக் கடிக்கு இரையாகி வருகின்றனர். மன்னாரில் இருந்து நந்திக்கடல் வரை மந்தைகளை விரட்டிக் கொல்வதுபோல விரட்டி அடித்துக் கொன்றபோது கடைக்காரர்களும், வீட்டு உரிமையாளர்களும் தங்களது உடைமைகளை தம்முடன் எடுத்துச் சென்று உடையார்கட்டு, மூங்கிலாறு, கைவேலி போன்ற இடங்களில் பாதுகாப்புக்காக வைத்தனர். மோட்டார் பைசிக்கிள், துவிச்சக்கர வண்டி, லொறி, கார், பஸ், ரீவி, ரேடியோ, தளபாடங்கள், கதவுகள் என்பன அவற்றில் சில.

இப்போது பொதுமக்கள் தங்கள் பொருட்கள் தாங்கள் வைத்த இடங்களில் காணவில்லையென்று கதறி அழுகின்றனர். மக்கள் வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்ட பின் முல்லைத்தீவிலிருந்தவர்களே பொதுமக்களின் சகல பொருட்களையும் திருடிச் சென்றிருக்கின்றனர். வேறு மாவட்டங்களுக்கு லொறிகளில் ஏற்றி அனுப்பி வைத்துள்ளனர். மக்கள் இன்று எதுவுமற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கு இந்த உண்மைகள் தெரியுமா? தெரியாதா? பொதுமக்கள் கேட்கின்றார்கள்.

-வன்னிமகன்-

## தோழர் குணேந்தியின் மறைவுக்கு எமது சிகப்பு அஞ்சலி



குணேந்தியென மக்களாலும் தோழர் குணேந்தியெனத் தோழர்களாலும் அழைக்கப்பட்டு வந்த சின்னத்தம்பி குணேந்திரராஜா தனது 64வது வயதில் 24.09.2010 அன்று மாரடைப்பினால் இயற்கை எய்தினார். அவரது மறைவு மனத்துயரமிக்க நிகழ்வாகியது.

தோழர் குணேந்தி வடபுலத்தின் வடமராட்சி கடலோரக் கிராமமான பொலிகண்டியில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று அரசாங்க ஊழியராகக் கொண்டவர். புரட்சிகர பொதுவுடைமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு தனது கிராமத்தில் இளைஞர்களை அணிதிரட்டி அரசியல் சமூகத் தளங்களில் கடும் பணியாற்றியவர்.

தனது அரச பணி காரணமாக மலையகத்திற்கு மாற்றலாகி வந்து அப் பிரதேசத்தையே தனது வாழ்விடமாக்கி குடும்ப வாழ்வுக்கும் அடித்தளமாக்கிக் கொண்டவர். அவர் எங்கு வாழ்ந்தாலும் மக்களுக்குத் தன்னலமான சேவையை வழங்க வேண்டும் என்பதில் என்றும் பின்நின்றதில்லை. தான் வரித்துக் கொண்ட மார்க்சிய லெனினிச அரசியல் நிலைப்பாட்டிலும் கலை இலக்கிய செயற்பாட்டிலும் முன்னிலை வகித்து வந்தவர். அவர் மக்களோடும், தோழர்களோடும் குடும்பத்தோடும் பழகும் விதமே தனிப்பாணியானதாகும். அன்பும் பண்பும் பொதுநலனும் கொண்ட அவரது சமூக நோக்கு மார்க்சிய உலக நோக்கின் வழி வந்ததாகும்.

அத்தகைய ஒரு தோழர் திடீரென நம்மத்தியிலிருந்து மறைந்துள்ளமை தாங்க முடியாத சோகமும் இழப்புமாகும். அவரது மறைவுக்கு நமது புரட்சிகர சிகப்பு அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம். அவரது துணைவியார், மகன், மகள் ஆகியோருக்கு அனுதாபத்தையும் ஆறுதலையும் கூறிக் கொள்கின்றோம்.

## நாலு நடக்கும் உலகிலே

### நம்பிக்கைகள்

சில தமிழ்த் தேசியவாதிகள் இந்திய ஆட்சியாளர்களிடம் வைத்திருக்கிற நம்பிக்கை மூட நம்பிக்கையோ குருட்டுத்தனமான பக்தியோ அல்ல. 1988க்குப் பிறகு அப்படிப்பட்ட நம்பிக்கை இருந்திருந்தால் அதற்கு நல்ல காரணங்கள் இருந்திருக்கும். அது என்ன காரணமாக இருந்தாலும் தமிழ் மக்களுடைய நலன்களுடன் அதற்கு எவ்விதமான தொடர்பும் இல்லை என்பதை பற்றி நாம் நிச்சயமாக இருக்கலாம். அவர்கள் தமது ஒவ்வொரு சின்னச் சின்னத் தேவைகளுக்கும் இந்தியாவின் தயவையே நம்பியிருக்கிறார்கள். தவறு எது என்றால் நமது மக்கள் அவர்களை நம்புவதாக, அவர்களை நம்புமாறு நமது ஊடகவியலாளர்கள் ஏன் சொல்லுகிறார்கள்? அவர்களை யார் ஏன் கட்டாயப்படுத்துகிறார்கள்? இவை பற்றி நாம் கொஞ்சம் விசாரிக்க வேண்டும்.

### அவர்கள் முகவர்களில்லை!

சில மாதங்கள் முன்பு வரை இந்திய மேலாதிக்கத்தின் மீது நெருப்பை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்த அரசியல் 'ஆய்வாளர்கள்' இப்போது இந்தியா நடத்திய அழிவைப் பற்றியும் பேரினவாதிகளுடன் இந்தியாவுக்குள்ள நெருக்கத்தைப் பற்றியும் பேசுவதேயில்லை. அதுவும் போதாமல் சீனா வழங்கிய ஆயுதங்களால் தான் முல்லைத்தீவு மாவட்டத்தில் பேரழிவு நடந்ததென்று சொல்லுமளவுக்கு சிலரது ஆய்வு போயுள்ளது. அது இலங்கை அரசாங்கத்தின் இன ஒழிப்புப் போருக்கு மிகவும் உதவியது. இந்தியா என்பதும் மேற்குலகு வழங்கிய பேரழிவு ஆயுதங்களாலே அது இயலுமானது என்பதையும் மூடிக் கட்ட வேண்டிய தேவை என்ன? அவர்கள் எல்லோரும் இப்போது இந்தியாவைப் பற்றிக் குற்றங் கூறுவது நமக்குக் கேடானது என்கிறார்கள். இந்தியா காஷ்மீரில் நடத்தும் வெறியாட்டம் பற்றிக் கண்டு கொள்ள மறுக்கிறார்கள்? இந்தியா பற்றிய நிலைப்பாட்டில் மாற்றம் ஏன் என்று கேட்டால் மிகவும் கோபப்படுகிறார்கள். 'என்னை இந்திய முகவர்' என்று குற்றஞ்சாட்டுகிறீர்களா? என்றும் ஒரு சிலர் பதில் கூறினார்கள். யாரும் குற்றம் சாட்டமலே தங்களைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவர்களுக்கு விளங்குகிறதே. அது மெச்சத் தக்கது தான்.

### துருக்கியில் ஒரு அரசியற் சட்டத் திருத்தம்

இலங்கையை ஒரு தனிமனிதச் சர்வாதிகாரக் குடும்ப ஆட்சியாக மாற்றும் ஒரு சட்டத் திருத்தம் நிறைவேறி மூன்று நாட்கள் பின்பு துருக்கியில் ஒரு மக்கள் கருத்து வாக்கெடுப்பு நடந்தது. அதில் துருக்கியின் அரசியல் சட்டத்தில் இருபத்தேழு திருத்தங்கள் மக்கள் முன் வைக்கப்பட்டன. 62 சதவீதமான மக்கள் அதை ஆதரித்தனர். 1980 ஆம் ஆண்டு துருக்கியில் ராணுவச் சதி மூலம் ராணுவ ஆட்சி ஏற்பட்டது. ராணுவ அதிகாரத்தை உறுதிப்படுத்துகிற விதமாக வரையப்பட்ட துருக்கியின் அரசியல் சட்டத்தில் ராணுவத்தின் அடாவடித்தனத்துக்கு வசதியாக இருந்த பல விடயங்களே திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்கள் முழுமையானவையல்ல என்றும் குர்தியரின் தேசிய இன உரிமை பற்றிப் பேசவில்லை என்றும் குற்றங் கூறப்பட்டாலும் துருக்கியில் மக்களின் சனநாயக உரிமைகளை மீட்பதற்குச் சாதகமான நடவடிக்கை என்றே இச் சட்டத் திருத்தத்தைக் கொள்ள வேண்டும்.

நமது 18 வது சட்டத் திருத்தம் எதிர்ப்பின்றி நடைமுறைக்கு வருமானால் அதன் விளைவுகள் மிக ஆபத்தானவையாக அமையும். நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் சென்ற நிறைவேற்றதிகார சனாதிபதி முறையையும் அந்த அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தும் 18வது சட்டத் திருத்தத்தையும் இல்லாதொழிக்க நாடு இன்னும் முப்பது ஆண்டுகளுக்குக் காத்திருக்க வேண்டுமா?

### முஸ்லீம் தலைவர்களும் காஷ்மீரும்

பலஸ்தீனத்தில் நடக்கிற அட்டூழியங்களைப் பற்றி இடையிடையே ஆர்ப்பாட்டம் நடத்தினாலும், நமது முஸ்லீம் தேசியத் தலைவர்கள் இந்தியாவில் முஸ்லீம்களுக்கெதிராக நடக்கிற கொடுமைகள் பற்றி ஆர்ப்பாட்டம் நடாத்தியதாகத் தெரியாது. இப்போது காஷ்மீர் சுடுகாடாக்கப்படுகிறது. அதைப் பற்றி ஏன் முஸ்லீம் தலைவர்கள் யாரும் கண்டன அறிக்கை எதையுமே விடுவதில்லை? அவர்களும் தமிழ் தேசியவாதத் தலைவர்கள் போல இந்தியாவைப் பகைக்க விரும்பவில்லையா?

### காரணங்கள்?

நேரடியாகவே விடுதலைப் புலிகளுடன் சம்மந்தப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு வாக்குமூலம் வழங்கியவர்கள் சிலர் இப்போது சுதந்திர மனிதர்களாக மட்டுமல்லாது, முக்கியமான பிரமுகர்களாகவும் காட்சிப்படுத்தப்படுகிறார்கள். அவர்களை அவ்வாறு நடத்துவதை ஜே.வி.பி. விமர்சித்துள்ளது. போரை வழி நடத்திய தளபதி மறியலில் இருப்பதைப் பற்றிப் பேசும் போது ஜே.வி.பி. மேற்குறித்த விடயத்தை நினைவூட்டுவது உண்டு.

எனினும் விசாரணையின்றித் தடுப்புக் காவலில் உள்ள ஆயிரக் கணக்கானவர்கள் பற்றி அது அதிகம் பேசுவதில்லை. ஏன்? சிங்களப் புலிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் உட்படச் 'சந்தேக நபர்கள்' பலரது சிறைப்பிடிப்புக்கு ஜே.வி.பி. ஆட்சியில் பங்காளியாயிருந்தபோது ஆதாரமாகவும் தூண்டுகோலாகவும் இருந்ததுதான் காரணம்.

தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் கூட அவர்களைப் பற்றி பேசவிரும்புவதில்லை. அதற்கு என்ன காரணம்? அவர்கள் வெளியே வராமல் இருப்பது அவர்களுக்கு நல்லதா?

### ஊடக அனாதை

ஒரு காலத்தில் செய்தி ஊடகங்கள் மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்திய கட்சியாக யூ.என்.பி இருந்தது. 1945 முதல் 1960 வரை இடதுசாரிகள் வெளியிட்ட சில நாளேடுகளும் குறுகிய காலத்திற்கு நாளேடாக வந்த சுதந்திரன் வடக்கில் வெளியான ஈழநாடு, ஈழகேசரி என்பன போக யூ.என்.பிக்கு எதிராகப் பேசக் கூடிய ஒரு நாளேடும் இருக்கவில்லை. சொல்லப் போனால் குணசேன நிறுவனம் போக பிரதான அச்சு ஊடகங்கள் அனைத்துமே 1974 வரை யூ.என்.பி சார்பாகவே செயற்பட்டுள்ளன. 1972ல் குணசேன நிறுவனமும் யூ.என்.பி சார்பாக மாறிவிட்டது. ஜெயவர்த்தன ஆட்சி தொடங்கிய போதிலிருந்து யூ.என்.பியின் ஊடக ஆதிக்கம் வலுத்தது. ஐலண்ட்-திவயின ஏடுகள் விமர்சனப்பாங்காகப் பேசி வந்தாலும் யூ.என்.பிக்கு முற்றிலும் எதிர்நிலைப்பாடு எடுத்ததாகச் சொல்ல இயலாது. யூ.என்.பியின் அரசியல் அதிகாரம் பறிபோன போது கூட அதற்கு ஊடக ஆதரவு தொடர்ந்தும் வலுவாகவே இருந்து வந்தது. இன்று யூ.என்.பிக்கு சார்பாகப் பேசக் கூடிய ஒரு பிரதான நாளேடோ வலுவான ஒலி-ஒளிபரப்பு ஊடகமோ இல்லை. இது ஏன்?

யூ.என்.பி ஆட்சி ஒன்று அமைகிற வாய்ப்ப அடுத்த சில ஆண்டுகட்கேனும் இல்லையென்று ஊடக முதலாளிமார் அஞ்சுவதாலா? அல்லது தங்கள் பிழைப்புக்காக ஆளும் கட்சியுடன் ஒட்டிக் கொள்ளவா? அல்லது வேறு பொருளாதாரக் காரணங்களாலா?

# நிமிர்த்த முடியாத நாய்வால்கள்

பாராளுமன்ற ஜனநாயகத்தின் உண்மையான முகம் நாளுக்கு நாள் அம்பலப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இலங்கையின் பாராளுமன்றம் கொடூரமான புனிதர்களாலும் கோமாளித் தலைவர்களாலும் காட்டிக் கொடுத்து விருது வாங்கும் நல்ல உள்ளம் படைத்தவர்களாலும் நிறைந்திருக்கிறது. 'முன்னெப்போதையும் விட மகிந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபிறகு எதிர்க்கட்சிகளிலிருந்து ஆளும் கட்சிக்கு தாவுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆளும் கட்சியில் இருந்தால் தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியுமென்பதுதான் அவர்கள் அனைவரும சொன்ன கருத்தாக இருக்கிறது. ஆயினும் அதற்கு உண்மையான காரணங்கள் இருக்கின்றன.

ஆளுங்கட்சியில் சேர்ந்து ஏதாயினும் பதவியில் அமர்வதும் சொத்துச் சுகங்கள் படை பரிவாரங்கள் மீதான ஆசையும் தான் உண்மையானதாக இருக்க முடியும். அந்த வரிசையில் மலையகத்தில் இ.தொ.கா. ஒரு சாதனையை நிலைநாட்டியிருப்பது யாவரும் அறிந்ததே. அதே வழியில் இ.தொ.காவை விட குறைவான விலையில் பாராளுமன்ற சந்தையில் கிடைக்கக் கூடியவர்களான பிரபா கணேசனும், தொ.தே.ச. தலைவர் திகாம்பரமும் இணைந்து கொண்டனர்.

ஆளுங்கட்சியில் சேர்ந்து கொண்ட பிறகு அவர்கள் சொன்ன கருத்துக்கள் அவர்கள் சிறந்த நகைச்சுவையாளர்கள் என்பதை அனைவருக்கும் பறைசாற்றின. இ.தொ.கா வழமையாய் ஆண்டாண்டு காலமாக சொல்லி வந்த அதே பொய்கள்.

அவர்கள் சேரும் போது சில சமாதானங்களை கூறிக் கொண்டார்கள். ஐ.தே.மு.வில் வாக்குக் கேட்டாலும் எந்த இடத்திலும் அரசைத் தாக்கிப் பேசவில்லை என்றார். தற்போது அவர் நுவரெலியா மாவட்டத்தில் தான் முன்னெடுக்கப் போகும் அபிவிருத்திப் பணிகளைப் பற்றி கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். எப்படியும் கலந்துரையாடல் முடியும் போது அடுத்த தேர்தல் அறிவிக்கப்பட்டு விடும்.

அவர்கள் எதிர்க்கட்சியில் வாக்குக் கேட்கும் போது இப்போது அவர்கள் சொல்லுகிற எந்த நடைமுறை சிக்கலையும் ஏற்கனவே தெரிந்திருக்கவில்லையா? தெரியவில்லையென்றால் எந்தளவு மந்தப் புத்தியுடையவர்கள் மக்கள் தமது பிரதிநிதிகளாக தேர்ந்தெடுத்துள்ளார்கள். திகாம்பரம் போன்றவர்களுக்கு ஆளுங்கட்சியில் வாக்குக் கேட்க இதொ.கா. பெரிய முட்டுக்கட்டை. அவர்களுடன் நேரடியாக முரண்பாட்டை அது தோற்றிவிடும். எனவே தான் இந்தப் பெரிய மனிதர்கள் தாங்கள் ஏற்கனவே கதைத்துக் கொண்டபடி எதிர்க்கட்சியில் நின்று தேர்தலில் ஜெயித்ததும் ஆளுங்கட்சிக்குத் தாவி விசுவாசமான நன்றியுள்ள ஜீவன்களாக இருக்கிறார்கள்.

இ.தொ.காவுக்கு மாற்று என்று கூறிக் கொள்ளும் இவர்களுக்கு அரசின் ஏதேச்சதிகாரப் போக்குத் தெரிவதில்லையா? எழுநூறுக்கும் அதிகமான மலையக இளைஞர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுவது தெரியாதா? இவர்கள் மாற்றுத் தலைமைகளா எந்த வகையில் மாற்று? ஏமாற்றுவதிலா? பணம் பண்ணுவதிலா? காட்டிக் கொடுப்பதிலா? எதில் இவர்கள் மாற்று எனச் சொல்லட்டும்.

'முழுக்க முழுக்க மக்கள் விரோத நிலைப்பாடு கொண்டவர்கள் தான் இவர்கள். முற்போக்கு இடதுசாரி சக்திகளை விமர்சிப்பதையும் அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதையுமே முழு நேரத் தொழிலாக செய்பவர்கள். அறிவிழந்த படித்தவர்களும் இவர்கள் பின் கைதூக்கி அழைக்கிறார்கள். இவர்களை அம்பலப்படுத்துவதும் அழிப்பதும் தற்காலத்தின் உடனடித் தேவையாகும். அதற்காய் மக்கள் நல்ல சக்திகளோடு ஒன்றிணைய வேண்டும். நாய்வால் நிமிர்வதில்லை. வெட்டி எறிவதுதான் தீர்வெனில் வெட்டிவிட வேண்டியது தான்.

பாராளுமன்றத்துக்குள்ளும் இலங்கையின் அரசியலிலும் தன்னை ஒரு இடதுசாரிக் கட்சியாக அடையாளம் காட்டி அரசியல் செய்யும் ஜே.வி.பி உண்மையில் ஒரு இடதுசாரிக் கட்சியோ, மக்கள் சார்பான கட்சியோ அல்ல என்பது சித்தசுவாதீனமுள்ள அனைவரும் அறிந்த விடயமாகும். அவர்கள் பச்சை இனத் துவேசிகள் என்பதும் அனைவரும் அறிந்ததே.

இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கெதிராய் யுத்தம் செய்வதாக கூறிக் கொண்டு புரிந்த மனிதப் படுகொலைகளுக்கு நிபந்தனையின்றி ஆதரவு செய்வித்து உற்சாகப்படுத்தியவர்கள் ஜே.வி.பி. அதை அவர்களே பலமேடைகளில் கூறியுள்ளார்கள். அத்துடன் அரசின் முன்னாள் கொலைகார ஏவலாளியான சரத் பொன்சேகாவுடன் கேவலமாக கூட்டுச் சேர்ந்ததும் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளப் போதுமானவை.

இப்போது வடக்கு சென்று முகாம் மக்களை சந்தித்து கலந்துரையாடித் தங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்ளலாமென நினைக்கிறார்கள். ஜே.வி.பியின் அண்மைய போஸ்ரர் பிரச்சாரம் அரசியல் யாப்புத் திருத்தத்தை தோற்கடிப்பது தொடர்பாகவும், மகிந்தவின் குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாகவும் இருந்தது.

மகிந்தவை இந்தளவு இராணுவ அரசியல் ரீதியாகப் பலப்படுத்தியதில் ஜே.வி.பிக்கு பிரதானமான பாத்திரம் உண்டு. சர்வாதிகார ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு அவர்கள் கேவலமான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். அது அவர்களது இருப்புக்கே உலை வைப்பதாக உள்ளது. அதுவே தற்போதை கூச்சலுக்கு காரணம். ஜே.வி.பி அரசியல் வரலாற்றில் தவறிழைத்திருப்பது மட்டுமல்ல துரோகமும் இழைத்துள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

-எல்லண்ணா

## சக்தி மிக்கக் கழைக் கூத்தாட்டங்கள்

அரசியலில் கழைக்கூத்தட்டாங்கள் பலவும் உண்டு என்றும் எங்களுக்குத் தெரியும். ஒரு அந்தத்தில் இருந்து மறு அந்தத்திற்குத் தாவுவதல், குத்துக்கரணமடித்தல், கயிற்றின் மேல் நடத்தல் போன்று பலவற்றையும் கண்டிருக்கிறோம். இப்போது புதுவிதமான சக்திவாய்ந்த கழைக் கூத்தாடி ஒருவர் உருவாக்கப்பட்டிருக்கிறார். அரசியலை வணிகமாகவும் வணிகத்தை அரசியலாகவும் நடத்தி எல்லாவற்றையும் தனது செய்திகள் மூலம் நெறிப்படுத்துகிற ஒரு ஊடக நிறுவனம் அவருக்கு முன்னர் ஒரு கழைக்கூத்தாடியைத் தத்தெடுத்தது. தத்தெடுத்த கழைக்கூத்தாடிப் பிள்ளையின் ஆட்டம் பிழைத்துப் போனது. எனவே தன் தேவைகளுக்கமையப் புதிதாக ஒரு கழைக் கூத்தாடிப் பிள்ளையை உருவாக்கி வளர்த்திருக்கிறது.

* இந்தக் கழைக் கூத்தாடிப் பிள்ளைக்கு வரலாறு தெரியாது, பண்பாடு தெரியாது, அரசியலும் தெரியாது. அரசியல் தெரிந்தால்தான் அரசியலில் இருக்கலாம் என்ற தேவை இப்போது இல்லை என்று எங்களுக்குத் தெரியும். எதுவுமே தெரியாமல் ஊடகத்துறையில் பிரகாசிக்கலாமென்றும் எங்களுக்குத் தெரியும். பண்பாக நடந்தால் மற்றவர்களை ஏறிமிதித்து முன்னேற இயலாது என்றும் எங்களுக்குத் தெரியும். இது இந்தக் கழைக் கூத்தாடியைத் தயாரித்து வழங்கிய ஊடகத்துறையில் மகாராசர்களுக்கும் தெரியும்.

* எனவே எந்தவிதமான அரசியலும் தெரியாததால் எசமான் நியமனம் பெற்றுத் தருகிற எந்த அரசியல் கட்சியிலும் தேர்தலில் நிற்க இயலும். எசமான் எழுதுவித்துக் கொடுப்பதைத் தனக்கு நினைவில் இருக்கிற விதமாகப் பொது மேடைகளிலும் தொலைக்காட்சிக் கமராக்களுக்கு முன்னாலும் பாராளுமன்ற நாற்காலிகளின் முன்னாலும் பேச இயலும். கொட்டாவி விட்டாலும் அது முதன்மையான செய்தியாக மக்களுக்குப் பரிமாறப்படும். இதைவிட இலகுவாக அரசியல் நடத்த எவருக்கும் வாய்க்குமா?

* தெரிய வேண்டியதெல்லாம் இரண்டே விடயங்கள் தான். ஒன்று எசமானர் எதைப் பேசுமாறும் எதற்காக எப்போது கையுயர்த்துமாறும் வேண்டுகிறார் என்பது. அது எளிது. மற்றது, எவராவது தன்னை மிஞ்சிய நல்ல பிள்ளையாக எசமானரின் கண்களுக்குத் தெரியாமல் கவனித்துக் கொள்வது. அது சிறிது கடினம். ஆனால் இயலும்.

* இப்போது ஆளுங் கட்சி தவிர்ந்த எந்தக் கட்சியில் இருந்தும் எவரும் எதையும் எப்படியும் பேசினாலும் எதற்காகக் கையுயர்த்தினாலும் உயர்த்தாவிட்டாலும் கட்சிகளால் தட்டிக் கேட்க இயலாத அளவுக்குப் பாராளுமன்ற சனநாயகம் வளர்ந்திருப்பதால், புதிய வகைமாதிரிக் கழைக் கூத்தாடியாரால் நின்ற இடத்திலேயே நின்று கரணமடிக்கவும் கட்சித் தலைவரின் முதுகுக்குப் பின்னால் கையையுயர்த்தவும், கட்சி தாவாமலே தாவலின் மூலம் பெறக் கூடிய அனைத்தையும் பெறவும் இயலுமாயுள்ளது. அதனால் இந்தக் கழைக் கூத்தாடி தாவவே மாட்டார் என்று சொல்ல முடியாது. ஊடக எசமானும் நாட்டின் எசமானும் சைகைகளைக் காட்டினால் அவர் எதையும் எப்போதும் செய்வாரென்று சொல்ல முடியும்.

## திருடர் பிடித்துக் கொடுக்கும் புதிய பொலிஸ்காரன் முன்னாள் தொழிற்சங்கவாதி ஓ.ஏ. இராமையா

திருடர்பிடித்துக் கொடுக்கும் புதிய பொலிஸ் காரன் வேலையை ஆரம்பித்திருக்கும் முன்னால் தொழிற்சங்க வாதி ஓ.ஏ.இராமைய்யா அன்மையில் அட்டன் பிரதேசத்தில் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் ஒன்றின் போது வந்திருந்த இழைஞர்கள் சரமாரியாக கேல்விகளை கேட்டப்போது திக்குமுக்காடி போய் அங்குவந்திருந்த இளைஞர் ஒருவா் கூட்டு ஒப்பந்தத்தின் போது முதலாழி மார் சம்மேலனத்திடம் இருந்து காசு வாங்கி ஏமாற்றிய உங்கள் போன்ரவா்கள் அம்பலப்பட வேண்டும் என்று கூறியதற்கு உணா்ச்சிவசப்பட்டு ஓ.ஏ.இராமைய்யா கீழ் கண்டவாறு கூறினாா் பொலிஸ்காரா்களும் அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி அதிபா் அட்டன் பொஸ்கோ கல்லூரி அதிபா் ஆகியோா் லட்ச கணக்கில் லஞ்சம் வாங்குவதை தடுக்காமல் கூட்டு ஒப்பந்தத்தின் போது நாங்கள் வாங்குவதை மாத்திரம் ஏன் விமா்சிக்கினறீா்கள் என்று கூறினாா் இதைக்கேட்ட மாணவன் ஒருவன் தனது கச்சையை கழட்டி தனது முகத்தை மூடிக்கொண்டாா் என்று கூறிய போது மற்றும் ஓரு நன்பா் தனது முகத்தை மூடிக் கொள்வதற்காக மற்றவா்களின் கச்சையையும் சோ்த்தல்லவா கழட்டி விட்டான் என்று கூறினாா்.

## யாழ்- மேட்டுக்குடிச் சிந்தனையும் வன்னி மக்களின் அவல வாழ்வும்

வன்னி மக்கள் பட்டு வந்த அவலங்களும் கண்டுகொண்ட பேரழிவுகளும் விபரிக்க இயலாதவை. பேரினவாத ஒடுக்குமுறையும் தவறான போராட்ட மார்க்கமும் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட வன்னி மக்களை வெறுவிலிகளாக்கி வனாந்தரத்திற் திக்கற்ற நிலைக்கு உள்ளாக்கி விட்டுள்ளது. இவ்வாறு துயரங்களையும் சோகங்களையும் சுமந்தவாறே தமது இழந்த வாழ்வை மீட்பதற்குச் சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்நோக்கி நிற்கும் மக்களுக்கு உதவவோ கைதூக்கி விடவோ வாய்ப்புவசதிகளும் செல்வாக்கும பெற்ற வடபுலத் தமிழர்கள் என்போர் முன்வருவதாக இல்லை. ஏதோ பாவத்திற்கு இரங்கிக் கிள்ளிப் போடுவதாக அங்கொன்று இங்கொன்று செய்யப்படுகிறதே தவிரத், திட்டமிட்ட பரந்தளவிலான எத்தகைய வேலைத் திட்டத்தையும் தயாரிக்க எவரும் முன்வருவதாக இல்லை. எதிலும் பிடுங்கினது லாபம் என்ற மனோநிலைதான் குடாநாட்டு வசதி வளம் கொண்டோரிடம் காணப்படுகிறது.

குடாநாட்டில் யுத்தம் முடிந்த ஒரு வருடத்துக்கு மேலான காலப்பகுதியில் எத்தனை கோவில்கள், கோபுரங்கள், சுற்று மதில்கள், மூலத்தானங்கள், வசந்த மண்டபங்கள் பெருமெடுப்பிலான கலியாண மண்டபங்கள் ஆங்காங்கே வேக வேகமாக எழுந்து வருகின்றன. கடைக் கட்டத் தொகுதிகள், முதலீட்டு நிலையங்கள், வர்த்தக வியாபார விரிவாக்கங்கள் எத்தனை எத்தனையாக வளர்ந்து வருகின்றன. அரசாங்கம் அபிவிருத்தி என்ற பெயரில் கண்கவர் பம்மாத்துக்கள் காட்டி நிற்க, உயர் வர்த்தக மேட்டுக்குடித் தமிழர் எனப்படுவோர் தத்தமது சொத்துச் சுகபோகப் பெருக்கங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கே வீழ்த்தப்பட்ட மனிதர்கள்– தமிழர்கள் --பற்றி அத்தகையோரிடம் எத்தகைய அனுதாபத்தையும் காண முடியவில்லை.

தமிழ் இனம், தன்மானத் தமிழர்கள், "பொங்கு தமிழர்கட்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு" என்றெல்லாம் கூவியவர்கள் இன்று எங்கே போய்விட்டார்கள்? தமிழர்களைத் தமிழர்களே ஆள வேண்டும் என சண்டமாருதம் கிளப்பியவர்கள் இன்று தமிழர்களுக்குத் தமிழர்களே உதவ வேண்டும் என்று பேசாது ஓடி ஒளிந்து கொண்டது ஏன்? தமிழ் இரத்தம் கொதிப்பதாகக் கூறி இன உணர்வேற்றி முள்ளிவாய்க்கால் வரை ஏழை உழைப்பாளர்களைத்– தமிழர்களை –அழைத்துச் சென்று கொள்ளி வைக்க வழிகாட்டியவர்களின் சகபாடிகள் தான் இன்று வன்னி மக்களுக்குப் புறமுதுகுகாட்டி நிற்கிறார்கள்.

வன்னி மக்களினதும் குடாநாட்டின் இழப்புகளுக்கு உள்ளான மக்களினதும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்பனவற்றின் ஊடக மறுவாழ்வு ஏற்படும் வரை, எந்தப் பெரும் திருவிழாவும் வேண்டாம், கோவில் கட்டிடங்கள் வேண்டாம், எந்த ஆடம்பரத் திருமணங்களும் வேண்டாம், பணச் செலவு மிக்க நிகழ்வுகள் எதுவும் வேண்டாம் அத்தனை பணத்தையும் பொது நிதியமாக்குவோம். பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்து அளிப்போம் என எந்தவொருவரும் அல்லது தாமே தமிழரின் ஆதிக்க அரசியல் பிரதிநிதி எனத் தேர்தலில் வெற்றி பெற நிற்கும் கட்சிகளும் முன்வரத் தயாராக இல்லை. அல்லது நாடு கடந்த அரசை உருவாக்கி அதனையே தமது மூலதனத் திரட்சியாக்கி வரும் ஆண்ட பரம்பரை வாரிசுகள் வன்னி மக்களுக்கு உதவ முன்வர வில்லை.

இவை ஏன் என்பதைத் தமிழ் உழைப்பாளர்களான தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சாதாரண மக்கள் புரிந்து கொள்வது அவசியம். இங்கே தான் பழமைவாத மேட்டுக்குடிப் பிற்போக்குக் கருத்தியலும் சிந்தனையும் முன்னெழுந்து நிற்கிறது. ஆண்ட பரம்பரைக் கருத்தியல் இவர்களை வழி நடத்துகின்றது. இன மொழிப் பாசம் என்பவை போலியானவையாகும். வர்க்க வேறுபாடு, சாதி வேறுபாடு, வன்னியான், மட்டக்களப்பான் என்பன போன்ற யாழ்ப்பாண மேட்டுக்குடிச் சிந்தனையும் செயற்பாடுமே இத்தனைக்குப் பின்பும் முன்னெழுந்து நிற்கின்றது. இத்தகைய கருத்தியலும் அதன் சிந்தனை நடைமுறைகளும் கண்ணோட்டங்களும் அடித்து வீழ்த்தப்படாத வரை, தமிழ்த் தேசிய இனத்திற்கு விமோசனமோ விடுதலையோ கிடைக்கமாட்டாது. அகத்திலும் புறத்திலும் ஆயிரம் மாநாடுகள் கூடினாலும், யாழ் மேட்டுக்குடி ஆதிக்கக் கருத்தியலை அரசியலிலும் சமூகத்திலும் பலவீனப் படுத்த வேண்டும். தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள உழைக்கும் வர்க்கம் தன்னைப் பொத்தியுள்ள, இறுகிப் போன மூடிகளை உடைத்தெறிய முன்வர வேண்டும்.

இதுவே வன்னி மக்களைப் பற்றிய யாழ் மேட்டுக்குடிச் சிந்தனையை உடைத்து மனித நேயத்தையும் மறுவாழ்வையும் முன்னெடுக்க வுள்ள வழிமுறையாகும். இதனைத் தமிழ் இளந்தலைமுறை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இனிமேலும் இரண்டாயிரம் ஆண்டு காலப் பழைய, இற்றுப் போனவற்றை இனம் மொழி மதத்தின் பேரால் சுமந்து கொண்டு ஆதிக்க அரசியல்வாதிகளின் வாகனமாக இளந் தலைமுறையினர் குருட்டுத்தனமாக வழிநடக்கக் கூடாது. "கேள்விகள் எழுப்பி உண்மைகளைக் காண இளைஞர் யுவதிகளே முன்வாருங்கள்" என்பதே இன்றைய அறைகூவலாகும்.

## நீங்கள் இதயும் சொல்லுவீங்க இதுக்கு மேலயும் சொல்லுவீங்க

தொகுப்பு வா.போ. இளிச்சவாயன

தோட்டத் தொழிலாளரின் குடியிருப்புகளும் வேலைத்தளமும் வெவ்வேறு இடத்தில் இருக்க வேண்டும்.

முத்து சிவலிங்கம் பிரதி அமைச்சர

போலி வாக்குறுதிகளை வழங்கி மக்களை நாம் திசை திருப்பவில்லை.

மறைந்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் அமரர் சந்திரசேகரன் கூட நம்மால் இந்தப் பாரத்தைச் சுமக்க முடியாது. அது இ.தொ.காவால் தான் முடியும் என்பதை ஒத்துக் கொண்டுள்ளார்

இ.தொ.கா.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் இதுவரையில் செய்தவை என்ன? நிருபமா ராவ் கேட்டுச் சொல்ல வேண்டும்.

மனோ கணேசன

இ.தொ.காவுடன் இணைந்து செயற்படுவதில் அர்த்தமில்லை. பாராளுமன்றத்தில் தனித்து செயற்படப் போகிறேன்

வீ.இராதாகிருஸ்ணன் எம்.பி

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இந்திய வம்சாவளி சமூகத்தைச் சேர்ந்த பலர் தடுப்பு முகாம்களில் வாடுகின்றனர்

இ.தொ.கா.

ம.ம.மு ஏகமனதாக தீர்மானித்தால் இணைவது தொடர்பில் ஆராயலாம். வீ. இராதாகிருஸ்ணன் எம்.பி.

ம.ம.முன்னணி தமது அங்கத்தவர்களுக்கு எப்போதும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்ததில்லை.

சாந்தினி சந்திரசேகரன

ஜனாதிபதியுடன் முரண்பாடுகளை வளர்க்காமல் மலையக மக்களுக்கு உரிமைகளை பெறுவதே புத்திசாலித்தனம் பி.திகாம்பரம் எம்.பி.

பெருந்தோட்ட மக்களுக்குச் சேவை செய்வதில் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியிலேயே பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை அபிவிருத்தி கண்டு வருகின்றது.

அருள்சாமி- அமைப்பாளர

ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்ற கட்டுப்பாடு, அரசியலமைப்பில் இருப்பதனால் 3வது தடவையாக அவர் வேட்பாளராகப் போட்டியிட முடியாது என்பதால் அவரின் உரிமை பறிக்கப்படுவது மட்டுமன்றி மக்களின் வாக்குரிமையையும் பறிக்கப்படுவதாகும்.

முத்து சிவலிங்கம் பிரதி அமைச்சர்.

## ஜெயத்திடம் கேளுங்கள்

**கேள்வி:** மலையக மாணவர்கள் சிலர் தற்கொலை செய்து கொள்கிறார்களே, இதைத் தவிர்க்க முடியாதா?

ம. யமுனா- பிரதான வீதி புசல்லாவை

**பதில்:** நிச்சயமாக முடியும். வாழ்க்கையின் மீதான நம்பிக்கை சவால்களை வெற்றிகரமாக எதிர் கொள்ளுதல். மீண்டும் மீண்டும் முயற்சி செய்தல் ஆகியவை குறித்துப் பாடசாலைகளில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். மாணவர் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள் விரிவான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் விட, மலையக மாணவர்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். தமது சமநிலை ஆளுமையினை விருத்தி செய்து கொள்ள வேண்டும். உடல் ஆற்றல் (விளையாட்டு உடற் பயிற்சி மூலம்), உள ஆற்றல் (அறிவு சிந்தனை கற்றல் மூலம்), மனவெழுச்சி ஆற்றல் (கலந்துரையாடல், சிந்தனை, விடைதேடல் மூலம்), சமூகத் திறன்கள் (கலை பண்பாட்டு வேலைகள், அரசியல் ஈடுபாடு செயற்பாட்டுக்குரிய குழுக்களை உருவாக்கும் பயிற்சியளித்தல். விஜயங்களை மேற்கொள்ளுதல் மூலம்), மனச்சோர்வை ஏற்படுத்தும் இந்திய சினிமா தொலைக்காட்சி நாடகங்களை முழுதாக நிராகரித்தல். வெற்றி பெற்ற ஆளுமைகளைத் தேடிக் கற்றல், பார்வையிடல். உதாரணம்: சேகுவேராவின் இறுவட்டு, லெனின் வாழ்க்கை வரலாற்றைக் காட்டும் இறுவட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். மனித வாழ்வின் உண்மைகளை ஆழமாகக் கற்று மனப் பலம் பெறும் போது மன விரக்தி களையப்படும்- வாழ்வின் மீதான நம்பிக்கை தோன்றும். இதற்கு எல்லாம் அடிப்படையாக வாழ்வுக்குரிய சிந்தனை, செயல், இலட்சியம் என்பன உறுதியாகப் பின்பற்றப்படுதல் அவசியமாகும்.

**கேள்வி:** இந்திய சினிமா குப்பைகள் பெரும்பாலும், மலேசிய நாட்டில் வெளியிடப்படுகின்றன. அதைவிட நடிகைகளின் ஆடைக் குறைப்பு நடனங்களும் அங்கு தான் இடம் பெறுகின்றன. விசேட காரணங்கள் உள்ளனவா? எஸ். ரவி. காவத்தை

**பதில்:** இதற்குப் பல காரணங்கள் உள்ளன, ரவி, அங்கு ஆடைக் குறைப்பு நடனத்துக்குச் சென்றிருந்த நடிகையும், அவரின் தாயாரும் பாலியல் ரீதியாக, வியாபாரத்துக்கு உள்ளான செய்தியை நமது நாட்டுப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தமையை அறிவீர்கள். மலேசிய நாட்டுத் தமிழ் மக்களின் பண்பாடு குறித்து அந் நாட்டு எழுத்தாளர் மு. வரதராசு பல நூல்களில் எழுதியுள்ளார். கடந்த வருடம் இங்கு வந்திருந்த போது மேடைகளிலும் தெளிவாகக் கூறினார். மலேசிய தமிழ் மக்களின் பண்பாட்டை உயர்த்துவது மிகவும் கடினமான பணியாகவுள்ளது. சாதி, மதம், பிற்போக்கு, அடிதடி எனப் பட்டியல் நீண்டு, செல்லுகின்றது. அங்குள்ள மேட்டுக்குடிகளும் பணக்காரர்களும், பல நோக்கங்களுக்காக இந்தியா செல்கின்றனர். அங்கிருந்து சினிமா நடிகை, நடிகர்களை வரவழைத்து 'லாபம்' பெறுகின்றனர். பண்பாட்டில் தாழ் நிலையிலுள்ள மக்களைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்திருப்பதற்கு இது சிறந்த உபாயமல்லவா? உலகத் தமிழ்க் காவலன் மு. கருணாநிதிக்கும் மலேசிய தமிழர் காவலன் சாமிவேலுக்கும் இவை விளங்காமலா இருக்கும்? இந்த வியாதி இலங்கையிலும் வேகமாகத் தொற்றி வருகிறது.

**கேள்வி:** பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் மலையக மக்கள் முன்னணியின் தலைவராகிவிட்டால்?

மு. பெரியசாமி. தலவாக்கலை.

**பதில்:** மலையக மக்களுக்கு நன்மை ஏதும் கிடைக்கப் போவது இல்லை. நிச்சயமாக இ.தொ.காவுக்கு நன்மை ஏற்படும். அவருக்கு அமைச்சுப் பதவி ஏதாவது கிடைக்கும் வரை அவர் எங்கே இருப்பார் எங்கே போவார் என்பதைக் கூற முடியாது.

**கேள்வி:** அண்மையில் மிகவும் இரசித்து வாசித்த கவிதையொன்றைக் கூறமுடியுமா? ஆர். லோகதாசன். மாத்தளை

**பதில்:** மொழி பெயர்ப்புக் கவிதையொன்று. கோஸ்டாரிக்கா கவிஞர் ஜனினா பெர்ணண்டஸ் எழுதிக் கவிஞர் சிவசேகரம் மொழிபெயர்த்தது.

*புத்தகங்களிலான மதிலொன்றின் நடுவே*
*வன்முறைச் சொற்களஞ்சியமொன்றை*
*நிர்மாணித்தபடி*
*கோட்பாட்டாளர்கள்*
*தமது நேர்த்தியான விசாரணைகளை*
*வகுக்கின்றனர்.*
*ஆட்சிக் கவிழ்ப்பு*
*புரட்சி*
*விடுதலை*
*வெளியில் அடியெடுத்து வைக்காமலே!*

"செயலூக்கமற்ற புத்திஜீவிகட்கு" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இக் கவிதை "சாய்வு நாற்காலி" எழுத்தாளர்களுக்கும் வாய்வீச்சுப் பெருச்சாளிகளுக்கும் சரியான எதிரியை அடையாளங்காண முடியாத அறிவிலிகளுக்கும் பொருந்துமல்லவா.

**கேள்வி:** அட்டன் தமிழ் சங்கம் மத்தியமா காண சபையின் தமிழ் சாகித்திய விழாவுக்கு இப்பொழுதே வாழ்த்துத் தெரிவித்து விட்டதாமே?

எஸ். ரவி. அட்டன்

**பதில்:** பந்திக்கு முந்து படைக்குப் பிந்து. இது பலரின் அடிப்படை வாழ்வியல் கோட்பாடு. ஏன் விருந்துக்கு முந்து வேலைக்குப் பிந்து இப்படியும் கூறலாம். "விழா" தினத்தன்று நடப்பதைப் பொறுத்திருந்து பாருங்கள். சிரித்து மகிழுங்கள்.

**கேள்வி:** உலகப் புகழ் பெற்ற கல்வியியலாளர் பவ்லோ பிரேய்றி பற்றிக் கூறுங்கள். அவர் கூறிய வாசகங்களுள் உங்களுக்குப் பிடித்தது...

மு. குமாரசிங்கம். பசறை

**பதில்:** 1921ம் ஆண்டு செப்டம்பர் 19ம் திகதி பிரேசில் நாட்டில் பிறந்த பிரேய்றி, தனது 76வது வயதில், 1997ம் ஆண்டு மே 24ம் திகதி மரணமடைந்தார். கல்வி அறிவற்ற உழைக்கும் மக்களை விழிப்படைய செய்ய வேண்டும், அவர்களைப் பேசச் செய்ய வேண்டும் என உறுதி கொண்டு செயலில் ஈடுபட்டார். அவரைப் பயங்கரவாதி என்று அந்நாட்டின் அரசாங்கம் சிறையில் அடைத்தது. அதன் பின் பொலிவியா சென்று செயற்பாடுகளை முன்னெடுத்த பின்னர், சுவிஸ்லாந்து, மொசாம்பிக் போன்ற நாடுகளில் எழுச்சி மிகு பணி செய்து, நாடு திரும்பிய பின், தொழிலாளர் கட்சியில் இணைந்து செயற்பட்டார். அவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது வாசகங்களில் எனக்குப் பிடித்தது:

"என்னைக் கல்விமான் எனப் பலரும் விளக்கம் செய்து, வியாக்கியானம் எழுதியுள்ளனர். ஆனால் இரண்டாவது நிலையில் தான் நான் கல்விமான். ஆனால் முதலில் அவசியமான எனது பணி அரசியல்வாதியாகச் செயற்படுவது" ஆகும்.

நமது கல்விமான்கள்?

**கேள்வி:** மலையகத்தின் தந்தை என ஒரு சிலரைக் குறிப்பிடுகின்றனர். உண்மையில் மலையகத் தந்தை யார்?

க. சுப்பிரமணியம். கொட்டகலை

**பதில்:** மலையகத்தின் அம்மாவாக இருக்கின்ற தொழிலாளர்களிடம் இதுபற்றிக் கேட்டால் அவர்கள் நிச்சயமாக கவ்வாத்துக் கத்தியையே தூக்குவார்கள்.

**கேள்வி:** மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அவசரகால சட்டத்துக்கு ஆதரவாகத்தானே வாக்களிக்கின்றனர். க. சுமதி. மாத்தளை

**பதில்:** அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றவர்கள் விடுதலை யாகிவிட்டால், தமது பதவிகளில் மண் அள்ளிப் போட்டுவிடுவார்கள், தனக்கு எதிராக, மக்கள் சார்பில் யாரும் செயற்படக் கூடாது என்பதற்காக தொடர்ந்து தாத்தா, பேரன், மாமி, மச்சான், அண்ணன் ஆகியோர் வாக்களிக்கின்றனர். அந்த துரோகிகளுக்குத் தான் மக்களும் வாக்களிக்கின்றனர்.

## ஒரு மலையக மாணவனின் டயறி

- எஸ். உதயசூரியன்

ஆகஸ்ட்

மூன்றாவது வாரம்:

கடுமையான மழை பெய்தது. குளிரில் நடுங்கியபடி கொழுந்து பறித்தார்கள். செவ்வாய்க் கிழமை அம்மாவுக்குத் தேநீர் கொண்டு போனேன். தேநீர் போத்தலைப் பிடித்தவாறே, பல நிமிடங்கள் இருந்தார். கைகள் ஊறிப் போய் வெள்ளை நிறமாகக் காணப்பட்டன. எனக்கு முடிந்தளவு தேயிலைக் கொழுந்துகளைப் பறித்துப் போட்டேன். அம்மாவை விட வயது கூடியவர்களும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். மழை ஈரம் காரணமாக அட்டைகள் எங்கும் காணப்பட்டன. சில வேளைகளில் நெஞ்சு, கழுத்து, காதுகளிலும் அட்டை கடித்த காட்சிகளைப் பார்த்துள்ளேன். இந்தக் கடுங் குளிரில் மாலை வரை உழைக்கும் தொழிலாளர்களின் நிலையை எண்ணி வருத்தமடைந்தேன்.

இரட்டை வங்கியைக் கடந்தால் பெரிய துரையின் பங்களா தெரியும். என்ன வசதி, நீச்சல் தடாகம், பூந்தோட்டம், மரக்கறித் தோட்டம். முப்பது அறைகள் கொண்ட பங்களா. வேலை செய்யப் பத்துத் தொழிலாளர்கள், சமைப்பதற்கு 'அப்பு', கார், ஜீப், மோட்டார் சைக்கிள் நிறுத்த கராஜ்...... சொர்க்க லோகம் ஒன்று இருப்பதாகக் கற்பனை செய்வார்கள். எங்கள் தோட்டத்துத் துரை பங்களாவைப் பார்த்து உண்மையான சொர்க்கத்தைக் காணலாம். ஆனால் இலகுவாக உள்ளே போக முடியாது. அனுமதி கிடையாது. துரைக்கும் துரைசானிக்கும் உரியது அது.

இவ்வாறு எத்தனை துரைமார்கள் சொகுசு வாழ்வை அனுபவிக்கின்றனர். சின்னத்துரை, பெரிய கிளார்க், சின்ன கிளார்க், பீல்ட் ஓபிசர், கணக்கப்பிள்ளை, சுப்பவைசர் எனப் பட்டியல் நீளுகின்றது.

மாதச் சம்பளம், ஓவர் டைம் கொடுப்பனவு, நல்ல தேயிலைத் தூள், விறகு, தண்ணீர், இவற்றையெல்லாம் அனுபவிக்கின்றார்கள். ஆனால் தொழிலாளர் காலை முதல் மாலை வரை உழைத்தாலும் கால் வயிற்றையேனும் நிரப்பிக் கொள்ள முடியாத நிலை. இதையெல்லாம் யோசித்தவாறே வீட்டுக்கு வந்தேன். இந்த வாரத்தில் பல விடயங்களை யோசித்தேன். இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரணம் விதியா? அல்லது சதியா? இதனை மாற்றியமைக்க என்ன செய்யலாம்? பொதுவுடைமைதான் என்ற நூலை மீண்டும் மீண்டும் வாசித்தேன்.

நான்காம் வாரம்:

மழை தொடர்ந்து பெய்தது. கலகாவிலிருந்து மாமா வந்திருந்தார். புப்புரஸ்ஸக்கு அண்மையிலுள்ள தோட்டம் ஒன்றை ஏலம் போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். முன்னர் இவ்வாறு தான் நட்சா திட்டத்தின் கீழ் தோட்டங்கள் மூடப்பட்டு இனரீதியான குடியேற்றங்கள் நிகழ்ந்தது எனக் கூறினார். முதலில் தொழிலாளர்கள் தேயிலையை நாட்டிய லூல்கந்தூ தோட்டம் கூட மூடப்படுமளவிற்கு நாசமாக்கப்பட்டுள்ளது. அங்கு இருந்த ஜேம்ஸ் டெயிலரின் ஞாபகார்த்த சின்னங்கள் கூட அகற்றப்பட்டு விட்டன. படிப்படியாகத் தோட்டங்கள் மூடப்படுகின்றன. மலையகத்தில் வாழும் மக்களின் இருப்பை இல்லாமல் செய்வதற்கான இனவாதிகளின் திட்டமே இதுவாகும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் ஓரணியாய்த் திரண்டு போராடினால் தான் விடுதலை கிடைக்கும் என்பதை மாமா வலியுறுத்திக் கூறினார். மாமா முன்பு செங்கொடி சங்கத்தில் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்டவர். அச்சகத்தை நாசப்படுத்தியவர்கள் பற்றியும் பேசினார். மாமாவை வரவேற்பதற்காக அப்பாவும் கொழும்பிலிருந்து வந்திருந்தார். அப்பாவுக்கும் மாமாவுக்கும் பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது. இ.தொ.கா. ம.ம. முன்னணி பற்றி அப்பா பேச, மாமா அதற்கு மறுப்புத் தெரிவித்துப் பல விடயங்களைக் கூறினார். இவ்விரு தொழிற்சங்கங்களும் நடந்து கொண்ட விதத்தைத் தொழிலாளர் சம்பள உயர்வு, மல்லியப்பூ சந்தியில் கைகோர்த்துக் கொண்டமை, மேல் கொத்மலைத் திட்டம், போன்றவற்றில் நடைபெற்ற பணப் பரிமாற்றம் குறித்துப் புட்டுப் புட்டு வைத்தார் மாமா. அப்பாவுக்குப் பல இடங்களில் பதில் கூற முடியாமல் போய்விட்டது. அவர்கள் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்தார்கள்.

செப்டம்பர்

முதல் வாரம்:

அடுத்த வாரம் பாடசாலை தொடங்குவதினால் உடுப்பு, புத்தகங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி வைத்தேன். மழை ஓரளவு குறைந்திருந்தாலும், தூறல் நிற்கவில்லை. சனிக்கிழமை அட்டன் சென்றேன். ரவியின் வீட்டில் மதராசபட்டணம் படம் பார்த்தேன். பார்க்கக் கூடியபடமாக இருந்தாலும் அதிகமான கற்பனை இடம்பெற்றிருந்தது. அன்று வெள்ளைக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த மக்கள் இன்று இந்திய முதலாளிகளால் மிகவும் மோசமாக அடக்கப்படுகின்றார்கள். சலவைத் தொழிலாளி ஒருவன் காதலியின் நினைவில் பல சொத்துக்களை ஆக்கி வைத்திருக்கின்றான். அச் சொத்துக்கள் அவனுக்கு எப்படி கிடைத்ததோ தெரியவில்லை. படம் எடுத்தவர் ஒரு வர்க்கத்தின் பிரதிநிதி. அதற்கேற்ப தானே படமும் அமையும். நானும் ரவியும் நிறைய நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

இரண்டாவது வாரம்:

திங்கள் பாடசாலை ஆரம்பமானது. முதல் நாள் என்பதால் பாடம் ஒன்றும் நடக்கவில்லை. வகுப்பறையை ஒழுங்கு செய்தல், சுற்றாடலைக் கூட்டித் துப்பரவு செய்தல் எனத் தொடர்ந்து வேலைகள் நடைபெற்றன.

நண்பன் குமார், கோகிலம் சுப்பையா எழுதிய 'தூரத்துப் பச்சை' நாவலைக் கொண்டு வந்திருந்தான். வகுப்பில் அனைவரும் மாறி மாறி வாசித்தோம். சிறந்த ஒரு பதிவாக அதனை அடையாளங் காட்டினர்.

ஞாயிறு அன்று ரொசல்லை சென்றோம். 'மலைகளை வென்ற மானுடம்' என்ற நினைவு நூல் வெளியிடப்பட்டது. மனித வாழ்வின் அர்த்தத்தை மேலும் புரிந்து கொண்டேன். எனது வாழ்க்கையும் அதைப் போல அமைக்க வேண்டும் எனத் திடசங்கற்பம் கொண்டேன்.

மூன்றாவது வாரம்:

பாண் விலை கூட்டப்பட்டது. தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் இன்னொரு செயற்பாடு.

நாசமாப் போனவனுங்க பாண் விலையைக் கூட்டிட்டானுங்க" என்று எல்லோரும் கூறினார்கள். இது உண்மையாக, அவர்கள் அனைவரும் நாசமாய்ப் போனால்..... கற்பனைகளுடன் இருந்தேன்.

**கேள்வி:** ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புகளில் பாடம் நடக்காமல் இருக்கின்றதே காரணம் என்ன? அ. பிரபா. அட்டன்

**பதில்:** எனக்குத் தெரிந்த ஆசிரியை ஒருவரிடம் கேட்டேன். 6ம் நம்பர் ஜொலி நம்பர் என்றும், 7ம் நம்பர் வாழ்க்கைக்கு உதவாது என்றும் 8ம் நம்பர் போராட்டம் என்பதால் இந்த வகுப்புகளில் பாடம் நடத்துவது பொருத்தமில்லை என்றும் அங்கு செல்லுவது 'தீட்டு மாதிரி' என்றும் கூறினார். 9ம் வகுப்பு 10,11 பற்றிக் கேட்டு எழுதுகிறேன். ராசி..... வாசி, ராசி........ வாசி, ராசி........ வாசி.

**கேள்வி:** சின்னத்திரை நடிகைகளைச் சிரிக்க வைக்கவே முடியாதா?

ம. உதயா- சிறிமெட்டிய

**பதில்:** உதடுகள் இரண்டையும் வெட்டியெறியுங்கள். சாகும் வரை சிரித்துக் கொண்டே இருப்பார்கள். தயவு செய்து சின்னத்திரை விடயங்களை நம்மிடம் கேட்காதீர்கள்.

புதிய பூமி

சுற்று 17 யூன் - யூலை 2010 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 132

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

# போபால் அனர்த்தமும் கரடியனாறு வெடிப்பும்

கரடியனாறு பொலிஸ் நிலைய வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வெடி பொருட்கள் வெடித்ததனால 25ற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொலலப்பட்டவர்கள் எண்ணிக்கை 60 என்றும் 40 என்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 100ற்கும் மேல் என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த வெடிபொருட்களை பாதை நிர்மாணப் பணிகளுக்காக சைனீஸ் ஓவர் சீஸ் கோப்ரேசன் என்ற சீன நிர்மாண கம்பனியும் வீ.வீ.கருணாரத்ன பிரைவேட் லிமிட்டட் என்ற இலங்கை கம்பனியும் கரடியனாறு பொலிஸ் நிலைய வளவில் வைத்திருந்தன. பாதை நிர்மாணப் பணிகளை மேற்படி சீனக் கம்பனி முன்னெடுத்து வருவது தெரிந்தது.

அந்த வெடி பொருட்கள் பாதுகாப்பற்ற வகையில், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமல் கவலையீனமாக வைக்கப்பட்டிருந்தன என்பதும் அவற்றை வெளியில் எடுத்துச் செல்கின்றன போதும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும் வெளிப்படையான உண்மையாகும். இந்தக் கவலையீனமான பொறுப்பற்ற தன்மையினாலேயே வெடிப்பு நடைபெற்றுள்ளதென்பதும் சொல்லித் தெரிய வேண்டி விடயமாக இல்லை. எனவே அந்த வெடிப்பினால் கொல்லப்பட்டவர்களினதும் காயமடைந்தவர்களினதும் குடும்பங்களுக்கும் சொத்துக்களை இழந்தவர்களுக்கும் சீனக் கம்பனியும் இலங்கைக் கம்பனியும், பொலிஸ் நிலைய வளவில் வைக்கப்பட்டிருந்ததால் இலங்கை அரசும் பொறுப்புக் கூற வேண்டும். இத்துடன் உலகமயமாதல் சூழ்நிலையின் கீழும், யுத்தத்திற்கு பிந்திய இலங்கைச் சூழலிலும் பல்தேசியக் கம்பனிகளினதும் மேலாதிக்க செயற்பாடும் அதிகரித்துள்ளன. அவற்றின் இலாப நோக்கம், சுரண்டல் என்பவற்றினால் இலங்கையின் பாதுகாப்பு, சூழலியல் மற்றும் சாதாரண சட்டதிட்டங்களையும் நடைமுறைகளையும் மீறிச் செயற்படும் போக்கிலிருந்து மக்களைப் பாதுகாக்க பூரணமான கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் இதுபோன்ற அழிவுகளுக்குள்ளாகி மக்களும், சொத்துக்களும் சூழலும் அழிய வேண்டியதுதான்.

கரடியனாறு வெடிப்புச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாவை நட்டஈடாக வழங்குவதென இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. இது ஒரு சில்லறைத்தனமான தீர்மானம். பல்தேசிய கம்பனிகளுக்கும், அவற்றுக்கு அடிமையாகியுள்ள அரசுகளுக்கும் மக்களின் உயிர்கள் எப்போதுமே பெறுமதியானவையாக தெரிவதில்லை.

அந்த வெடிப்புச் சம்பவம் பற்றி விசாரித்ததாகத் தெரிவித்து பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள கருத்தின் படி இதில் நாசகார நடவடிக்கைகள் எதுவும் இல்லையெனக் கூறப்பட்டுள்ளது. அங்கு பணியில் ஈடுபட்டிருந்த சீனப் பொறியியலாளர்கள் இருவர் வெடிப்பில் கொல்லப்பட்டதனால் சீனா பிரத்தியேகமான புலனாய்வுகளை செய்யுமென்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது. இதில் ஏனைய வெளிநாட்டுச் சக்திகளின் சதி இருக்கிறதா என்பது பற்றி சீனத் தூதரகம் கவனம் செலுத்தலாம். இந்திய ஆளும் வர்க்கங்கள் சீனாவைப் பற்றி ஆராய்வதில் கவனஞ் செலுத்தலாம்.

இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் கவலையீனமான பல்தேசியக் கம்பனிகளின் நடவடிக்கைகளிலிருந்தும் மேலாதிக்கச் சக்திகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்வது அக்கறைக்குரிய விடயமாகிறது. சூழல் பாதுகாப்பு மற்றும் அபாயகரமான பொருட்களை களஞ்சியப்படுத்தல், தொழிற்சாலைகள் போன்ற பல சட்டங்கள் இருந்தும் மக்களுக்கு தீங்கு விளைவிக்காதிருக்கும் வகையில் நடவடிக்கைகளை கம்பனிகள் எடுப்பதில்லை. அவை இலாப நோக்கலொன்றையே கருதி செயற்படுவதுண்டு. குறிப்பாகப் பல்தேசியக் கம்பனிகள் அதிநவீன தொழில்நுட்பரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இரசாயன வாயு, நீர்க் கசிவுகள், வெடிப்புக்கள் இடம்பெறாது பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதில்லை. மேல்மாகாணத்தில் இருக்கும் தொழிற்சாலைகளில் ஏறக்குறைய ஆயிரம் தொழிற்சாலைகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. என்று அரசாங்க அறிக்கைகளே தெரிவிக்கின்றன.

கரடியனாற்றில் பாதைப்பிற்கென கொண்டுவந்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்ற வெடிப் பொருட்கள் பாதுகாப்பற்ற வகையிலயே வைக்கப்பட்டிருந்துள்ளன. வெடிக்க வைக்கும் போதன்றி செலிக்கனைட், சேப்டி பியூஸ், டெட்னேற்றர் போன்ற பொருட்களை வெவ்வேறாகக் களஞ்சியப்படுத்தி வைப்பதுடன் வெவ்வேறாகவே எடுத்துச் செல்லவும் வேண்டும். என்று வெடிபொருள் பற்றிய நிபுணர்கள் கூறுகின்றனர். கரடியானாற்றில் மேற்படி பொருட்கள் ஒன்றாகக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் எடுத்துச் செல்லும் போதும் ஒன்றாகவே வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளன. இது சீனப் பொறியியலாளர்களின் கவலையீனத்தாலும் பொறுப்பில்லாத தன்மையாலும் நடந்துள்ளது. அவ்வாறு ஏற்றும்போது டெட்டனேற்றர் தானாக இயங்கியதாலேயே வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பொருட்களை சாதாரண கட்டிடங்களிலிருந்து நானூற்றிஐம்பது மீற்றர் தூரத்திலேயே களஞ்சியப்படுத்த வேண்டுமென்றும், களஞ்சியத்திலிருந்து 50 மீற்றர் விஸ்தீரத்தினுள் கைத்தொலை பேசியை இயக்கக் கூடாதென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், பிரதான வீதியோரத்தில் பொதுமக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியிலேயே கரடியனாறில் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. இதற்குப் பொலிசாரும் அரசாங்கமும் அனுமதியளித்திருந்தமை தவறாகும்.


எனவே, வெடிப்பிற்கு சீன, இலங்கை கம்பனிகளும் இலங்கை அரசும் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், அவை உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வெடிபொருட்களை களஞ்சியப்படுத்தவில்லை.

இது இந்தியாவில் போபாலில் 1983ல் யூனியன் எர்லைட் அமெரிக்கக் கம்பனியின் விசவாயு வெளியேறி பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று, பல்லாயிரக்கணக்கானோரை ஊனமடையச் செய்த அனர்த்தத்தை நினைவூட்டுகிறது. இதில் அமெரிக்க அரசும் இந்திய அரசும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிதியை வழங்க மறுத்தன என்பதும் நினைவிற்கு வருகிறது. கரடியனாறு வெடிப்பு என்பது வெறுமனே வெடிப்புச் சம்பவமல்ல. வெளியாகிய பல்தேசியக் கம்பனிகளின் ஏதேச்சதிகார நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். சில்லறைகளின்றி உரிய, போதிய நட்டஈடு கிடைக்க வேண்டும். அந்த நட்டஈட்டை, இலங்கைக் கம்பனிகளும், இலங்கை அரசும் வழங்க வேண்டும்.

அதைவிட முக்கியமானதேனில் உலகமயமாதல் என்ற பெயரில் இங்கு சுரண்டிக் கொழுக்கும் பல்தேசியக் கம்பனிகளினதும் மேலாதிக்கம் செலுத்தும் வெளிநாட்டுச் சக்திகளினதும் மக்கள் விரோத நடவடிக்கைகளிலிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். கரடியனாறு வெடிப்புப் போன்ற இன்னொரு சம்பவமேற்படாதிருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர் குழு

# 18வது திருத்தம் ஒரு கண்ணோட்டம்




இம் மாதம் எட்டாம் திகதி தற்போது நடைமுறையில் இருந்து வரும் அரசியலமைப்பிற்கு 18வது திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பெற்றது. அது 161 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றம் செல்லவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பி. - சரத் பொன்சேகாவின் தலைமையிலான ஜனநாயக தேசிய முன்னணியுமாக, எதிர்த்து 17 பேர் வாக்களித்தனர்.

ஒன்பது அம்சங்கள் கொண்ட இத் திருத்தத்தை நிறைவேற்ற அரசாங்கத் தரப்பு கடும் முயற்சிகளைச் செய்தே மூன்றில் இரண்டைத் தாண்டுவதற்கு வழி வகுத்தது. பெருந் தொகையிற் கொடுக்கல் வாங்கல்கள், பதவிகளுக்கான உத்தரவாதங்கள் போன்ற வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. அதற்காக எத்தனையோ வாகனங்களும், உலங்குவானூர்திகளும் தரையிலும் ஆகாயத்திலும் ஆங்காங்கே பறந்தன. ஆளும் தரப்பில் நடந்தவை எல்லாம் 'நன்றாகவே' நடந்தன. ஜனாதிபதியானவருக்கும் அவர்தம் பரிவாரத்தினருக்கும் யானை ஏறிய மகிழ்ச்சி. ஆனால் உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் மட்டுமன்றி முழு நாட்டிற்கும் இப் பதினெட்டாவது திருத்தம் என்பது கால் விலங்கும் கைவிலங்குமேயாகும். இதன் மூலம் தனிக் கட்சி தனிநபர் அதிகாரம் மட்டுமன்றிக் குடும்ப சர்வாதிகாரமும் நிலை பெறுவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய நடைமுறையிலான அரசியலமைப்பை அமெரிக்க விசுவாசியான ஜே.ஆர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையாகக் கொண்டு வந்தார். அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் ஜனாதிபதிகளை விட அதிக நிறைவேற்று அதிகாரங்களை உடைய ஜனாதிபதியாகவே ஜே.ஆர். அதனைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இதில் உள்ள முரண் நகையாதெனில் இதனை அன்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியானது கடுமையாக எதிர்த்தது. அதில் முன்னின்றவர்களில் ஒருவரான மகிந்த ராஜபக்ஷ தான் இப்போது அச் சர்வதிகாரத்திற்கு உரமும் வலுவும் சேர்த்திருக்கிறார். முன்பு ஜே.ஆர். ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமெரிக்காவின் முழு ஆசீர்வாதத்துடன் கொண்டு வந்தார். இப்போது மகிந்த ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமெரிக்காவை எதிர்ப்பது போன்ற ஒருவகைத் தோற்றப்பாட்டுடன் பதினெட்டாவது திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளார். அன்று ஆதரவு கொடுத்த அமெரிக்கா இன்று திருத்தத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது வேடிக்கையானதாகும். சிலவேளை ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருந்து இப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தால் அமெரிக்கா இலங்கையில் ஜனநாயகம் தழைத்தோங்க வழி பிறந்திருப்பதாகவே கூறியிருக்கும். எவ்வாறாயினும் அமெரிக்காவின் எதிர்ப்பை மகிந்த அரசாங்கம் தமது நிலைப்பாட்டிற்கான நற்சான்றிதழாகக் காட்ட மக்களைத் திசை திருப்பவே செய்யும். யார் எதிர்த்தாலும் ஆதரித்தாலும் முழு அரசியலமைப்பும் தற்போதைய பதினெட்டாவது திருத்தமும் முற்றுமுழுதான ஜனநாயக விரோதம் மிக்க தனிநபர் சர்வதிகாரத்தைத் தொடர்வதற்கான சக்தி மிக்க மக்கள் விரோதக் கருவியேயாகும்.

ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மக்கள் சார்பு செயற்பாட்டையும் கைகளில் தூக்கிய ஒரு கடும் தேசியவாதி எவ்வாறு அதிகாரப் படிநிலைகளில் ஏறி உச்சத்தை அடைந்து

வெகுஜனன்

கொண்டதும் ஃபாசிச வழிமுறைகளைப் பின்பற்றத் தயங்குவதில்லை என்பதற்கு மகிந்தவை விட வேறொருவரை இலங்கையில் உதாரணம் காட்டுவது இயலாத ஒன்றாகும். அவரது அரசியல் வரலாற்றுப் பயணம் அதற்கான போதிய சாட்சியாகும்.

கடந்த ஆண்டு நடுப் பகுதியில் புலிகள் இயக்கத்தை அழித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர் மகிந்த ராஜபக்ஷ. அதற்கான இராணுவ வெற்றியை நாட்டு மக்களின் வெற்றியாகக் கொண்டாடியதுடன் யுத்தத்தை வழிநடாத்திய ராணுவத் தளபதியைச் சிறையிலடைத்து முழு வெற்றியையுந் தமாக்கியும் கொண்டவர். அத்தகைய சூழலில் அடுத்த நடவடிக்கையாக இன்னும் பிரதான முரண்பாடாகவும் பிரச்சினையாகவும் இருந்துவரும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை மகிந்தவும் அவரது அரசாங்கமும் கொண்டு வருவார்கள் என்று சிலரால் நம்பப்பட்டது. இந்த நம்பிக்கையை உள்நாட்டில் இவ் அரசாங்கத்தை ஆதரித்து வந்த தமிழ்க் கட்சிகள், அரசில் அங்கம் பெறும் பாராளுமன்ற இடதுசாரிகள், புலம் பெயர்ந்து வாழும் சில தமிழ்ப் புத்திஜீவிகள் என்போர் கொண்டிருந்தனர். மகிந்த ராஜபக்ஷ நல்லவர், வல்லவர், இசகு பிசகாக நடந்து கொள்ள மாட்டார், நாம் எல்லோரும் அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என ஊடகங்களில் ஆவேசப் பரைப்புரைகள் செய்தனர். அத்தகையோர் பதினெட்டாவது திருத்ததிற்குப் பின்பு இஞ்சி தின்ற குரங்கு போன்ற நிலைக்கு உள்ளாகி இருக்கும் பரிதாபத்தையே காண முடிகிறது. அரசியல் தீர்வுக்கான ஒரு முழுமையான அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றங் கண்டது மட்டுமன்றி அதிர்ச்சியுடனும் உள்ளனர். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது இந்திய எசமானர்களின் அழுத்தம் காரணமாக மகிந்த தீர்வுத் திட்டத்தை குறைந்தளவில் தானும் அரசியலமைப்புத் திருத்தமாகக் கொண்டு வருவார் என்றே நம்பியிருந்தனர். இனப் பிரச்சினை என்ற ஒன்று இருப்பது போலவோ அதற்குத் தீர்வுத் திட்டம் கொண்டு வரப் போவதாகவோ மகிந்த ஒரு வசனம் கூடக் கூறாத நிலையில் தான் இருந்து வருகிறார்.

இச் சூழலிலேயே பதினெட்டாவது திருத்தத்தை வேகமாகவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வலிந்து பெற்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் திருத்தத்தின் சாரம்சம் ஏற்கனவே இருக்கும் தனிநபர் சர்வாதிகாரத்தை மேலும் விஸ்தரித்துப் பலப்படுத்துவதாகும். அதனைத் தனது வாழ்நாள் பூராவும் தன் வசம் வைத்திருப்பதுடன், தன் வயோதிபக் காலத்தில், பயிற்சியளிக்கப்பட்டு வரும் தனது மகனிடம் ஒப்படைப்பதாகும். இதனையே மக்களின் இறைமையைப் பாதுகாத்து நடைமுறைப் படுத்துவதென்பதன் அர்த்தமாகும். இதற்காகவே இரண்டு தடவைக்கு அப்பால் எத்தனை தடவையும் ஜனாதிபதிப் பதவிக்குப்

9ம் பக்கம் பார்க்க

# எத்தனை காலம் தான் ஏமாறுவார் இந்த மலைநாட்டிலே! 01

ஆக்கம்- சுபி காஸ்ரோ

'எங்கள் பாடசாலைக்கு புதிய அதிபர் வந்தார் பழையவரைப் போலவே' என்றாகிவிட்டது மலையகத் தொழிற்சங்க நிலையும் அதன் அரசியலும், இரண்டு ஒன்றோடு ஒன்று, பிணைந்தது தானே. சரி இனி விஷயத்திற்கு வருவோம்.

கோ. நடேசய்யர் மதிக்கப்பட வேண்டியவர். ஓர் பிராமண குலத்தில் பிறந்தவர். தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டவர். முதன் முதல் தொழிலாளர்களை ஸ்தாபகரீதியில், ஒன்றுபடுத்தியவர். தொழிலாளர்களின் அறிவு வறுமை மாற்றமடைய வேண்டும் என்று, உழைத்தவர். 'தொழிலாளர்களின் உண்மையான எதிரிகள் கங்காணிகளே' என்றும் ஆப்பிரிக்க அடிமை வியாபாரிகளை விட இவர்கள் மோசமானவர்கள் என்றும் கருதியவர். முதன் முதல் தொழிலாளத் தலைவராக சட்டசபையில் குரல் கொடுத்தவரும், ஓர் தொழிலாளி சமூகத்தில் இருந்து உருவாகவில்லை, அதற்கு அன்றிருந்து தொழிலாளர் நிலைமை ஒத்துழைக்கவில்லை.

பிறகு வந்த தொழிற்சங்கமான (CIC) இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் நலன், ஒடுக்கப்பட்ட வாழ்வு நிலையிலிருந்து மீட்டல் போன்ற விடயங்களுக்கு அப்பால், சாதி அடிப்படையிலான பிரிவுகளும், சாதி அடிப்படையிலான தலைமைத்துவத்தையுமே பிரதிபலித்தது.

பிறகு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் தனது தொழிற்சங்க நடவடிக்கையை 1940களில் இருந்து, ஆரம்பித்தது.

கங்காணிமார்களின் பிள்ளைகளின் கைகளுக்கு தொழிற்சங்கத் தலைமைத்துவம் சென்றது. தொழிலாளர்களுக்கு சற்றும், தொடர்புமற்றவர்கள் அவர்களை ஆளும், நிலைக்குள்ளாயினர். அவர்களின் பலவீனங்களையும், உணர்ச்சிநிலையை பயன்படுத்தி தனது ஆழமான வேர்களை படரச் செய்தது. 1957 ஆம் ஆண்டு விசேட வாழ்க்கை படி ரூபா 17.50 அரசாங்க ஊழியர்களுக்குப் போல், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று கோரி இ.தொ.காவும் ஏனைய தொழிற்சங்கங்களும் போராட்டத்தில் இறங்கின. 3 வாரம் நீடித்த இப்போராட்டத்தில் திடீரென இ.தொ.கா வாபஸ் வாங்கியது. தொழிலாளர்கள் முதல் தடவையாக, தெருவில் விடப்பட்டனர். இது இன்றும் தொடர்கின்றது. இதனை என்.எம் பெரேரா பின்வருமாறு கூறியிருந்தர்

"இந்தப் போராட்டம் தொண்டமானின் பிற்போக்குத் தளத்தினை அம்பலப்படுத்தியுள்ளது. அவர் முதலாளித்துவ வர்க்கத்துடன் இணைந்து கொண்டு தமது உரிமைகளுக்காகப் போராடும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தினை எதிர்க்கின்றார்." என்றார்.

இ.தொ.காவின் நாடகம் இன்றும் அரங்கேறிய வண்ணமாகவே உள்ளது. தாத்தா, பேரன், கொள்ளுப்பேரன், என்று வாரிசுகளும் ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

இவர்களை விடுத்து, ஏனையவர்களை நோக்குமிடத்து திகா, கனேஷன், ரங்கா எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லுமே ஒழிய, அடிப்படையில் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். அண்மையில் அரசாங்கத்துடன் இணைந்த திகா, ரங்கா, கணேஷன் சகோதரர் என்னத்தைச் சாதிக்கப் போகின்றார்கள். அரசாங்கம் போடும் எலும்புத் துண்டுகளுக்கு மக்களை ஏலம் விடத்தானே போகிறார்கள். இவ்வளவு காலம் செய்யாததையா இவர்களுக்கு வழங்கி செய்விக்கப் போகிறார்கள்.?

மலையக மக்களே! இளைஞர்களே! புத்திஜீவிகளே! நாம் கூறுவது இதுதான். இலங்கையில் மிகவும் ஒடுக்கப்படும் இனம் மலையகத் தொழிலாளர்கள் தான். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு என சகல அடிப்படை உரிமைகளில் பாரபட்சம் காட்டப்படுவதும் இங்குதான். இதற்கு என்னதான் தீர்வு? சோசலிச எதிர்காலம் அன்றி வேறு எதிலுமே தீர்வு கிடையாது. அந்த மாபெரும் லட்சியத்தை அடைய இலங்கையின் முதல்நிலைத் தொழில் வர்க்கமே! நீங்கள் ஒன்றுபட கூடாதா? உங்களுக்காகவே உழைக்கும் மக்கள் நலனே நோக்கமென்றிருக்கும், மாக்சிய, லெனினிய, மாவோயிச சிந்தனைகளோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வெகுஜன போராட்ட அரசியலை தெரிவு செய்வோம். இனியும் ஏமாறாதிருப்போம்.

## மலையகத்தில் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள்

மலையக பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது இ.தொ.கா தலைமைக்கு கால் பிடித்து தனது பெயரை வேட்பாளர் பட்டியலில் திணித்துக் கொள்வதற்காக அடிமாட்டுத்தனம் செய்யும் பல அதிபர் ஆசிரியர்களும் விசேடமாக பொகவந்தலாவை பகுதியில் நடைமுறை தெரியாமல் தலைவரை சந்திக்க செல்லும் ஆசிரிய நண்பனை பகைவனாக நினைத்து கோபம் கொண்ட ஆசிரியர்களும் தற்போதைய தலைவர்களாக உபதலைவர்களாக இருப்பவர்கள் ஆப்பிரிக்க அடிமைகளை விட மோசமாக தலைவர் புகழ்பாடி தனக்கு பதவி மீண்டும் கிடைக்க வேண்டும் என்பதற்காக தனது உற்றார் உறவினர்களையும் தனது உத்தியோகத்தர்களையும் காட்டிக் கொடுக்கும் மோசமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர் இவர்களின் செயற்பாட்டினை அவதானித்த பொது மக்கள் இவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக கூறுகின்றனர்.

## பெருந்தோட்ட மக்களின் தொழில் உரிமைகள் மீறல்

### காவத்தை ஓபாத தோட்ட தொழிலாளர்களின் அவலம்

மலைய தொழிற் சங்களின் காட்டிக் கொடுப்பில் பெற்றுக் கொண்ட 285 ரூபா என்ற அடிப்படை சம்பளத்தை கூட பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலையில் காவத்தை, ஓபாதவைச் சேர்ந்த தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். தோட்ட நிர்வாகம் தொழிற் சட்டங்கள் தொடர்பில் எவ்வித கரிசனையையும் காட்டாது தொழிலாளர்களின் உரிமைகளை கண்மூடித்தனமாக மீறிவருகிறது. இதனை எதிர்த்து 12.07.2010 எதிர்ப்பு ஆர்ப்பட்டம் ஒன்று தோட்ட மக்களினால் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் நிர்வாகம் தொடர்ந்தும் தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டுவருகிறது. அத்தோடு இது தொடர்பாக இத்தோட்டத்தை நிர்வகிக்கும் பிராந்திய கம்பனியான காவத்தை பெருந் தோட்டத்தின் (Kahawatta Plantation Ltd) பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களின் கையொப்பத்துடன் தங்களின் தொழில் உரிமைகள் மீறப்படுவதனை சுட்டிக்காட்டி மனுவொன்றை 26.07.2010. அன்று அனுப்பிவைத்தனர்.

அம்மனுவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த முக்கிய உரிமை மீறல்கள் வருமாறு:

1. 08 மணித்தியாலங்கள் வேலை செய்த போதும் நிர்னய இலக்கு கிலோ (டார்கட்) குறைவடைந்தால் அடிப்படை அரை நாள் கூலியாக 285/2 = 142.5 ரூபா வழங்குவது.
2. கொழுந்து அதிகமாக பறிக்க முடியாதவர்களை வேறு துறைகளில் அமர்த்தாது அவர்களை தொடர்ந்து கொழுந்து பறிக்க நிர்ப்பந்தித்தல்.
3. கூட்டு ஒப்பந்தம் இலக்கு கிலோ (டார்கட்) எவ்வளவு என்பது தோட்ட முகாமைத்துவம் தோட்டத்தில் உள்ள தொழிற்சங்களின் கூட்டும் சேர்ந்து நிர்ணயிக்க வேண்டிய நிலையில் தோட்ட முகாமையாளர் தான்தோன்றிதனமாக இலக்கினை தீர்மானிக்கின்றமை.
4. கூட்டு ஒப்பந்தத்தின் படி நிர்ணயஇலக்குக்கு (டார்கட்) அதிகமாக எடுக்கப்படும் ஒவ்வொரு கிலோவிற்கு 12 ரூபா வழங்கப்பட வேண்டும் என விதித்துள்ள நிலையில்—தோட்ட முகாமை தான் நினைத்த தெகையை (9, 10 ரூபா) வழங்கி வருகின்றமை.
5. இரவு நேரத்தில் வேலை செய்யும் பெண்களுக்கான மேற்பார்வையாளர்களை சட்டத்தை மீறும் வகையில் ஆண் மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது துஷ்பிரயோகங்களுக்கும் *காரணமாக* அமைகின்றமை.
6. மரபு ரீதியாக தோட்ட தொழிலாளிக்கு கிடைத்துவந்த தேயிலை தூள் குறைந்தது 15 நாட்கள் வேலை செய்தவர்களுக்கே வழங்கப்படும் என்ற விதியை முகாமைத்துவம் விதித்துள்ளமை.
7. இரவு நேரத்தில் வேலை செய்யும் ஆண், பெண் இருபாலாருக்கும் சட்ட ரீதியாக கிடைக்க வேண்டிய இரவு நேர தேநீர், உணவு என்பன வழங்காமை.

தோட்ட முகாமைத்துவத்தின் நடவடிக்கைகள் காரணமாக குறிப்பாக தேயிலை பறிக்கும் பெண்கள் வெகுவாகப் பாதிப்பட்டுள்ளனர். கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக 405 ரூபாய் பெற்றுக் கொடுத்துவிட்டதாக கூறப்பட்ட போதும் நாட்சம்பளமான 285 ரூபாயை பெற்றுக் கொள்வதற்கே அவதியுறுவதனை மன வேதனையுடன் அறியத்தந்தனர்.

"வெயில் காலத்துல தொர மாத்தியா செல்லுர மாதிரி 17, 18 கிலோ யாராலும் எடுக்கவே முடியாது. தோட்டம் காடா கெடக்கு நல்லா கொழுந்து எடுக்கிறவங்ககூட 14, 15 கிலோவுக்கு மேல எடுக்க முடியது. 3 நெர நெருத்து எடுக்கிர ராத்தலையும் கொரச்சிருவாங்க அப்ப எங்களுக்கு 405யில 30 ரூவா எப்படியும் கெடைக்காது. பழையமல ஆளுங்க நெரைய பேரு 12 கிலோவுக்கு கொரையவே எடுக்கிராங்க அவுங்களுக்கு நெரைய நாளு அரை நாள் சம்பளத்ததான். 140ஐ எடுத்து நாங்க எப்படி வாழுறது. அர பேரு 6 நாளு போட்ட அது 3 நாள் வேலை செஞ்சதாக கணக்கெடுக்குராங்க. 75% வரவுக்கா கொடுக்கிற 90 ரூவாயும் நெரைய பேருக்கு கெடைக்காது. நானும் எவ்வளவு காலமோ இந்த தோட்டத்தில வேலை செய்திருக்கிறே இப்படி அநியாயத்தை கண்டதில்ல. நம் ஆளுங்க ஒத்துமை பத்தாது" கொழுந்து பறிக்கும் தோட்ட தொழிலாளி ஒருவர் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றமையை மேற்கண்டவாறு பகிர்ந்துக் கொண்டார்.

இத்தோட்ட பிரதேச (பெல்மடுல்ல) உதவி தொழில் ஆணையாளருக்கும் இச் சட்டரீதியற்ற செயற்பாடுகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள போதும் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை வழங்க மறுக்கும் போது அதனை எதிர்த்து கேட்டு உரிமைகளை பெற வேண்டிய தேவையில் இத் தோட்ட மக்கள் காணப்படுகின்றனர்.

இரத்தினபுரி நிருபர்

# மோட்டார் சைக்கிள் டையறி

எஸ் / எம் தோழர்கள்

செய்தி 01

'முதலாளித்துவத்தின் ஒடுக்குமுறை எவ் எவ் வடிவங்களில் தொடர்கிறது என்பதற்கு தகுந்த உதாரணம். 2010.08.31 அன்று சைக்கிள் தோழர்களுக்கு அழைப்பு வந்தது. உச்சிமல தோட்டத்தில் மரணம் நிகழ்ந்தது என்று, விரைந்தோம். அது ஒரு தனியார் தோட்டம். மாத்தளை மாவட்ட அலிகடுவ வேகல (உச்சிமல) தோட்டத்தில் வசித்த தொழிலாளி திரு. ராமையா கந்தசாமி என்பவர் மாடுகளுக்கு பிலீ அறுக்கச் சென்றபோது திடீர் மயக்கம். அவர் தலை பின்புறம் மண் புற்றொன்றில் பட்டு சற்றே உயிர் பிரிந்தது என்றனர். கவலையாக இருந்தது. 56 வயது அவருக்கு. நல்ல உழைப்பாளி. பிரதேச வாசிகளுக்கும் எமக்கும் சுமூகமான உரையாடல் தொடர மயானம் எங்கே, என்ற கேள்வி கேட்க, 'அத ஏன் தம்பி கேக்குரீங்க' என்று ஓர் தொழிலாளி ஆரம்பித்தார். இந்தத் தோட்டத்தில ஏகப்பட்ட பிரச்சினை இருக்கு. இந்த நிகழ்வுடன் தொடர்புடைய பிரச்சினையை தொடர்கிறேன் கேளுங்கள் என்று ஓர் தொழிலாளி சொன்னார்.

ஐயா! இறந்த உடல்களை புதைக்கக் கூட நிரந்தரமான இடம் எமக்கு வழங்கப்படவில்லை. வேலை செய்யும் தோட்டத்தில் வழங்கப்படாமல் பக்கத்துத் தோட்டத்தில் ஓர் இடம் கிடைச்சுதுங்க. அதுல தான் புதைக்கிறம்.

எங்கட முதலாளிக்கு அதுல எல்லாம் அக்கறை இல்ல. நாங்கள் என்ன தேயிலை மலையிலா இடம் கேட்டோம்? சற்று ஒதுக்குப் புறமாக நிரந்தரமான இடந்தான் கேட்டோம். பார்ப்போம் என்றார்கள். அபிவிருத்தி, நீர்தேக்கம் என்று ஆயிரம் ஆயிரம் ஹெக்டேயர்களை அழித்து விடுவார்கள். இந்த மண்ணோடு மண்ணாய் வாழும் ஒடுக்கப்பட்ட எமக்கு நாலடி நிலம் குடுக்க எவளவு கேடு? இதற்கு எல்லாம் எப்பதான் முடிவு வருமோ? நாம் கூற முற்படுவது இது. தொழிலாளர் ஒற்றுமை, போராட்டம் தொடர்ந்தால் நீங்கள் சாதிக்கலாம். குடியிருப்பு, கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு என அடிப்படை குடியியல் உரிமைகளைப் பெற அனைத்துத் தொழிலாளர்களும் ஐக்கியப்பட்ட வெகுஜனப் போராட்டங்கள் வலுப்பெற வேண்டும். மாற்று அரசியல் பாதையை தொழிலாள வர்க்கம் தெரிவு செய்ய வேண்டும்.

-சுதந்திரமாகச் சிந்தியுங்கள்-

செய்தி 02

களுத்துறை மாவட்டம் மத்துகம நகரத்திற்கு முன் சப்புகாவத்தை சந்தியில் எமது மோட்டார் சைக்கிள் தோழருக்கு ஓர் மனச் சலனம் ஏற்பட்டது. ஓர் கடையில் தேநீர் அருந்த நுழைந்தோழ். கடை முதலாளியிடம் ஓர் வாடிக்கையாளர் பாண் வேண்டும் என்றார். உடனே முதலாளி, "ஏ தெமல கெதர பாண் ஒக்கம கெணிச்சா" (அந்தத் தமிழ் வீட்ல பாண் எல்லாத்தையும் வாங்கிட்டாங்க) என்றார். அவர் முகத்திலும் இனவெறி தாண்டவம் ஆடியதை எமக்கு பார்க்கக் கூடியதாக இருந்தது.

நாங்கள் தமிழில் பேசவும், அவருக்கு முகம் சற்று மாறியது. நாம கூற முற்படுவது இதுதான். தற்காலத்துக்குத் தேவையானது சிங்களம் தமிழ் என்ற இனவாத நிகழ்ச்சி நிரல் அல்ல. இனங்களுக்கிடையிலான ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வு. சாப்பாட்டிற்கே வழியில்லாத காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் இவைகளைத் தூக்கிப் பிடித்துப் பயனில்லை. நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும் இந்த இலங்கையின் விமோசனம் அதில் தங்கியிருக்கிறது என்று சகலரும் சிந்திக்க வேண்டும்.

செய்தி- 03

முதலாளித்துவ சமூக அமைப்பில் மனிதாபிமானம் கூட பிணமாகிவிடுவது சாதாரணம் தான். அதைப் பார்க்க சைக்கிள் தோழர்களுக்கு வேதனையோடு கூடிய வாய்ப்பு கண்டியில் கிட்டியது. கண்டி மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி வளாகம் எமது சிறு வியாபாரி சகோதரர்கள் மரக்கறி மற்றும் விற்பனைப் பொருட்களை கும்பலாக, வைத்துக் கூவிக் கூவி வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். திடீரென அங்கே வந்த கண்டி பொலிசார் அவர்களை விரட்டியடித்து சத்தம் போட்டனர். செய்வதறியாது அந்த அப்பாவி சிறு வியாபாரக் கூட்டம் சிதறியது. அவர்கள் தங்கள் வயிற்றுப் பசியைப் போக்க அன்றாடம் தேடும் 500, 1000 ரூபாய்க்கும் ஆப்பு வைத்தாகி விட்டது. அவர்கள் (Parement) பாதையோரமாக வியாபாரம் செய்ய காரணம் சந்தைத் தொகுதியில் இடம் வாய்க்கும் அளவு அல்லது வாடகை கொடுக்குமளவு வசதி இல்லாததால் தான். சட்டரீதியில் நாம் பேசவில்லை. மனிதாபிமான நடவடிக்கைக்குப் பெயர் போன அரசாங்கம் அண்மைக் காலமாக கொழும்பு, அக்குறணை, கண்டி, மாத்தளை போன்ற நகரங்களை மாற்றியமைக்கப் போவதாக கூறி ஏதேதோ செய்கின்றார்கள். மனிதாபிமான ரீதியில் மக்களின் பிரச்சினையைப் பாருங்கள். அவர்களுக்கு மாற்று வழியை ஏற்படுத்துங்கள்.

கொடுமையிலும் கொடுமை என்னவென்றால் பாதையோர சிறு வியாபாரிகள் கூறி விற்ற மரக்கறிகளை பொலிசார் சாலைகளில் செல்லும் பொதுமக்களை எடுத்துக் கொண்டு செல்லுங்கள் மிகப் பெரிய லாபம், இலவசம் என்று கூக்குரல் இட சிலபேர் முகம் சுழித்து செல்ல மத்திய தர வர்க்க (Middle Class) ஆசாமிகளள் சில வேக, வேகமாக சிரித்துக் கொண்டு மரக்கறிகளை அள்ளி பைகளில் போட்டனர். சக மனிதனின் உணர்வைக் கூட மதிக்காமல் சிந்திக்காமல், தற்கால சமூக நிலையை பார்த்தீர்களா? சகோதரர்களே இந்நிலை மாற்றப்பட வேண்டும். மனிதனை மதிக்கும் சமுதாயம் தோன்ற வேண்டும். ஒடுக்கப்படுபவர்கள் ஒன்று சேர வேண்டும். போராடுவோம். காலம் நெருங்கி விட்டது.

# சிங்கள தமிழ்த் தலைவர்கள் உழைக்கும் மக்களை ஒன்றுபட விடமாட்டார்கள்

மகிந்த ராஜபக்ச முதல் தடவை ஜனாதிபதியாவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு பயன்பட்டார்கள் என்பது யாவரும் அறிந்த விடயம். மீண்டும் இரண்டாவது தடவை அவர் ஜனாதிபதியாவதற்குத் தமிழர் கூட்டமைப்பும் தமிழ் புத்திஜீவிகள் என்று தம்மை விளம்பரம் செய்தவர்களும் தோன்றாத் துணையாக நின்று உதவினர் என்பதும் யாவரும் அறிந்த விடயம். ஜனாதிபதி அவர்களின் முதலாவது பதவிக்காலம் நவம்பர் மாதம் வரை செல்லுபடியானது. மே மாதம் முடிவடைந்த யுத்தத்தின் வெற்றிக் கவர்ச்சி நவம்பர் மாதம் வரை நீடிக்குமோ என்ற ஐயம் நியாயமாகவே ஜனாதிபதிக்கு சந்தேகத்தை எற்படுத்தியது. இதனால் நவம்பர் மாதம் வரை பொறுத்திருக்க முடியாமல் ஜனாதிபதியானவர் தேர்தலுக்கு முகம் கொடுத்தார். அப்படியிருந்தும் யுத்த வெற்றியின் கவர்ச்சியில் தடுமாற்றங்கள் ஏற்பட்டன. இந்த வேளையில் எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துக் கணக்குப் போட்ட பாரத நாடு இராசபக்சவே மீண்டும் ஜனாதிபதியாவது தனக்கு வசதியாக இருக்கும் என்று முடிவு எடுத்துக்கொண்டது. தனது முடிவை அமுல்படுத்த இந்திய அரசு வழக்கம் போலவே தமிழர் கூட்டமைப்பையும் சில நபர்களையும் (புத்திஜீவிகளை) மகுடமிட்டும் பகடைக்காய்களாக உருட்டியது. தேர்தலில் எதிர்பார்த்தற்கு மேலாக ராசபக்ச சிங்கள வாக்குகளைப்பெற்ற போது இந்திய அரசு எதிர்பார்த்தவாறு நடப்பதைத் அவர் தவிர்க்க ஆரம்பித்தார். யுத்த முடிவில் வட-கிழக்கு மண்ணும் மக்களும் அதன் தலைவர்களும் இருக்கின்ற நிலையில் தனது பெரும்பான்மைப் பலம் மூலம் நூறுவீதமான பேரினவாத நடவடிக்கையை நுட்பமாகத் திட்டமிட்டு நிறைவேற்ற ஜனாதிபதி எண்ணம் கொண்டுள்ளதாகவே தெரிகிறது. தனது இருப்புக்கும் தனது எதிர் காலத்துக்கும் இந்திய அரசை ஜனாதிபதி நம்புவதற்கு தயாராக இல்லை. முதலாவது பதவிக் காலத்துக்கும் இரண்டாவது பதவிக் காலத்துக்கும் வலிய வந்து உதவிய தமிழ்த் தேவதைகள் மூன்றாவது பதவிக்காலத்துக்கும் உதவுவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்க அவர் ஒன்றும் முட்டாளல்ல. சிங்கள மக்களின் ஆதரவே தனக்கு என்றும் எல்லாவற்றுக்கும் பலம் என்று அவர் உணர்ந்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன என்பவரில் பிடித்த அமெரிக்கப் பேயை ஓட்டுவதற்கு வடக்கு-கிழக்கில் ஈழம் தனிநாடு என்று இந்திய அரசு மந்திரீகங்கள் செய்தது. அந்தப் பேய் ஓடிவிட அதனிடத்தில் சீனப் பேய் வந்து அமர்ந்ததாக இந்திய அரசு பயம் கொண்டது. இந்தப் பேயை ஓட்டுவதற்கு முள்ளிவாய்க்கால் வரையும் கொத்துக் கொத்தாய் நரபலி கொடுத்தும் போதாததற்கு முட்கம்பி வேலிக்குள் போட்டு மிதித்தும் துவைத்தும் பேய் ஓடியபாடில்லை. வட-கிழக்குத் தமிழர் வாழ்வையும் மண்ணையும் பலியாகாத் தருமாறு பேரினவாதிகள் கோரும் பட்சத்தில் இந்திய அரசு மனமுவந்து வழங்கத் தயராகவே உள்ளது. தமிழர் கூட்டமைப்புக்கும் புத்திசீவிகளுக்கும் இந்த உண்மை தெரியாமல் இருக்க முடியாது. அவர்கள் உடலில் ஓடுவது அசல் இந்திய-மேற்குலக இரத்தமாகும். அவர்கள் உறவுகள் பிள்ளைகள் பேரர் வழி உறவுகள் யாவரும் மேற்குலகில் சஞ்சரிப்பவர்கள். தமிழ்க் கூட்டமைப்புக்கு இந்த மண்மீது உள்ள உறவு ஒடும் புளியம்பழமும் போன்றது.

இந்தியா எமக்கு மிக அண்மையில் உள்ள பிராந்திய வல்லரசு. இந்தியாவின் நலனுக்குச் சேவகம் செய்வது மூலம் இந்தியா பிரதியுபகரமாக எமது நலன்களை வாங்கித்தரும் என்றும் எமது இலக்கை அடைவதற்குப் பால் தக்கரேயோ பா.ஜ.க.வோ தமிழகத்துத் திராவிடத் தலைமைகளோ மற்றும் பான் கீ மூன், எரிக் சொல்கெய்ம் போன்றவர்களோ உதவுவார்கள் என்றும் நம்பி நம்பி எமது உறவுகளை இழந்தோம். வரலாறு தமிழ் மக்களுக்குத் தெளிவான படிப்பினைகளை முழுவீச்சில் வழங்கியுள்ளது. பெரும்பாலான சாதாரண மக்கள் வரலாற்றை நேரில் தரிசித்துள்ளார்கள் என்பதால் வாக்குப் பெட்டிகள் காலியாகவே போய்விடுகின்றன. தமிழக் கூட்டமைப்பின் இளநிலைப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது மூத்த தலைமைகள் மீது அதிருப்தி கொண்டிருப்பதாகத்தெரிகின்றது.

இனிவரும் காலங்களிலாவது தமது மேட்டுக்குடி அரசியலைத் துறந்து சிங்கள முஸ்லிம் பொதுமக்களையும் இணைத்துக் கொள்ளக்கூடிய அறம் சார்ந்த அரசியலை முன்னெடுப்பதன் மூலம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை வெகுஜனப் போராட்டங்கள் மூலம் வெற்றி கொள்ளத் தமிழ்த் தலைவர்கள் ஆயத்தமாவார்களா என்று கேட்டால் இல்லை என்ற பதிலே வரும். தென் இலங்கைப் பயணிகள் த.வி.பு. தலைவர் இருந்த வீட்டை பார்ப்பதிலும் அந்த வளவில் மண் எடுத்துக்கொண்டு செல்வதிலும் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். இது போன்று அவரது தாயாரையும் பார்த்துக்கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர். இது வெறுமனே முறுகண்டியில் இறங்கினோமா கச்சான் வாங்கித் தின்றோமா என்பது போன்ற விவகாரமல்ல. எது எவ்வாறயிருப்பினும் சிங்கள சாதாரண மக்கள் பிரபாகரனைத் தனது இனத்துக்காகப் போராடிய ஒரு வீரன் என்றே மதிக்கிறார்கள். இவ்வாறான பார்வையிடல்கள் இரணுவத்தால் தடைசெய்யப் பட்டுள்ளன. சிங்கள-தமிழ்த் தலைமைகள் சிங்கள-தமிழ்ப் பொது மக்கள் ஒன்றிணைவதற்கான இயல்பான சாத்தியங்களையும் சகித்துக்கொள்ள முடியாது உள்ளனர்.இரு பகுதிக்கும் பகை மூட்டும் நடவடிக்கையையே விரும்புகிறார்கள்.

இந்த நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லிம் பொதுமக்கள் ஒன்றிணையக்கூடிய ஒரு அரசியல் தத்துவமும் நடைமுறையுமே இலங்கைத்தீவில் நிரந்தர அமைதியையும் முழு மக்களுக்குமான மகிழ்ச்சியான வாழ்கையையும் வழங்கும் என்பதே உண்மையாகும். ஒடுக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற மக்களுக்கு மாக்சிச-லெனினிச நடைமுறைகள் மட்டுமே தீர்வுகளை வழங்கும் என்பது வரலாறு கற்றுத்தந்த பாடமாகும்.

-விசு-

# சிறைகளில் அடைக்கப்பட்ட சந்தேக நபர்கள் விடுதலையும் இல்லை விசாரணையும் இல்லை நீதியும் நியாயமும் செத்துவிட்டன?

சொத்துச் சுகம் அவற்றைப் பெறுவதற்கான சுரண்டல் சமூக அமைப்பில் மனிதர்களுக்கான நீதியும் நியாயமும் உயிருடன் இருப்பதில்லை. உழைக்கும் மக்கள் என்போரும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் உரிமைகளும் நீதி நியாயங்களும் கேட்பின் அவர்கட்கு கிடைக்கும் பதில் அடக்குமுறைதான். அதன் ஒரு கொடூர வடிவமே சிறைச்சாலை ஆகும். புராணக் கதைகளில் நரகங்கள் பற்றிக் கூறக் கேட்டிருக்கிறோம். அதன் நேரடி வடிவங்களை முதலாளித்துவச் சிறைக்கூடங்களில் தான் காணமுடியும். இலங்கை இன முரண்பாடு தேசிய இனப் பிரச்சனையாகி போராட்டமாக வடிவமெடுத்து மூன்று தசாப்தங்களுக்கு மேலாகி விட்டது. அதன் போது அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பனவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட பல ஆண்டுகளாக விசாரணையின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறு வடக்குக் கிழக்கு மலையகம் கொழும்பு மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 700 கைதிகள் கொழும்பிலும் நாட்டின் ஏனைய சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 50 வரையான பெண் கைதிகள் இருக்கின்றனர். அவர்களில் சிலர் குழந்தைகளுடன் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமல்ல, இவ்வாறானவர்களில் 15 வயது முதல் 65 வயது வரையானவர்கள் இருப்பதுடன், சிலர் சுமார் 20 வருடங்களாகச் சிறையில் இருந்து வருகின்றார்கள்.

சிறைச்சாலை என்பது அரசு யந்திரத்தின் ஒரு அங்கமாகும். அது இன்றி ஆளும் வர்க்கத்தால் ஆட்சி செய்ய முடியாது. எல்லா நாடுகளிலும் சிறைச்சாலைகள் உண்டு. ஆனால் முதலாளித்துவத்தின் கீழுள்ள சிறைச்சாலைகளுக்கும் சோஷலிசத்தின் கீழான சிறைச்சாலைகளுக்கும் அடிப்படையிலும் நடைமுறைகளிலும் வேறுபாடு உண்டு. முதலாளித்துவச் சிறைச்சாலைகளில் மனிதர்கள் மனிதப் பிறவிகளாகவே நடத்தப்படுவதில்லை. பேச்சளவில் நிறையவே பேசப்படும். செயலில் பன்முக வதைகளே தொடரப்படும். கொழும்பில் உள்ள தலைமைச் சிறையின் மதிலில் 'சிறைக் கைதிகளும் மனிதர்களே' என்னும் தடித்த பெரும் எழுத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். பளிச்சிடும் அந்த வாசகத்திற்கும் நடைமுறைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. இச் சிறைச்சாலையிலும் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள சிறைகளிலும் சுமார் 700 ஆண், பெண், குழந்தைகள், இளைஞர்கள், வயோதிபர்கள் எனத் தமிழ்ச் சிறைக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சந்தேக நபர்கள். அதுவும் புலிகளாக, புலிகளுக்கு உதவியவர்களாக, வெவ்வேறு நிலைகளில் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறியே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் நான்கு மாதங்கள் சென்ற பின்பும் புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் எனப் பிரகடனம் செய்து கொண்ட நிலையிலும் இச் சந்தேக நபர்களை வெளியே விடுவதாக இல்லை. ஏன் என்பதே நியாயமான கேள்வியாகும்.

புலிகள் இயக்கத்தில் அதியுயர் தலைவர்களாக இருந்தவர்கள் இன்று அரசாங்க அரவணைப்பில் உயர் பதவியில் இருக்கின்றார்கள். அமைச்சர்களாக, ஆலோசகர்களாக விளங்குகின்றனர். அவர்களை மன்னிக்க முடிந்த மகிந்த சிந்தனை அரசு சிறை வைக்கப்பட்ட சாதாரணமானவர்களை சிறையில் தொடர்ந்து வைத்து வதை செய்து பழி வாங்குவது பலருக்குப் புரியாதுள்ளது. இன்றைய சிறைச்சாலை அமைச்சர் தன்னை ஒரு பொதுவுடமைவாதி என நிறம் காட்டுபவர். அவரது பாராளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சி அரசின் விசுவாசத்திற்குரிய கட்சி. இந்த அமைச்சர் அண்மையில் ஒரு புள்ளி விபரம் வெளியிட்டார். 2009 ஒகஸ்ட் மாதத்தில் இருந்து 3023 புலி உறுப்பினர்களைத் தரம் பிரித்து விடுவித்துள்ளதாகக் கூறியுள்ளார். புனர்வாழ்வு முகாமில் இருந்து வரும் புலி உறுப்பினர்கள் படிப்படியாக விடுவிக்கப்படுவர் என்றும் கூறியுள்ளார். ஆனால் அதே புலிகளுக்கு உதவியவர்கள் மட்டும் விடுவிக்கப்படவில்லை. இது பற்றி இந்த அமைச்சர் வாய் திறப்பதாக இல்லை. ஏன்? இளநீர் குடித்தவர் யாரோ, கோம்பை சுமப்பவர் வேறு யாரோ என்ற முதுமொழி போன்றே இன்று விடயங்கள் நடைபெறுகின்றன. எத்தகைய குற்றம் செய்திருப்பினும் அரசாங்கத்தை ஆதரித்தால் மன்னிக்கப்படுவர் என அண்மையில் அமைச்சரவைப் பேச்சாளரான ஒரு அமைச்சர் திருவாய் மலர்ந்து அருளியிருந்தார். இதுதான் மகிந்த சிந்தனை ஆட்சியின் ஜனநாயகம் மனித உரிமை மக்கள் சார்பு என்றால் அவற்றுக்கப்பால் எதைத் தான் எதிர்பார்க்க முடியும். தடுத்து வைத்திருப்போரை விடுதலை செய் அல்லது விசாரணை செய் என வெகுஜனப் போராட்ட முனையை முன்னெடுப்பதைத் தவிர வேறு எதையும் இந்த நெறிமுறையற்ற ஆட்சியிடம் எதிர்பார்க்க முடியாது.

# ஜே.வி.பி. வடக்குக் கிழக்கில் எதைக் கிழிக்கப் போகிறது

ஜே.வி.பி என்ற ஜனதா விமுக்தி பெரமுனவின் (மக்கள் விடுதலை முன்னணியின்) வரலாறு எல்லோரும் அறிந்தது. அன்றிலிருந்து இன்றுவரை, அதிதீவிர இடதுசாரி முகமூடிச் சிகப்பு நிறம் சந்தர்ப்பவாத அரசியல் அமைச்சர் பதவியென்றவற்றுடன் சிகப்புப் பேரினவாதத்தைக் கைப்பிடித்தமை என்பதே அவர்களது அரசியல் வரலாற்றில் முக்கிய கட்டங்கள். யுத்தத்தைச் சரிவர நடாத்த வேண்டும் இல்லாவிடில் தாம் அதில் பங்கேற்கத் தயாரென, மகிந்த சிந்தனை ஏற்றிய யுத்தத் தீயிற்கு எண்ணை வார்த்து நின்றவர்களும் இந்த ஜே.வி.பியினர் தான். யுத்தம் முடிந்த பின் யுத்தத்தைத் தலைமை தாங்கிய தளபதி சரத் பொன்சேகாவை தம்மவர்களில் ஒருவராக்கி ஜனாதிபதித் தேர்தலில் அவரை வெற்றி பெற வைக்க முன்னின்று ஜே.வி.பி. தோல்வி கண்டது. அத்துடன் விடவில்லை. பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அதே யுத்தத் தளபதியின் தலைமையில் தேசிய ஜனநாயக முன்னணி அமைத்து பாராளுமன்றத்தில் ஜே.வி.பி. என்ற பெயரைத் தொலைத்து நான்கு உறுப்பினர்களுடன் இருந்து வருகிறது. கடந்த பாராளுமன்றத்தில் 38 உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஜே.வி.பி. இன்று நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ளது.

அதே வேளை, உண்ணாவிரத வீரன் விமல் வீரவன்சவும் அவர்தம் சீடர்களும் அரசாங்கத்தில் அமைச்சர் சுகம் காண்கின்றனர். நாட்டின் அதிகாரம் தமது கரங்களுக்கும் வரவேண்டி சிம்மக் குரலில் கனல் கக்கிய விமல் வீரவன்ச இன்று ஒவ்வொருவருக்கும் வீடு பெற்றுத் தருவதாக கூறி வருகிறார். அத்துடன் வடக்கில் வசந்தம் வீசச் செய்யவும் அங்கு சென்று இன உறவுப் பாலம் கட்டவும் முன் நிற்கின்றார். இவை யாவும் பார்ப்பதற்கு நல்ல கண்காட்சிகளாகவே தென்படுகின்றன.

இவை இவ்வாறிருக்க, அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து வரும் ஜே.வி.பி., வடக்குக் கிழக்கில் தமது பணிமனைகளைத் திறந்து அரசியல் வேலைகளைச் செய்ய முற்படுகிறது. மூன்று மாதங்களுக்கு முன்பு அதன் தலைவர் வடக்கிற்குப் பயணம் மேற்கொண்டு கிளிநொச்சியில் சிறுவர்களுடன் சேர்ந்து அவர்களுக்குக் கொப்பி பென்சில்கள் வாங்கிக் கொடுத்து இன ஐக்கியம் வேண்டி நின்றார். பாவம், அக் குழந்தைகளின் தந்தைமார் தாய்மார் உறவுகள் எத்தனை பேர் ஜே.வி.பி. எண்ணையூற்றிய யுத்தத்தில் மாண்டு போயிருப்பார்களோ என்பதை ஜே.வி.பி. தலைவர் அறிந்திருக்க மாட்டார். அப்படி யாராவது எடுத்துக் கூறியிருந்தால் அதனைக் காதுகளில் போட்டிருக்கவும் மாட்டார்.

சரி கடந்து போனவைகளை ஒரு பேச்சுக்கு விடுவோம். இன்று ஜே.வி.பியின் அரசியல் நிலைப்பாடு என்ன? தேசிய இனப் பிரச்சனை இன்றும் இலங்கையின் பிரதான பிரச்சனையாக இருப்பதை ஏற்றுக் கொள்கிறதா? அப்படியாயின் அதற்கான ஜே.வி.பியின் அரசியல் தீர்வுத் திட்டம் யாது? தனித் தனிப் பிரச்சனைகளுக்கு அவ்வப்போது குரல் கொடுத்து அறிக்கை விடும் ஜே.வி.பி., ஒட்டுமொத்த இனப் பிரச்சனைக்கு எதனைத் தீர்வாக முன்வைக்கிறது?

இவற்றுக்குச் சுயவிமர்சன ரீதியில் பதில் அளிக்காது வடக்குக் கிழக்கில் அரசியல் வேலை என எதைத்தான் கிழிக்கப் போகிறீர்கள்? நீங்கள் எடுத்த பேரினவாத நிலைப்பாட்டிற்கு, சிகப்புப் பேரினவாதம் என மக்கள் மத்தியில் அழைக்கப்பட்ட நிலைப்பாட்டிற்கு, வடக்குக் கிழக்கில் என்ன பதில் கூறப் போகிறீர்கள்? இன்று கூட அதனைக் கடப்பதற்குத் தயாராக இல்லாத சந்தர்ப்பவாதப் போக்கையே வெளிப்படுத்தி நிற்கிறீர்கள். நாட்டில் எப் பகுதியிலும் அரசியல் செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு. ஆனால், அதற்கான தகுதி வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியிலும் மலையகத் தமிழர்கள் மத்தியிலும் உங்களுக்கு உண்டா என்பதே மக்களது கேள்வியாகும்.

# கல்லாதான் கற்ற கவி?

புலம் பெயர்ந்தவர்களின் தமிழ் இணையத் தளமொன்றில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் அரசியல்-சமூக-இலக்கிய விமர்சக நிபுணர் ஒருவர், தமிழ் இடதுசாரிகள் 1970களில் தேசிய இனப் பிரச்சனையைச் சரியாக விளங்கிக் கொள்ளாததாலேயே புலிகள் இயக்கம் வளர்ந்தது என்றும் இப்போது "இரட்டைத் தேசியம்" என்று ஒன்று இருப்பதை இடதுசாரிகள் உணர வேண்டும் என்றும் நீளமாக எழுதியிருந்தார். அவருடைய மதிஞானத்தை ஒரு சிலர் மெச்சோ மெச்சென்று மெச்சினார்கள். வேறு சிலர் அவரது கருத்தை அறவே மறுத்தார்கள். விவாதம் நீண்டது.

நடுவில் ஒருவர் இந்த அடிபிடிகளில் சிக்காமல் இரட்டைத் தேசியம் என்பதைப் பொதுப்படுத்தி விளக்கும்படி நிபுணரிடம் பணிவாகக் கேட்டார். நிபுணர் "நல்ல கேள்வி. விரைவில் விளக்கமாக எழுதுவேன்" எனறு தைரியமாக உறுதியளித்தார். நாட்கள் கிழமைகளாகி கிழமைகள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகியும் பல முறை நினைவூட்டியும் விளக்கம் வந்து சேரவில்லை.

நிபுணருக்கு ஒற்றைத் தேசியமும் தெரியாது. இரட்டைத் தேசியமும் தெரியாது. "வேளாளத் தேசியம் தலித் தேசியம்" என்று யாரோ எங்கேயோ முன்பின் யோசியாமல் சொன்னதைத் தன்னுடைய சொந்தக் கண்டுபிடிப்பு மாதிரி எழுதிவிட்டு விளக்க முடியாமல் தவித்துப் போனாரென்று பிறகு தான் தெரிய வந்தது. கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொல்லவும் இயலாத சங்கடம் நிபுணருக்கு.

பாண்டியன் சபையில் கூந்தல் மணம் இயற்கையா செயற்கையா என்பதற்குக் கவிதை வாசித்துத் தருமி பட்ட பாடு நினைவுக்கு வந்தது. இணையத் தள நக்கீரர்களிடமிருந்து நிபுணரைக் காக்க எந்தச் சிவபெருமானாலும் முடியுமா?


# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 9

- வெகுஜனன் -

1983ம் ஆண்டுக்குப் பின் இலங்கைத் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் ஜே.ஆர். தலைமையிலான அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இதில் இந்திய ஆளும் வர்க்க ராஜதந்திரிகள் இருதரப்பிற்குமிடையில் இணக்கம் ஏற்படுத்துவோராகத் தம்மைக் காட்டிக் கொண்ட போதிலும், அவர்களது நோக்கும் போக்கும் தமது பிராந்திய மேலாதிக்கக் கண்ணோட்டத்திலேயே சென்று கொண்டிருந்தது. தம்மை மீறி இலங்கையில் எதுவும் நடக்கக் கூடாது என்பதும் இலங்கை அரசாங்கமோ அன்றித் தமிழ் போராளிகளோ தம்மிடமிருந்து கட்டு மீறிப் போகக் கூடாது என்பதிலும் மிகக் கவனமாகவே இந்தியா நடந்து வந்தது. இதனை அன்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த ஜே.என். தீக்ஷித் தனது திமிர்த்தனம் மிகுந்த பேச்சுக்களில் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தையில் முன் வைக்கப்பட்டவற்றைத் தமிழர் தரப்பும் இலங்கை அரசாங்கத் தரப்பும் புரிந்துணர்வுடனோ அன்றி விட்டுக் கொடுப்புடனோ பேசி ஒரு குறைந்தபட்சத் தீர்வுக்கு வர மறுப்புத் தெரிவித்தே வந்தனர். இதனைச் சில பத்திரிகைகள் 'கொடாக் கண்டன் விடாக்கண்டன்' என்ற நிலைப்பாடாகச் சுட்டிக் காட்டின. அரசாங்கப் பிரதிநிதிகள் தமது பேரினவாத நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்க மறுத்த அதே நேரம் போராளிக் குழுக்கள் தனிநாடு என்ற தமது அடிப்படை நிலைப்பாட்டை நோக்கியே விடயங்களை அணுகினர்.

இச் சூழலிற் பல்வேறு தாக்குதல்களும் எதிர்த் தாக்குதல்களும் தொடர்ந்தன. இவற்றிடையே இந்திய இலங்கை அரசாங்க மட்டப்



பேச்சுவார்த்தையிலும் முன்னைய பேச்சுக்களின் தொடர்ச்சியாகவும் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இந்தியா முன்னின்று உருவாக்கிய இவ் ஒப்பந்தத்தை தமிழ் தரப்பினர் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை டில்லியின் ஆளுவோர் வற்புறுத்தினர். போராளி இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அங்கீகாரம் வழங்க வற்புறுத்தப்பட்டனர். இதன் உச்ச நிலையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் இருந்து இந்திய அதிகாரிகளினால் கட்டாயப்படுத்தி டில்லிக்கு உலங்குவானூர்த்தியில் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் இவ் ஒப்பந்தத்திற்குத் தனது மறுப்பைத் தெரிவித்த போது அவரை வெவ்வேறு வழிகளில் மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. அவர் டில்லியின் ஐந்து நட்சத்திர உயர் விடுதி ஒன்றில் ஒரு சிறைக் கைதி போன்று வைத்து நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. இதனை விடுதலைப் புலிகள் இயக்கம் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து தமது தலைவரை விடுவிக்க இயக்கம் 'ஆங்காங்கே நடாத்தியது. இச் சம்பவத்தை இன்றைய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அன்றைய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டது. அது தனது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "... எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டிற்கும் வேறுபாடும் முரண்பாடுகளும் உண்டு. ஆனால் நம் நாட்டின் ஒரு இயக்கத்தின் தலைவனான பிரபாகரனை வேறொரு நாட்டு அதிகாரிகள் கட்டாயப்படுத்தி டில்லிக்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்திருப்பது கடுமையான கண்டனத்திற்கு உரியதாகும். உடனடியாக அவர் விடுவிக்கப்பட்டு நாடு திரும்ப வேண்டும். இந்தியா இவ்வாறு நடந்து கொள்வது இலங்கையின் இறைமைச் சுதந்திரத்தை மீறும் செயல்" எனச் சுட்டிக் காட்டியது. இந் நிலைப்பாடு இந்திய மேலாக்கத்திற்கு எதிரான ஒன்றேயாகும். அதே வேளை, தென்னிலங்கையில் ஜே.வி.பி.யும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் அத்தகைய ஒரு ஒப்பந்தம் உருவாக்குவதை எதிர்த்தனர்.

இவ்வாறு வடக்குக் கிழக்கிலும் தெற்கிலும் எதிர்ப்புக்களைத் தோற்றுவித்திருந்த இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987 யூலை 29ம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இவ்வொப்பந்தத்தில் தமிழர்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக் கூடிய வகையிலான சாதக அம்சங்கள் அடங்கியிருப்பதாக இந்தியத் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் தமிழர் தரப்பில் முழுமையான திருப்தி காட்டப்படாத அதே வேளை, விடுதலைப் புலிகள் இயக்கம் முற்று முழுதாக இவ்வொப்பந்தம் பயனற்றது என நிராகரித்தது. இந்தியாவின் நெருக்குதலினால் உருவாக்கப்பட்ட இவ் ஒப்பந்தத்தை வேறு வழியின்றி ஜே.ஆரும் அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் ஏற்றுக் கொண்டன. ஆனால் கட்சிக்குள்ளும் அரசாங்க உயர் தலைவர்களிடமும் கடும் அதிருப்தி --குறிப்பாகப் பிரதமராக இருந்த ஆர். பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த லலித் அத்துலத்முதலி போன்றோரிடம்-- எதிர்ப்பு இருந்தது. அவற்றை ஜே.ஆர். தனது ஆளுமையால் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். இருப்பினும் அமெரிக்க விசுவாசியான ஜே.ஆர். வேறு வழி எதுவும் தெரியாத நிலையில் இறுதியாக இந்திய ஆளும் வர்க்கத்திடம் சரணடைந்த ஒரு நிலைக்கு உள்ளானார். தாயான இந்திரா காந்தியிடம் சவால் விடும் தோரணையில் நடந்து கொண்ட ஜே.ஆர். அவரது மகனான ரஜீவ் காந்தியிடம் பணிந்து போக வேண்டியதாயிற்று. இதில் இந்திய ஆளும் வர்க்க இராஜதந்திரம் வெற்றி பெற்றது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அடுத்த கணத்தில் ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் தேவைக்கெனக் கூறி இந்தியப்

## இலங்கை இந்திய ஒப்பந்தமும் இந்தியப் படைகளின் வருகையும்

படைகள் இலங்கை மண்ணில் கடலாலும் ஆகாயத்தாலும் புகுந்து கொண்டன. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும் இலங்கையின் வடக்குக் கிழக்கில் அமைதி சமாதானத்தை நிலை நிறுத்தவும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்துள்ளமையை உறுதி செய்யவும் இந்தியப் படைகள் இங்கு வந்துள்ளதாகவே மக்களுக்குக் கூறப்பட்டது. அதற்கேற்றாற் போன்று 'இந்திய அமைதி காக்கும் படை' என்றும் 'இந்திய சமாதானப் படை' என்றும் அழைக்கப்பட்டது. ஆனால் இந்தியப் படைகளின் வருகையும் செயற்பாடும் அவர்களிடம் காணப்பட்ட மனோநிலைகளும் சமாதானம் அமைதி என்பனவற்றுக்கு உரியனவாக இருக்கவில்லை என்பதே உண்மை.

இந்தியப் படைகள் வடக்குக் கிழக்கில் சந்துபொந்துகள் வரை பரந்து முகாம் அமைத்துக் கொண்டன. திருகோணமலை, காங்கேசன்துறைத் துறைமுகங்களும் சீனன் குடா, பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்களும் இந்தியப் படைகளால் நிரம்பியிருந்தன. 50 ஆயிரம் படைகள் என்று கூறப்பட்ட போதிலும், அதன் எண்ணிக்கை ஒன்றரை லட்சத்தைத் தாண்டியிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந் நிலையில் இவ் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கையின் அரசியல் யாப்பிற்குப் 13வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 1987ம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது. இத் திருத்தச் சட்ட மூலமானது மாகாண சபைகள் முறைமையைக் கொண்டு வந்தது. இதில் வேடிக்கை யாதெனில், இனப் பிரச்சினை தீர்வுக்கெனக் கொண்டு வரப்பட்ட மாகாண சபையானது ஒன்பது மாகாணங்களுக்கு உரிய தாக்கப்பட்டது. ஒப்பந்தப்படி வடக்கு கிழக்குத் தனி அலகாக இணைக்கப்பட்டு ஒரு மாகாண சபையாக இயங்க [illegible]கப்பட்டது. ஆனால் ஒரு வருடத்தில் கிழக்கில் இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பு நடாத்தி இணைப்புத் தொடர்வதா அன்றித் தனித்தனி மாகாண சபைகளாக இயங்குவதற்கு இடமளிப்பதா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும் எனப்பட்டது. ஒன்பது அம்சங்களைக் கொண்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டுச் சில நாட்களிலேயே, 1987 ஓகஸ்ட் 4 ஆம் திகதி கூட்டப்பட்ட பகிரங்கப் பொதுக் கூட்டத்தில், ஒப்பந்தத்திற்கான தமது இயக்கத்தின் ஆதரவைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார். இந்திய உயர் தளபதிகளும் அதிகாரிகளும் சமுகமளித்திருந்த அக் கூட்டத்தில் ஆயுதங்களை ஒப்படைக்கவும் இந்தியாவிடம் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பைக் கையளிப்பதாகவும் இந்தியாவை நம்புவதாகவும் பிரபாகரன் ஒப்புக் கொண்டார். ஆனால் இவை யாவும் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் ஏமாற்ற முன்னெடுத்த ஒரு வகை நாடகம் போன்று நடந்தேறியதே அன்றித் தமிழ் மக்களுக்குச் சாதகமானதாக எதுவும் இடம்பெறவில்லை.

அமைதி காக்க வந்ததாகக் கூறப்பட்ட இந்தியப் படைகள் படிப்படியாகத் தமது சுயரூபத்தை வெளிக்காட்ட ஆரம்பித்தன. இந்தியப் படைகளுக்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான முரண்பாடுகள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டுப் பகை நிலை நோக்கி வளர்ந்தன. ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளரான திலீபன் நல்லூர்க் கந்தசாமி கோவில் வீதியில் உண்ணாவிரதம் இருந்த நிகழ்வு இருதரப்புப் பகை நிலை கூர்மையடைவதை எடுத்துக் காட்டியது. அவர்கள் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் இந்தியப் படைகளின் நிறைவேற்றத்துக்கு உரியதாய் அன்றி இலங்கை அரசாங்கத்தின் முடிவுகளுக்கும் நடைமுறைப் படுத்தல்களுக்குமானவையாகவே காணப்பட்டன. அவ்வாறு இருந்த போதிலும். இந்தியத் தூதுவர் ஜே.என். தீக்ஷித் புலிகள் இயக்கத் தலைவரைச் சந்தித்து உறுதி மொழிகளை வழங்கினாராயினும் அது எவ்வகையிலும் பயனளிக்கவில்லை. 1987 செப்ரம்பர் 15ம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்த திலீபன் பன்னிரண்டு நாட்கள் கழிந்த நிலையில் செப்ரம்பர் 26ம் திகதி அன்று மரணமானார். இவ் உண்ணாவிரதமும் மரணமும் புலிகள் இயக்கத்திற்கு பெரும் மக்கள் ஆதரவையும் அனுதாபத்தையும் தேடிக் கொடுத்தன. அதே வேளை, இந்தியப் படைகள் மீதான வெறுப்பையும் விதைத்துக் கொண்டன. அதே போன்று. கிழக்கிலே பூபதி என்னும் பெண்மணி புலிகள் சார்பாக உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். தியாகி திலீபனும் அன்னை பூபதியும் புலிகளால் வருடா வருடம் நினைவு கூரப்பட்டு வந்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்து முறுகல் நிலை வளர்ந்து கொண்டிருந்த சூழலில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து 17 விடுதலைப் புலிகள் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர். அதில் புலிகளின் முக்கிய தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். அவர்கள் அனைவரையும் கொழும்பு கொண்டு சென்று விசாரிக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்த போது அதனைத் தடுத்துக் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க இந்தியத் தளபதிகளாலும் அதிகாரிகளாலும் முடியவில்லை. இறுதியில், 1987 ஒக்ரோபர் 5ஆம் திகதி தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிப் போராளிகள் 17 பேரும் சயனைட் அருந்தி தற்கொலை செய்ய முடிவு செய்தனர். அவர்களுக்கு எப்படி சயனைட் கிடைத்தது என்பது பற்றி, அதனைத் தடுப்புக் காவலில் வைத்து அன்ரன் பாலசிங்கமும், மாத்தையாவும் பார்க்கச் சென்றபோது வழங்கியதாக அல்லது உணவில் கலந்து அவர்களால் கொடுக்கப்பட்டதாகச் செய்திகள் கூறின. இத் தற்கொலை முயற்சியில், குமரப்பா புலேந்திரன் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். மிகுதி 5 பேர் உயிர் தப்பினர். இச் சம்பவத்தோடு இந்தியப் படையும் புலிகள் இயக்கமும் நேரடி மோதலுக்குத் தயாராகின.

1987 ஒக்ரோபர் 10ஆம் திகதியன்று புலிகளை நோக்கிய இராணுவ நடவடிக்கையை இந்திய இராணுவம் ஆரம்பித்தது. இரண்டு மாதம் 10 நாட்கள் வரையில் முகாம்களில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவம் தனது தாக்குதல்களுக்கான யுத்தப் பிரகடனத்துடன் களத்தில் இறங்கியது.

அன்று வரை இந்தியா தாய் நாடென்றும் தொப்புள் கொடி உறவென்றும் தமது தலைவர்களால் பல பத்து ஆண்டுகள் கூறப்பட்டு வந்தவர்களின் பொய்த் தோற்றங்களை மேற்படி தாக்குதலின் ஆரம்பம் உடைத்தெறிந்து இந்தியப் படைகளின் கோர முகங்களையும் பற்களையும் தமிழ் மக்கள் நேரடியாகக் காணும் சந்தர்ப்பத்தை வழங்கியது.

இவ்விடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டுவது அவசியமானது. இந்தியா இலங்கையில் தலையிடுவது தமிழர் நலன்கள் காப்பதற்கல்ல, தனது பிராந்திய மேலாதிக்க நலன்களைப் பாதுகாக்கவே என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. மாக்சிச



லெனினிசக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஆகும். 1987ம் ஆண்டு யூலை 29இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் படைகள் வந்திறங்கிய போது அதனை எதிர்த்து துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் வெளியிட்ட கட்சி, இந்தியப் படைகளை வெளியேறும்படி கண்டன வற்புறுத்தல் செய்து நின்றது. மேலும் இந்தியப் படைகளை வெளியேறக் கோரியும் தமிழ் மக்கள் மீதான தாக்குதல் இடம்பெறக் கூடிய அபாயத்தை முன்னெச்சரித்தும் ஒரு பெரும் பகிரங்கக் கண்டன எதிர்ப்புக் கூட்டத்தை கட்சி நடாத்தியது. அக் கூட்டம் பலாலி ராணுவத் தளத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த புத்தூரில் பெருந் தொகையான மக்களின் பங்கேற்புடன் இடம் பெற்றது. அக் கூட்டத்திற்கு அன்றைய பொறுப்புச் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்ரமணியம் தலைமை தாங்கினார். தோழர்கள் சி.கா. செந்திவேல், க. தணிகாசலம், சோ. தேவராஜா உட்படப் பல தோழர்கள் உரையாற்றினர். இக் கூட்டம் அன்றைய சூழலில் தமிழ் மக்கள் எதிர் கொண்டிருந்த அபாயங்களையும் இந்தியாவையும் அதன் படைகளையும் தோரணம் கட்டிக் கும்பம் வைத்து. வரவேற்ற புலிகள் உட்பட்ட தமிழத் தலைமைகளின் இந்திய விசுவாசத்தையும் அரசியல் அறிவீனத்தையும் அம்பலப்படுத்தியது. அதன் பின்னான அரசியல் ராணுவ நடவடிக்கைகளின் போக்கு எவ்வாறு இருந்தது என்பதை அடுத்து நோக்குவோம்.

# அபிவிருத்தி அரசியல்



"இன்றைய நிலையில் தமிழ் மக்கள் முதன்மைப் படுத்த வேண்டியது அபிவிருத்தி என்பதை மட்டுமேயாகும். அதாவது மீள் குடியேற்றம், புனரமைப்பு, புனர்வாழ்வு என்பன இவ் அபிவிருத்தி என்பதற்குள் அடங்கியுள்ளதால் அதற்கு அப்பால் எதுவும் அவசியமற்றவை என்பதாகும். பேரவலங்கள் பேரழிவுகள் பட்டு நொந்து நொடிந்து போயுள்ள தமிழ் மக்கள் மத்தியில் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்பு அரசியல் நடாத்துவது அர்த்தமற்றதாகும்" என்பதே இவ் அபிவிருத்தி அரசியலை முன் வைப்போரின் தர்க்கமாகும்.

இந்த அபிவிருத்தி அரசியலுக்குப் பின்னால் பல்வேறு மறைக்கப்பட்ட முகங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இருந்து வருகின்றன என்பது ஆழ்ந்து அவதானிக்க வேண்டியதாகும். தமிழ் மக்களைக் குறிவைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற போர்வைக்குள் அரசாங்கம் கிள்ளிப் போடும் அற்ப உதவிகள், அவற்றை ஏந்தி மக்களுக்குக் கொடுப்பதாகக் கூறும் சலுகை அரசியல்வாதிகள், அந்நிய-உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், மூலதனமிடும் உள்நாட்டு முதலாளித்துவ நிறுவனங்கள், வளங்களை வாரி அள்ளிச் செல்ல நிற்கும் பல்தேசிய ராட்சத நிறுவனங்கள், அரச-தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் போன்றன முன் நிற்கின்றன.

இவை அனைத்தும் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்களில் இறால் போட்டுச் சுறாப் பிடிக்கும் வேலையைத்தான் செய்து வருகின்றன. இதனால் ஒரு சிறு பகுதி நன்மை மக்களின் ஒரு சிறு பகுதியினருக்கு மட்டும் சென்றடைகின்றது. ஆனால், அதனை விளம்பரக் காட்சிப்படுத்தலாக்கி எல்லா மக்களுக்கும் நன்மைகளும் பலாபலன்களும் கட்டாயம் கிடைக்கும் என்ற ஒருவகை எதிர்பார்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு இவ் அபிவிருத்தி உதவிக்குள் அல்லது சலுகை கைகளுக்குள் உள்ளீர்க்கப்படும் மக்கள் ஏதோ ஒரு வழியில் சுரண்டப்படுகின்றனர். அல்லது ஏமாற்றப்படுகின்றனர். உண்மையில் இடம் பெறுவது ஆளும் வர்க்க அல்லது அரசாங்க சார்பு நடவடிக்கைகளும் அத்துடனான முதலாளித்துவ சுரண்டல் நடைமுறைமயாகும்.

உதாரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படும் போது அவர்களது புனரமைப்பு புனர்வாழ்வுக்கு வழங்கப்படும் பணம் பொருட்களின் அளவும் தரமும் எத்தகையது. இன்றைய வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பின் மத்தியில் முதலில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் ஐயாயிரம் ரூபாவும். 1200 ரூபா பெறுமதியான வாராந்த (ஒழுங்காக இல்லை) உலர் உணவும் மட்டுமேயாகும். ரூபா 25 ஆயிரம் என்பது எல்லோருக்கும் கிடையாது. சில இடங்களில் ஐ.நா.. அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஒரு சில திட்டங்கள் இருந்து வருகின்றன. அதே வேளை இவற்றால் தத்தமது பைகளை நிரப்புவோர் ஏராளம் பேரவர்.

இவற்றுடன் அரசாங்கத்தில் அக் கட்சியின் பட்டியலில் வெற்றி பெற்ற ஈ.பி.டி.பி. வடக்கிலும், கருணா, பிள்ளையான் கிழக்கிலும் அபிவிருத்தியின் பெயரால் சலுகைகளுக்கு வாக்குறுதியளித்து அங்கொன்று இங்கொன்றாகச் செய்து வருவதும், அபிவிருத்தி என்றே அழைக்கப்படுகிறது. யுத்தம் முடிந்தவுடன் ஜனாதிபதி மிக ஆடம்பரமான வசனங்களுடன் "இனிமேல் நமக்கு முன்னால் இருப்பது அபிவிருத்தி காணும் சவால் மட்டுமே" என்றார். இதனை நம்பி புலம் பெயர்ந்த நாடுகளில் புலிகளை எதிர்த்து வந்த பல புத்திஜீவிகள் இங்கு தமிழ் மக்களுக்கு சேவை செய்யவென வந்தனர். ஊடகங்களில் பரப்புரைகள் செய்தார்கள். மகிந்த சிந்தனைக்கு கை கொடுத்துப் பலம் சேர்க்க வேண்டும் என்றார்கள். இன்னும் தங்களை இடதுசாரிகள், ஜனநாயகவாதிகள் எனக் கூறி வந்த புத்திஜீவிகள் தமது அறிவாற்றலை தமிழ் மக்களுக்கு

**அ. பூபதி**

அபிவிருத்தியின் பெயரால் வழங்க டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து செயற்படத் திட்டங்கள் பல வரைந்து கொடுத்து மும்முரம் காட்டினர். மனதார நம்பியவர்களும் நம்பி நின்றவர்களும் இன்றும் தாம் எதிர்பார்த்த அபிவிருத்தி இடம்பெறாமல் நடுத்தெருவுக்கு வந்தது போன்ற உணர்வுடன் இருந்து வருவதையிட்டு விரக்தியும் அதிருப்தியும் அடைந்து நிற்கின்றனர். இதற்கு காரணம் இலங்கையின் அரசியல் யதார்த்தத்தையும் அதன் சுயரூபத்தையும் புரிந்து கொள்ளாமை தான். சற்றுத் தூர நின்று பார்த்தால் இவ் அபிவிருத்தி அரசியல் என்பது தற்காலத்திற்குப் பொருந்தக் கூடியது. அவசியமானது என்றே தோன்றும். ஆனால் கிட்ட வந்து உள்ளே சென்று பார்க்கும் போதே அதன் மோசமான செயற்பாடுகளும் ஒழுங்கற்ற போக்குகளும் இயலாமைகளும், ஊழல்களும் ஒவ்வொன்றாகக் கண்களுக்குத் தெரியவரும். எல்லாம் வாக்கு வங்கிக்கும், அதிகார ஆதிக்கத்திற்கும் நிலைப்பிற்குமாகவே மக்களுக்கு அபிவிருத்திக் கோலம் காட்டப்படுகின்றன.

கடந்து வந்த பேரழிவுகளுக்குப் பின் மக்களின் தேவைகள் அதிகரித்துள்ளன. தமது இழப்புகளில் இருந்து மீள வேண்டியுள்ளனர். அத்தகைய மக்களை சலுகை அரசியலுக்குள் அகப்படுத்தி தமது ஆதிக்க அதிகாரப் பிடிக்குள் வைத்திருக்க எவர் முற்பட்டாலும் அது தவறு தவறேயாகும். இன்று ஈ.பி.டி.பி. தொடக்கம் ஈரோஸ் வரை அனைத்துத் தமிழ் இயக்கங்களும் (தமிழ் அரங்கக் கட்சிகள்) துப்பாக்கி அரசியல் மூலமான அதிகார ஆதிக்க மனப்பாங்கில் ஊறி வளர்ந்து அதனை ஒருவகைத் தொழிலாக நிரந்தரப்படுத்திக் கொண்டவைகளே. இதற்கு பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் இந்தியாவும் தீனி போட்டு வளர்த்து வந்தன என்பது இரகசியமல்ல. இதன் நீட்சியை இன்றுவரை திடீர் கொலைகள், வன்புணர்ச்சிகள், கப்பம் பெறுதல், மிரட்டல்கள், வாய் வன்முறைகள், நடை உடை பாவனை போன்றவற்றில் காண முடிகிறது. இவற்றையெல்லாம் முன்பு புலிகளும் இவர்களும் விடுதலையின் பெயரால் செய்தனர். இப்போது புலிகள் அழிந்து போன நிலையில் ஏனையவர்கள் அபிவிருத்தியின் பெயரால் செய்து வருகின்றனர்.

இவற்றுக்கு அப்பால் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி என்பதில் அரசாங்கம் காட்டும் அக்கறையும் தூரநோக்கும் வேறுபட்டதும் அபாயகரமானதுமாகும். அவர்களது அபிவிருத்தி முழக்கத்தில் தமிழ்த் தேசிய இனம் சனத்தொகையிலும் பிரதேசத் தொடர்ச்சியிலும் ஒன்றிணைந்த ஒரு இனத்துவ வளர்ச்சியுடன் இருப்பதை மறுப்பதாகும். அதன் அடிப்படையில் ஏற்கனவே வடக்குக் கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அத்துடன் கிழக்கு தமிழ்-முஸ்லிம்-சிங்கள அடிப்படையில் பிரிக்கப்பட்டு வருவதுடன் நிலப் பறிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் கிழக்கின் வளங்கள் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கேள்வி நியாயமின்றி தாரை வார்க்கப்படுகின்றன. இவை அபிவிருத்தியின் பெயரால் தான் செய்யப்படுகின்றன. இவற்றுடன் பௌத்த சிங்களத் திணிப்பும் அடையாளப்படுத்தலும் அவற்றுக்கு திரிபுபடுத்தப்பட்ட வரலாற்று விளக்கங்களும் வழங்கி விகாரைகள் எழுப்பப்படுகின்றன. இதன் வேகமான வேலைகளை வடக்கில் முன்னெடுத்து அங்கு அபிவிருத்தியின் பெயரால் இனமத ஊடுருவல்கள் செய்யப்படுகின்றன. இதில் அரசாங்க நிர்வாக ரீதியில் குடாநாடு வகித்து வந்த முக்கியத்துவம் சிதைக்கப்படுவதற்கான திட்டங்கள் வலுவடைகின்றன. அபிவிருத்தியின் பரவலாக்கல் என்னும் பெயரில் கிளிநொச்சியை -- மாங்குளத்தோடு -- முக்கியத்துவப்படுத்திய அபிவிருத்திக்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இதில் அபிவிருத்தியானது மக்களின் அடிப்படைத் தேவை என்பதற்கு அப்பால் பேரினவாத இருப்பின் எதிர்காலமே பிரதான கணக்கில் கொள்ளப்படுகிறது. ஆளும் வர்க்க அரசாங்கத்தின் தற்போதைய போக்கிற்கு விரும்பியோ விரும்பாமலோ அன்றி நிர்பந்தத்தாலோ தமிழ்க் கட்சிகள் ஆமாம் போட்டு அல்லது மௌன அங்கீகாரம் வழங்கி நிற்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதையும் செய்ய இயலாத்தனத்தில் இந்தியாவிடம் இடையிடை முறையிடுவதைத் தவிர வேறு வழி இன்றி இருந்து வருகிறது. அவர்கள் தமிழ் மேட்டுக் குடியினரின் பிரதிநிதிகள் என்பதால் சாதாரண உழைக்கும் தமிழ் மக்கள் பற்றி அவர்கள் அக்கறை கொள்ள வேண்டியதில்லை.

அரசாங்கம் எல்லாத் தரப்பையும் ஏதோ ஒருவகையில் மிரட்டி அச்சுறுத்தி சலுகை வழங்கி முதுகில் தட்டி தன் ஆளும் வர்க்க நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி நிற்கிறது. அதேவேளை வடக்கு கிழக்கில் எவ்வித அரசியல் கோரிக்கைகளோ அன்றி எதிர்ப்பு இயக்கங்களோ முன் எழும்பாதவாறு பார்த்துக் கொள்வதில் ராணுவப்பிடியை வலுப்படுத்தியும் நிற்கிறது. ஆனால் நாளாந்தம் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களும் அபிவிருத்தியின் பெயரால் உடனடிப் பாதிப்புகளை மட்டுமன்றி எதிர்கால இருப்பையும் இழந்து வரும் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

இதே நிலைதான் இந்த அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளையும் சலுகைகளையும் வாங்கிக் கொண்டு தமது மக்களுக்குப் புறமுதுகு காட்டி வரும் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தலைமைகள் தமது மக்களுக்குச் செய்வதாக உள்ளது. முஸ்லீம் மக்களும் குறிப்பாக மலையக மக்களும் அபிவிருத்தியின் பெயரால் எவற்றைப் பெற்றார்கள் என ஒரு புள்ளி விபர மதிப்பீட்டை எடுத்தால் அங்கு உண்மைகள் வெளிச்சத்திற்கு வரவே செய்யும்.

எனவே அபிவிருத்தியின் அற்ப சொற்பத்தை அனுபவித்து அதற்குள் மூழ்கித் தமது சுயத்தையும் எதிர்காலத்தையும் தமிழ் மக்கள் இழந்து கொள்ள வேண்டுமா? அல்ல இதுவரையான பட்டறிவுகள் மூலமான அரசியல் மார்க்கத்தை மறுமதிப்பீடு செய்து புதிய அரசியல் பாதையில் பயணிப்பதா? மக்கள் தான் தீர்மானிக்க வேண்டியவர்கள். அபிவிருத்தியின் பெயரில் நமது மக்களின் மத்தியில் திணிக்கப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும் உடனடியானதும் தூரநோக்குடனுமான கண்ணோட்டம் செலுத்தப்பட வேண்டும். நல்லனவற்றை வரவேற்க வேண்டும். தீய விளைவுகட்கும் அழிவுகட்கும் இட்டுச் செல்லக் கூடிய ஒவ்வொன்றையும் எதிர்த்து நிற்க வேண்டும்.

---

5ம் பக்க தொடர்ச்சி

## 18வது திருத்தம்

போட்டியிடலாம் எனத் திருத்தம் கூறுகிறது. அத்துடன் இரண்டாவது தடவையிலான பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் கழிந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தும் அதிகாரத்தை இத் திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்குகிறது.

மேலும் அத் திருத்தத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி பங்கு கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது. ஏகபோக அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி யிடம் கேள்வி கேட்கவோ எதிர்க்கவோ கூடிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகும். அப்படிக் கேள்வி எழுப்பி னாலும் அவற்றால் ஆகப் போவது எதுவும் இருக்கமாட்டாது. பத்துப் பேர் கொண்ட அரசியலமைப்புச் சபை (இது 17வது திருத்தத்தினால் கொண்டு வரப்பட்டது) ஐந்து உறுப்பினர்களாகச் சுருக்கப்பட்டு அதன் நியமனங்கள் ஜனாதிபதியின் கரங்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ் அரசியலமைப்புச் சபையில் தேசிய சிறுபான்மை இனத்தவர்களுக்கும் வேறு கட்சிகளுக்கும் இருந்து வந்த இடம் மறுக்கப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், பதவி நீக்கம், ஒழுங்காற்று நடவடிக்கைகள் யாவும் அமைச்சரவைக்கும் அமைச்சர்களுக்கும் வழங்கப்படுகிறது. இவ் வாறு ஏனைய அம்சங்களும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்கும் கண்காணிப்புகளுக்கு மட்டுமன்றி எவ்வித கேள்வி நியாயமும் இன்றி ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும் விதமா கவே திருத்தத்தில் கூறப்பட்டுள்ளன.

மேற்படி திருத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்த்த போதிலும் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் நடவடிக்கை எதனையும் முன்னெடுக்கவில்லை. ஜே.வி.பியினர் தமது பங்கிற்கு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைப் பாராளுமன்றம் வரை நடாத்தினர். இதில் பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டமை மூலம் மக்களின் எதிர்ப்புணர்வின் அளவைக் காண முடிந்தது. மேலும் சில இடதுசாரி தொழிற்சங்கங்களும் பிற அமைப்புக்களும் தமது சக்திக்கேற்ற எதிர்ப்புக்களை பல்வேறு நிலைகளின் ஊடாகத் தெரிவித்தன. அவை எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் எவ்வித எதிர்ப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ முஸ்லீம் கட்சிக ளோ மலையகத்தின் ஆதிக்க தொழிற்சங்க அரசியல் கட்சிகளோ முன்னெடுக்கவில்லை. அவை யாவும் அரசாங்கத்திற்கு துணை நிற்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தனது இந்திய எசமானைப் பகைக்காத அளவுக்கும் மக்களிடம் இருந்து தனிமைப்படாதவாறும் நடந்து கொண்டது. இப் பதினெட்டாவது திருத்தச் சட்டமானது தனிநபர், தனிக்கட்சி, தனிக் குடும்பத்தின் ஆதிக்க அரசியலுக்கும் சர்வாதிகாரப் பிடிக்கும் வலுச் சேர்ப்பதாகவே அமையும். இது விரைவாகவே ஃபாசிச சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயம் இல்லை. பிலிப்பீன்சின் மார்க்கோஸ். இந்தோனேசியாவின் சுகார்த்தோ, சிலியின் பினோஷே போன்றவர்களின் வழியில் செல்வதற்கு ஆரம்பப் படிக்கல்லாகவே பதினெட்டாவது திருத்தம் அமையப் போகிறது. இதற்கு ராணுவ மயமாக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் அரணாக அமையும் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை. ஊடகங்கள் ஊமையாக்கப்பட்டு வருவதுடன் மிரட்டல் அணைத் தல் என்னும் இரண்டு வித அணுகு முறைகள் பின்பற்றப்படு கின்றன. யாவற்றுக்கும் அவசர காலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்வது உறுதி செய்யப்படுகிறது.

இவ்வாறு ஜனாதிபதியிடம் குவிக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகார வலுப்படுத்தல் என்பது நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமை களுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நியாயமான கோரிக் கைகளுக்கும் பெரும் அபாயங்களையே ஏற்படுத்தும். யாரும் வாய் திறக்கவோ தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி வீதியில் இறங்கவோ முடியாத சூழலே தோன்றியுள்ளது. இதற்கான ஒரு ஆரம்ப உதாரணமே பதினெட்டாவது திருத்தத்தை எதிர்த்து ஜனாதிபதியின் படத்துடன் வெளியிடப்பட்ட ஒரு சுவரொட்டியை அச்சிட்ட அச்சக உரிமையாளர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட சம்பவமாகும். இவ்வாறான ஃபாசிச நடைமுறைகளைக் கொண்ட திருத்தங்கள் எதிர்காலத்தில் பத்தொன்பது இருபது என நீண்டு செல்லவே செய்யும். நாட்டின் உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் விழிப்புறாத வரை ஆளுவோர் தமது பம்மாத்து அரசியல் மூலம் மக்களை ஒடுக்கவே செய்வர். எனவே நிறை வேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிப் பதவியை உறுதி செய்து வலுப்படுத்தி வரும் இன்றைய அரசியலமைப்பு முற்று முழுதாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். இதனை முன் வைத்து மக்கள் அணி திரண்டு ஜனநாயகத்திற்கான கோரிக்கையாக முன்னெடுக்க வேண்டும்.

---

## நான் லஞ்சம் வாங்குகின்றேன் முடிந்தால் பிடித்துக்காட்டுங்கள் என்று சவால்

அட்டன் பிரதேசத்தின் பிரபல பாடசாலையொன்றின் அதிபர் நான் லஞ்சம் வாங்குகின்றேன் முடிந்தால் பிடித்துக்காட்டுங்கள் என்று சவால் விடுத்தள்ளார் அன்மையில் மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பது தொடர்பான வாய்த்தர்க்கம் ஒன்று பாடசாலையில் பிள்ளையைச் சேர்க்க வந்த தாயொருவருக்கும் அதிபருக்கும் ஏற்பட்ட போதே மேற்படி சவால் விட்டதாக குறிப்பிட்ட தாயார் புதிய பூமி செயற்பாட் டாளர்களிடம் கூறியுள்ளார்.

திட்டம் போட்டு திருடுர கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது அதை சட்டம் போட்டு தடுக்குர கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது என்று பட்டுக் கோட்டையார் எழுதி வைத்தது இந்த அதிபருக்காக என்று அட்டன் வாழ் மக்கள் கூறுகின்றனர்

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 28

## மலையக அரசியல் துயில் கலைகிறது

1948ம் ஆண்டு மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் பின்னர் மலையக அரசியல் இலங்கையின் பிரதான அரசியல் நீரோட்டத்திலிருந்து மெல்ல மெல்ல விலகலானது. மலையகத் தமிழரை இந்திய வம்சாவழியினர் என்று அடையாளப்படுத்தி வந்ததன் பாதகமான விளைவுகளை உணர்ந்ததால், 1939இல் உருவான இலங்கை இந்திய காங்கிரஸ் என்று அறியப்பட்ட அமைப்பு, 1950 தொட்டுத் தன்னை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என அழைத்துக் கொண்டது. இது முற்போக்கான ஒரு நடவடிக்கையாக இருந்த போதும், இ.தொ.கா. உருவான பின்பு அதற்குள் இருந்து வந்த பிற்போக்குக் குழுவொன்று எஸ். தொண்டமான் தலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகளில் இறங்கியது. அதன் விளைவாக ஏற்பட்ட பிளவு, 1956இல் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற அமைப்பின் தோற்றத்திற்கு வழி வகுத்தது. அதன் தலைவராக அஸீஸ் இருந்தார். பாராளுமன்ற அரசியலிலிருந்து புறமொதுக்கப்பட்ட பின்பு, இ.தொ.காவுக்கும் அதிலிருந்து பிரிந்த ஜ.தொ.காவுக்கும் தொழிற் சங்க வேலைகளே முக்கியமாகின.

* இடதுசாரி இயக்கம் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பல போராட்டங்களை முன்னெடுத்தே தன்னைக் கட்டி எழுப்பியது. எனினும் 1940ம் ஆண்டு சமசமாஜக் கட்சியிலிருந்து 'ஸ்டாலினியவாதிகள்' என்று அழைக்கப்பட்ட கம்யூனிஸ்ட்டுக்கள் விலக்கப்பட்டதால் ஏற்பட்ட பிளவு 1938ல் இடதுசாரிகள் உருவாக்கிய அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தைப் (ACEWU) பலவீனப்படுத்தியது. 1956ல் அது லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கமாகியது (LEWU). 1944ம் ஆண்டு கம்யூனிஸ்ட்டுக்கள் நிறுவிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் (CPWU) 1949-50 அளவில் இடது தீவிரப் போக்குக்களால் மிக நலிந்து 1957க்குப் பின் மீளக் கட்டியெழுப்பப்பட்டது. இடதுசாரித் தொழிற் சங்கங்கள் மலையகத்தின் தேயிலைத் தோட்டங்களிலும் சிங்களத் தோட்டத் தொழிலாளரும் மலையகத் தமிழரும் ஒப்பிடத்தக்க அளவில் தொழில் செய்து வந்த ரப்பர்த் தோட்டத் துறையிலும் குறிப்பிடத்தக்க வலிமையுடனேயே செயற்பட்டு வந்தனவும். இடதுசாரிக் கட்சிகளின் அரசியல் வேலைகளை விடத் தொழிற்சங்க வேலைகட்களுக்கே கூடிய முக்கியத்துவம் இருந்து வந்தது. ஏனென்றால் சமசமாஜக் கட்சித் தலைமையையும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையையும் பாராளுமன்ற அரசியலிற் கூடிய அக்கறை காட்டியதால் மலையகத் தமிழரிடையே பாராளுமன்ற அரசியல் வேலைகளுக்கு இடமில்லாத நிலையில் தொழிற்சங்க வேலைகளே முதன்மை பெற்றன. தென்னிலங்கையில் இடதுசாரிகளின் அரசியலில் பாராளுமன்றப் பாதை அவர்களது வெகுசன அரசியலை வளர இயலாது தடுத்தது போல மலையகத்தின் பின்தங்கிய கல்விப் பொருளாதார அரசியற் பின்னணியில் பாராளுமன்ற அரசியல் இல்லாது போன போது மக்கள் போராட்ட அரசியலை முன்னெடுக்க இடதுசாரித் தலைமைகள் தவறின. அதற்கு ஏதுவாக, மலையகத் தழிழர் நடுவே குறுகிய இனவாத அரசியலும் முன்னெடுக்கப்பட்டது.

* இ.தொ.கா. தனது தொழிற்சங்க அமைப்பைக் கட்டிக் காப்பதற்குப் பயன்படுத்திய நடைமுறைகள் நிலவுடைமைச் சமூகத்தின் பண்புகளையும் கொண்டிருந்தன. தோட்டங்களில் ஒவ்வொரு பிரிவுகளிலும் இருந்த செல்வாக்குள்ள சிலருடைய கைகளிலேயே தொழிற்சங்க உறுப்பினர்கள் சிக்கிக் கிடந்தனர். தோட்டங்களுக்குள், வெளியிலிருந்து எவரும் போகவும் வரவும் இருந்து வந்த நிர்வாகக் கட்டுப்பாடுகளும் மக்களின் பின்தங்கிய கல்வியும் அரசியல் விழிப்புணர்வும் காரணமாகத் தேயிலைத் தோட்டங்களிற் பெரும்பாலானவற்றில் இ.தொ.கா. ஆதிக்கம் மேலும் வலுப் பெற முடிந்தது. 1956 இல் தொடங்கிய ஜ.தொ.கா. சிலகாலம் வலிய தொழிற்சங்கமாக இருந்தது. அதற்கெதிராக அஸீஸின் இந்திய முஸ்லிம் அடையாளமும் பல்வேறு சூழ்ச்சிகளும் பயன்பட்டன. 1960ம் ஆண்டு சிரிமா பண்டாரநாயக்கா தொண்டமானைப் பாராளுமன்றத்தின் நியமன உறுப்பினராக்கியதையொட்டி இ.தொ.கா தனது தொழிற்சங்கத் தளத்தை மேலும் வலுப்படுத்திக் கொண்டதுடன் தொண்டமான் அதன் முடிசூடா மன்னனாகத் தன்னை நிறுவிக் கொண்டார்.

* இ.தொ.கா.வின் அரசியல் தொண்டமானின் தலைமையின் கீழ் முற்றுமுழுதாகவே அரசியல் காய் நகர்த்தல் அரசியலாகவே இருந்து வந்தது. யூ.என்.பிக்கும் குடியுரிமை சட்டத்திற்கும் இருந்த நேரடியான தொடர்பின் காரணமாக மலையகத்தில் நேரடியாக யூ.என்.பியை ஆதரிக்கும் வாய்ப்பு இருக்கவில்லை. யூ.என்.பி. முதலில் ரப்பர்த் தோட்டங்களில் தொடங்கிய தொழிற்சங்கம் தேயிலைத் தோட்டத் துறையில் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தன. இ.தொ.கா. முதலில் எதிர்நோக்கிய போட்டி வலுவானதாக இருந்தது. அஸீஸின் பின்னால் தொழிற்சங்க வேலைகளிற் பழக்கப்பட்ட ஒரு வலிய அணி இருந்தது. அஸீஸிற்கு எதிரான வட இந்திய முஸ்லிம் என்ற பிரசாரத்தை விட அஸீஸ் ஒரு இடதுசாரியாக அல்லது ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு அனுதாபமான ஒரு முற்போக்காளராக அடையாளப்பட்டதும் அவருடைய தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் வளர்ச்சிக்கு உதவவில்லை. எனினும் தொண்டமான் தலைமைக்கு எதிரான ஒரு முற்போக்கு சக்தியைக் கட்டியெழுப்புவதற்கு மாறாக இந்திய வம்சாவழித் தழிழர் எனப்பட்ட மலையகத் தமிழரின் வாக்கு வலி மையைக் கொண்டு பாராளுமன்ற ஆசனங்களை வெல்ல லாம் என்ற எதிர்பார்ப்பில் இ.தொ.காவும் ஜ.தொ.காவும் இணைந்து 1960 மார்ச் மாதத் தேர்தலில் நாலு தொகுதிகளில் போட்டியிட்டுத் தோற்ற பிறகு, அந்த இணைவு முறிந்தது. அது போக, இ.தொ.காவுக்கு மாற்றான ஒரு தொழிற்சங்கமாக ஜ.தொ. காவின் நம்பகத்தன்மையும் சரிந்தது.

* 1948-50இல் கம்யூனிஸ்ற் கட்சியில் இடது தீவிரப் போக்கு ஓங்கியிருந்ததால் அது தென்னிலங்கையில் பின்னடைவுகளைச் சந்தித்தது. மலையகத்திலும் அதன் தொழிற்சங்க வேலைகள் பாதிக்கப்பட்டன. தன் தொழிற்சங்கத் தொடர்புகளை வலுப்படுத்திப் பேணுமுக மாகக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து செயற்பட ஊக்குவிக்கப்பட்டனர். 1957 முதல் அக் கட்சியின் தலைமையிலான இலங் கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் தன் செயற்பாடுகளை ஊக்கத்துடன் முன்னெடுத்த போது, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்த நா. சண்முகநாதனின் வழிகாட்டலில், அச் சம்மேளனத்தின் ஒரு அங்கமான இ.தோ.தொ.ச.. அரசியல் உணர்வுடைய ஒரு சக்தியாக விருத்தி கண்டது. அதன் விளைவாக 1960 அளவிலிருந்து அது மக்கள் மத்தியில் செங்கொடிச் சங்கம் என்றே அறியப்பட்டது. அது முன்னெடுத்த போராட்டங்களில் இ.தொ.கா. பங்குபற்ற வேண்டிய அளவுக்கு அதன் பணிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருந்தது.

* மலையகத்தின் எல்லாத் தோட்டங்களிலும் செங்கொடிச் சங்கம் தன்னை முதன்மையான தொழிற்சங்கமாக நிறுவக் கூடிய அரசியல் விழிப்புணர்வு இல்லாத போதும் 1960களில் செங்கொடிச் சங்கமே மலையகத்தின் பிரதான தொழிலாளர் உரிமைப் போராட்ட சக்தியாக விளங்கியது. இதைப் பற்றி 1960களின் இடைப் பகுதியில் அரசியல் பற்றிப் பேசும் போது சற்று விரிவாக நோக்கலாம்.

* தொண்டமானின் காய் நகர்த்தல்களால் இடதுசாரித் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியைப் பெரிதும் கட்டுப்படுத்த இயலாது போனாலும், இ.தொ.கா. பிரதேசவாதச் சிந்தனைகளையும் பின்னர் சாதி அரசியலையும் பயன்படுத்தித் தனக்கு எதிராக எழுந்த போட்டிகளைச் சமாளிக்க முற்பட்டது. 1965 ஆம் ஆண்டு வரை தொண்டமானுடன் ஒத்துழைத்த வி.கே. வெள்ளையன் 1965இல் வெளியேறியதற்கும் அவருடைய தலைமையில் தேசிய தொழிலாளர் சங்கம் உருவானதற்கும் இ.தொ.காவின் சாதி அரசியலுக்கு ஒரு பங்குண்டு.

* மலையகத்தில் மக்களுக்கு அரசியல் விழிப்பூட்டுகிற பணி கம்யூனிஸ்ட்டுக்களால் பொறுப்புடன் முன்னெடுக்கப்பட்டது. முக்கியமாகக், கம்யூனிஸ்ட் கட்சியே மலையகத் தொழிலாளரை அரசியல் மயப்படுத்துவதில் குறிப்பான கவனம் செலுத்தியது. அதே வேளை இன்று மிகைப்படுத்திப் பேசப்படும் திராவிட இயக்க அரசியல் பற்றியும் சிறிது குறிப்பிடுவது தகும்.

* தமிழகத்தின் ஈ.வெ.ரா (பெரியார்) முன்னெடுத்த சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்கள் இலங்கையில் தமிழ் இளைஞர்கள் பலரைக் கவர்ந்தன. எனினும் வடக்கு-கிழக்கிலும் மலையகத்திலும் அந்தக் கவர்ச்சி ஏற்பட்ட காலமும் சூழலும் வேறுபட்டிருந்தன. வடக்கு - கிழக்கில் அக் கவர்ச்சிக்கு உட்பட்டவர்களில் ஒரு பகு தியினர் திராவிட அரசியலின் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியவாத அரசியலிலும் தமிழரசுக் கட்சியிலும் 1950களில் ஈடுபடலாயினர். பெரியாரின் முற்போக்கான சாதிய விரோத, ஆணாதிக்க விரோத, சீர்திருத்த, சமத்துவச் சிந்தனைகளால் கவரப்பட்டோர் இடதுசாரி அரசியலில் இறங்கினர். வடக்கில் இடதுசாரி அரசியலுக்கு வாய்ப்பாகக் கல்வியறிவின் பரவலாக்கலும் நடைமுறையிலிருந்த கட்சி அரசியலிலும் திராவிட இயக்கத்தின் தர்க்க ரீதியான முடிவுகளை நோக்கிப் பலரை நகர்த்தியது போல மலையகத்தில் நிகழவில்லை.

* 1948ம் ஆண்டு வாக்குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்ட, கல்வியறிவிற் பின் தங்கிய, பழமைவாதத்தில் ஊறிக் கிடந்த ஒரு மக்கள் திரளினரிடையே தேசிய அரசியலை முன்னெடுக்க அங்கிருந்த பெரிய தொழிற்சங்கத் தலைமைகள் ஆயத்தமாயிருக்கவில்லை. அதைவிட, மலையகத்தில் அரசியற் பணி செய்வதற்குத் தொழிற்சங்கம் என்ற தளம் மிக அவசியமானதாக இருந்தது. எனவே, திராவிட இயக்கக் கவர்ச்சிக்கு உட்பட்ட படிப்பறிவுடைய இளைஞர்களது செயற்பாடுகள், சீர்திருத்தச் சிந்தனைகளைப் பரப்புகிற சமூக-பண்பாட்டுத் தள வேலைகட்கு வரையறுக்கப்பட்டு விட்டன. அங்கு திராவிட இயக்கம் பற்றிய அக்கறை மேலோங்கிய காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் அதனோடு ஒட்டிய சினிமாக் கதை வசனக் கவர்ச்சியும் பெற்ற செல்வாக்கின் அளவுக்குப் பெரியாரின் சமூகச் சீர்திருத்த, பகுத்தறிவுவாதச் சிந்தனைகள் செல்வாக்குப் பெறவில்லை. எனவேதான் திராவிட முன்னேற்றக் கழகங்களும் அவற்றை ஒட்டிய அமைப்புக்களும் தோற்றம் பெற்று வளர்ந்தது போல திராவிடர் கழகம் ஒன்று வளர முடியவில்லை.

* இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை 1956க்குப் பிறகு கண்ட முக்கியத்துவமும் 1958ம் ஆண்டின் இனக்கலவரமும் மலையகத்தில் சிறிது விழிப்புணர்ச்சிக்குக் காரணமானாலும், மக்கள் மத்தியிலான அரசியல் வேலைகள், 1960களின் முற்பகுதி வரை, கம்யூனிஸ்ற்றுக்களின் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசங்களில் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. வெறுமனே தொழிற்சங்க வேலைகளில் கவனஞ் செலுத்திய இ.தொ.கா., கம்யூனிஸ்ட்டுக்களின் வளர்ச்சியை ஒரு சவாலாக நோக்கினாலும் அரசியல் ரீதியாக அதனிடம் ஒரு மாற்று வழியும் இருக்கவில்லை.

* வடக்கு கிழக்கில் தமிழரின் பிரதான அரசியற் கட்சியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட தமிழரசுக் கட்சி தனது போராட்டங்களுக்கு மலையகத் தமிழரின் ஆதரவு இருப்பது பயனுள்ளது என்று கருதியது. 1960-61ல் தொண்டமானிடமும் இ.தொ.காவிடமும் தமிழரசுக் கட்சி எதிர்பார்த்த ஆதரவு கிடைக்காததால், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மலையகத்திலும் தங்களது தொழிற்சங்கமொன்றை நிறுவ முற்பட்டனர். வடக்கு-கிழக்கில் தழிழரசுக் கட்சி தொழிற்சங்கங்களை கட்டியெழுப்ப எடுத்த முயற்சி தொழிலாளரிடையே பலனளிக்கவில்லை. இலங்கை ஆசிரியர் சங்கத்திலும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திலும் இருந்த தமிழ் உறுப்பினர்களில் ஒரு பகுதியினரை மட்டுமே அது வென்றெடுத்தது. மலையகத்தில் தமிழரசுக் கட்சி தொடக்கிய தொழிற்சங்கத்தில் இ.தி.மு.க. தலைவர் இளஞ்செழியன் பங்குபங்றினார். இ.தி.மு.க.வின் முதலாவது அரசியல் அடையாளப்படுத்தல் என இதைக் கூறினாலும், தமிழரசுக் கட்சியாலோ இ.தி.மு.க.வாலோ மலையக அரசியலிலோ தொழிற்சங்கத் துறையிலோ எவ்வகையிலும் முன்னேற இயலவில்லை. ஏனெனில் இரண்டு அமைப்புக்களுமே தொழிலாளர் வர்க்க அரசியலையும் போராட்டங்களையும் பற்றிய அனுபவமோ அக்கறையோ கொண்டிருக்கவில்லை.

* தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தின் தோல்வியையடுத்து மலையகத்தின் இ.தி.மு.க. அமைப்புக்கள் தடைக்குட்பட்டன. அதை எதிர்கொள்வதற்கான அரசியல் நோக்கோ அனுபவமோ இல்லாத இ.தி.மு.கவும் பிற திராவிட அமைப்புக்களும் மேலும் பலவீனப்பட்டன. எனினும் மலையகத்தின் வலுவாக இருந்த பிற்போக்குச் சிந்தனைச் சூழலில் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் முன்னெடுத்து ஓரளவு படித்த இளைஞர்கள் நடுவிலே முற்போக்கான சிந்தனையை விதைத்த மலையகத்தின் 'திராவிட இயக்கம்' மிகக் குறைவான தாக்கத்தையே செலுத்தக் காரணம், மலையகத்தின் குறிப்பான சூழலுக்கேற்ப அரசியல் சிந்தனையை விருத்தி செய்ய இயலாமையும் நடுத்தர வர்க்கக் கண்ணோட்டத்துடனேயே இயங்கியமையும் எனலாம்.

* இடதுசாரிகளது செயற்பாடுகள், குறிப்பாகப் பின்னர் செங்கொடிச் சங்கம் (இ.தோ.தொ.ச.) கண்ட வளர்ச்சிக்கும் அது புகுத்திய போராட்ட அரசியல் சிந்தனைக்கும் மாற்றாக சிறுமுதலாளிய, முதலாளிய சிந்தனைப் போக்குகள் பிரதேசவாதத்தை ஒரு கருவியாக்கின. மலையகத்தில் சில யாழ்ப்பாணத் தமிழ் ஆசிரியர்களும் அலுவலர்களும் நடந்து கொண்ட விதம் காரணமாக யாழ்ப்பாணத்தவர் பற்றி ஏற்பட்டிருந்த கசப்புணர்வு அதற்கு உதவியது. எனினும் கம்யூனிஸ்ட்டுக்கள் மலையகத்தில் தொழிலாளி வர்க்கத்தின் நடுவிலிருந்து போர்க்குணமிக்க ஒரு புதிய அரசியல் தலைமுறையை உருவாக்கி வந்ததனால் பிரதேசவாதிகளால் அதன் வளர்ச்சியைத் தடுக்க இயலவில்லை.

* இடதுசாரி அரசியல் வேலைகளால் 1950களின் பிற்பகுதி முதலாக அரசியல் மயப்படத் தொடங்கிய மலையகம் பல வேறு நிகழ்வுகளால் மீண்டும் தேசிய அரசியலுள் இழுத்து வரப்பட்டது. மலையகத் தமிழரை மோசமாகப் பாதித்த ஒரு நிகழ்வு இக்காலச் சூழலிலேயே ஏற்பட்டது. அதைப் பற்றி சிறிமா பண்டாரநாயக்காவின் முதலாவது ஆட்சிக் காலம் பற்றிய பாகங்களில் கவனிப்போம்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதற்காக முன்நிற்கின்றனர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அரியேந்திரன், சிறிதரன் ஆகியோர் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஜெர்மனி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர். வேறும் ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்து பேசி வருகின்றனர். இவர்களுடன் சுடர்ஒளிப் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் வித்தியாதரனும் பேசி வருகிறார். இவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் பட்ட துயரங்கள் அழிவுகள் இழப்புகள் பற்றி மனம் உருகப் பேசி வருகிறார்கள். வடக்கு கிழக்கு மக்கள் குறிப்பாக வன்னி மக்கள் பட்ட பேரவலங்களை எல்லாம் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டி வருகிறார்கள். சிறை இருப்போர் காணாமல் போனோர் பற்றியும் சுட்டிக் காட்டியுள்ளனர். பொத்தம் பொதுவாகவும் உணர்ச்சி தரும் வகையிலான தமிழ் உணர்வுடனும் கூடிய அவர்களுக்கே உரிய மொழியில் பேசியவற்றைத் தமிழ் ஊடகங்களில் காண முடிந்தது.

இவ்வாறெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் பேசிய கூட்டமைப்பினர் விடுத்த வேண்டுகோள் யாதெனில் தங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் மீள் கட்டமைப்புச் செய்ய புலம் பெயர்ந்தோர் உதவ வேண்டும் என்பதாகும். அவர்களது பேச்சின் தொனி தாமே தமிழர்களின் ஏகப் பிரதிநிகளாக அரசியல் அரங்கில் நிலைத்து நீடிக்க வேண்டும் என்பதேயாகும். தங்களை விட்டால் தமிழர்களுக்கு எதிர்காலமே இல்லை என்பது போல அறைகூவல் விடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இளைஞர் கட்டமைப்பு தமது தலைமையில் உருவாக்கப்பட வேண்டும் என வித்தியாதரன் வேண்டுகோள் விடுத்தார். அதுவும் தமிழர் கூட்டமைப்புடன் இணைந்து அதனைச் செய்ய வேண்டும் என்று கோரியதுடன் தான் அரசியலில் தீவிர பங்காற்றவே தனது பத்திரிகை ஆசிரியர் தொழிலைக் கைவிட்டதாகவும் கூறியுள்ளார். அவர் இன்றைய பாராளுமன்ற அரசியலில் ஈடுபடுவது அதிக கஷ்டம் நிறைந்த ஒன்றல்ல. ஏனெனில் அவரின் மைத்துனரான சரவணபவன் கூட்டமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர். ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய புள்ளியாக இருந்து வந்த சரவணபவன் (உதயன், சுடர்ஒளிப் பத்திரிகையின் சொந்தக்காரர்). தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து வெற்றி பெற்றார். அந்த வழியில் வித்தியாதரனும் மாகாண சபைத் தேர்தலிலோ அன்றி அடுத்த பாராளுமன்றத்திலோ வெற்றி பெறுவது பெரும் பிரச்சினை அல்ல. அதனாலேயே தமிழ்க் கூட்டமைப்பைக் கிராம மட்டத்தில் பலப்படுத்த வேண்டியும் இளைஞர் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனக் கோரி நிற்கிறார்.

இன்று தமிழ் மக்கள் அரசியல் விரக்தியில் ஆழ்ந்து போய் உள்ளனர். அதனாலேயே கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பதினைந்து சத வீத வாக்குகளைப் பெற்றே பதின்நான்கு உறுப்பினர்களைப் பெற்றனர். இது போதாதென்ற வகையில் தாமே மீண்டும் ஏகப் பிரதிநிதிகளாக வேண்டி நிற்கிறார்கள்.

கடந்த முப்பத்திமூன்று வருடங்களாக இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெவ்வேறு பெயர்களில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கி எதனைச் சாதித்தனர்? முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களில் நாற்பதினாயிரம் பேரைப் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறை பலிகொண்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு எத்தகையது? அங்கு தமிழ் மக்களுக்குக் கொள்ளி வைக்க நீங்களும் காரணம் அல்லவா? நெஞ்சில் கைவைத்து இல்லை எனக் கூறுவீர்களா? உங்களது விசுவாசத்துக்குரிய இந்திய ஆளும் வர்க்கம் எமது மக்களைக் கொன்று குவிக்க பின்னால் நின்று யுத்தத்தை நடாத்தவில்லையா? ஒட்டுமொத்த முப்பத்திமூன்று வருடங்களில் தமிழீழக் கோரிக்கையால் இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப் பட்டமைக்கு இதுவரை என்ன பதில் கூறினீர்கள்? எந்தவித வெட்கமும் ரோசமும் இன்றியே யுத்தம் முடிந்த கையோடு வந்த ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தை நடாத்திய ராணுவத் தளபதிக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்பீர்கள். அதன் மூலம் மகிந்தவின் வெற்றிக்கு எதிர்மறை உதவி செய்வீர்கள். அதன் பின் உங்கள் ஆதிக்க அரசியலை முன்னெடுக்க பாராளுமன்றத் தேர்தலில் நின்றீர்கள்.

இன்று இணக்க அரசியல் செய்ய முடியாமலும் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்க இயலாமலும் ஒருவகைப் பம்மாத்து அரசியல் நடாத்த வாய் வீச்சு நடாத்தி வருவது தான் உங்களது பரிதாபத்திற்கு உரிய நிலையாக உள்ளது.

நீங்கள் தமிழ் மக்கள் மத்தியில் எதைக் கேட்கிறீர்கள்? உங்களது அரசியல் வேலைத் திட்டம் யாது? அதற்கான கொள்கை என்ன? இந்தியா அமெரிக்கா பற்றிய நிலைப்பாடு பழையது தானா? நாட்டையும் மக்களையும் குறிப்பாக இப்போது வடக்கு கிழக்கையும் விழுங்கி வரும் உலகமயமாதலின் கீழான தாராள பொருளாதாரக் கொள்கையைப் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன? சிங்கள மக்கள் பற்றிய பார்வையில் மாற்றம் உண்டா? சாதியம் பற்றியும், பெண் ஒடுக்குமுறை பற்றியும் உங்களது பார்வையும், கொள்கையும் யாவை? தொழிலாளர்கள் விவசாயிகளின் நலன்கள் பற்றி திட்டவட்டமாகக் கூறாது பொத்தம் பொதுவாகத் தமிழர், தமிழ் இனம் என்று கூறும் இன உணர்ச்சிதான் கொள்கையா? இளைஞர் கட்டமைப்பு என்பதன் நோக்கம் என்ன? முன்பு தமிழர் இளைஞர் பேரவையில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முடிந்த இளைஞர் கட்டமைப்பு மீண்டும் தேவையா?

இவற்றுக்குப் பதில் கூறாது கடந்த காலத்தைச் சுய விமர்சனம் செய்யாது பட்டறிவால் தவறான கொள்கைகளை நிராகரிக்காது எவ்வாறு உங்களால் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்க முடியும். புதிய கொள்கைகளைக் கொண்ட வேலைத்திட்டம் எதாவது உண்டா? பிற்போக்குத் தமிழ்த் தேசியத்தை பழைமைவாதத்தின் ஊடாக முன்னெடுக்க நிற்கிறீர்களா அல்லது குறுந்தேசியவாதக் கொள்கையுடைய முறைகளை நிராகரித்து முற்போக்குத் தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்க முன்நிற்கிறீர்களா?

இவற்றுக்கு நேர்மையான பதில் முன் வைக்காது, தமிழர்கள் களத்திலும் புலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும் எனக் கோருவது எதற்காக? உங்களது மேட்டுக்குடி ஆதிக்க அரசியலைப் பாராளுமன்ற வழிகளில் முன்னெடுக்கவே அன்றி வேறு எதற்காகவும் இல்லை என்பதே உண்மை. இவற்றைத் தமிழ் மக்கள், குறிப்பாக இளந் தலைமுறையினர், உணர்ந்து கொள்வதும் புதிய மார்க்கம் தேடுவதும் அவசியமாகும்.

# சமூக வழக்குகளில் 5
# ஏற்றத் தாழ்வுகள்

**சி. சிவசேகரம்**

பரத நாட்டியம் இந்தியாவின் நடன வடிவங்களில் மிகவும் விருத்தி பெற்ற வடிவமாகக் கொள்ளப் படுகிறது. தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், அது மிகத் தொன்மையானதும் தெய் வீகமானதுமாகக் கொள்ளப்படுகிறது. கர்நாடக இசைக்கும் மேலான ஒரு தெய்வீகத் தன்மை அதற்கு வழங்கப்படுகிறது. அது தெய் வங்கட்குத் தெய்வமான சிவனாலும் சிவனாரின் பாகமானவரான சக்தியாலும் விண்ணிலும், மாலின் அவதாரமான கண்ணனால் மண்ணிலும் ஆடப்பெற்ற நடனங்களின் வழி வந்தது என்ற வித மான நம்பிக்கைகள் நம்மிடையே இன்னமும் உள்ளன.

* இசையும் நடனமும் தொன்று தொட்டு இருந்து வந்தன என்பது

## பரதமும் பண்பாட்டு மேன்மையும்

பற்றி நமக்கு ஐயம் வேண்டாம். ஒவ்வொரு வகையானதினதும் சிறப்புக்கள் பற்றி விவாதிக்கும் இடமும் இதுவல்ல. ஆயினும், ஒன்றை மூலமானதாகக் கொள்ளுவதைக் கேள்விக்கு உட்படுத்த வேண்டும். அது புனிதமான நோக்கங்கட்காகவே விருத்தி செய்யப்பட்டதா என்பதை நாம் விசாரிக்க வேண்டும். அது புனிதமான தேவைகட்காகவே பயன்பட்டு வந்துள்ளதா என்பதையும் நாம் விசாரிக்க வேண்டும்.

* பத்மா சுப்ரமணியம் தமிழகத்தின் ஆடற் கலைஞர்களுள் முக்கியமான ஒருவராக இருந்தவர். இன்றும் அக் கலைத்துறையில் மிகவும் மதிக்கப்படுபவர். அதில் சில மாற்றங்களைப் புகுத்தி அதன் நவீனப்படுத்தலுக்கும் பங்களித்தவர். அவருக்குப் பல ஆண்டுகள் முன்பு "டாக்டர்" பட்டம் வழங்கப்பட்டது. அது கருணாநிதிக்கோ ஜெயலலிதாவுக்கோ வேறு பிரமுகர்கட்கோ வழங்கப்பட்ட விதமான கௌரவ டாக்டர் பட்டமல்ல. பரதம் பற்றிய அவரது ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்ட பட்டம். அவரது ஆராய்ச்சி மூலம் அவர் நிறுவிய விடயங்களுள் "பரத முனிவரே" பரத நாட்டியத்தை உருவாக்கியவர் என்பது முக்கியமான ஒன்று. அதைப் பற்றி அப்போது மிகவும் பேசப்பட்டது. நமது அறிவுச் சூழலில் நாம் ஒன்றை நம்புவதற்கு யாராவது அதை ஏற்று எழுதினாலே போதும். எழுதியவர் பேராசிரியரோ "டாக்டரோ" என்றால் சிறப்பு. எழுதியதற்கு "டாக்டர்" பட்டம் வழங்கப்பட்டிருந்தால் சொல்லவும் வேண்டுமா?

* மொழி, தொழில் நுட்பம், மருத்துவம் என்பன போன்று, அனைத்துக் கலை வடிவங்களும் சமூக நடைமுறையிலிருந்து உருவாகின்றன. சமூக நடைமுறை மூலம் அவை வளர்கின்றன. சமூக தேவை கட்கேற்ப அவை விருத்தி பெறுகின்றன. சமூகத்தில் எவருடைய ஆதிக்கம் இருக்கின்றதோ, அதுவே எந்தக் கலை வடிவம் முக்கியம் பெறுகிறது என்று தீர்மானிக்கிறது. அது மட்டுமில்லாமல் அது எதற்குப் பயன்படுகிறது, எந்த விதமான செய்தியை சொல்லுகிறது என்பவற்றையும் தீர்மானிக்கிறது.

* இசையும் நடனமும் முக்கியமாக மக்களுக்கு களிப்பூட்டுவதற்காகவே பயன்பட்டு வந்துள்ளன. களிப்பூட்டுகிற போக்கில் அவை சமூகம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. சிலவாறான விழுமியங்களை வலியுறுத்துகின்றன. பிறவற்றை மறுக்கின்றன. சில வேளைகளில் மாற்றங்களைப் பரிந்துரைக்கின்றன. ஆதிக்கத்தில் உள்ளோர் வேண்டுகிற களிப்பூட்டலும் அவர்களால் சுரண்டி ஒடுக்கப்பட்டோர் வேண்டுகிற களிப்பூட்டலும் ஒன்றல்ல. பிரதானமான சமுதாய உறவின் எல்லைகட்கு வெளியில் வாழ்வோருக்கு வேறுவிதமான தெரிவுகள் இருக்கலாம். என்றாலும் நாடுகளதும் சமூகங்களதும் எல்லைகளைத் தாண்டி வருவதிலும் உள்ளடக்கத்திலும் புதிய நடைமுறைகள் ஒவ்வொரு கலை வடிவத்துள்ளும் போய்ச் சேருகின்றன. எனவே 'தூய' என்ற கருத்தாக்கம் அடிப்படையிலேயே தவறானது.

* "பரத முனிவர்" என்று பெயர் சூட்டப்பட்டவரது சிந்தனையில் தோற்றம் பெற்றதே பரத நாட்டியம் என்பது அறிவுக்கு ஒவ்வாதது. அவர் செய்ததெல்லாம் அவரது காலத்தில் விருத்தி பெற்றிருந்த அரங்கக் கலையின் மேடையமைப்பு முதலாக அழகியற் பண்புகள் வரையிலானவற்றை வகைப்படுத்தியதுதான். அவரது காலத்திற்குரிய உயர் நிலை மாந்தரின் பண்பாட்டு விழுமியங்கட்கமைய அவரது அழகியற் கொள்கை அமைந்திருக்கும் என்பது நம்பத்தக்கது. அதற்கு உடன்பாடான நடைமுறைகள் கொள்ளப்பட்டதும் அல்லாதன தள்ளப்பட்டதும் விளங்கிக் கொள்ளக் கூடியது.

* பரத முனிவர் என்ற ஒருவர் செய்ததாகச் சொல்லப்படுவது, உண்மையில் எந்தவொரு இலக்கண நூலாசிரியரும் செய்து வந்ததைப் போல ஒரு காரியமே. பரதத்தை அவரது ஆக்கமாக்குவதன் நோக்கம், யாருமே அறிந்ததாக ஒரு பதிவும் இல்லாத பரத முனிவர் எனப்படும் ஒருவரைச் சிறப்பிப்பது அல்ல. மாறாக, அவர் மூலம் பரதத்திற்கு ஒரு தெய்வீகத் தன்மையைக் கற்பிப்பதாகும்.

* பரதத்தின் மொத்தமான தோற்றுவாயே தழிழகம் என்றும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஆடல் வகைகளில் இருந்து தான் அது விருத்தி பெற்றது என்றும் கூறும் மாற்றுக் கருத்தும் குறைபாடானது. சிலப்பதிகாரம், அது எழுதப்பட்டபோது வழக்கிலிருந்த ஆடல் வகைகளை கூறுகிறது. அதற்குப் புறம்பான ஆடல் வகைகளோ, ஆடல் முறைகளோ தமிழ்ச் சமூகத்தால் காலப்போக்கில் உள்வாங்கப்படவில்லை என்பது முற்றிலும் தவறானது. ஒரு உதாரணத்துக்கு, இன்று பரதநாட்டிய நிகழ்வுகளில் தவிர்க்கத்தகாத ஒரு பகுதியாக உள்ள 'தில்லானா' நடனமும் அதற்கான இசையும் முகலாயர் காலத்தில் வடக்கில் வடிவம் பெற்றவை. அதை ஆடுவதில் வடக்கிற்கும் தெற்கிற்குமான வேறுபாட்டுக்கான காரணம் தில்லானா தெற்கின் நடைமுறைக்கேற்ப சில மாற்றங்களை உள்வாங்கியமை என்றே கொள்ளவேண்டும்.

* சிலப்பதிகாரக் காலத்துச் செவ்வியல் நடனம் எதுவாயிருப்பினும் அது இன்று சொல்லப்படுவது போல மதத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது என்பதற்கு சான்றுகள் தெரியவில்லை. சாதாரண மக்கள் நடுவே ஆடப்பட்டு வந்த கூத்து வடிவங்களில் சமயச் சடங்குகட்கு ஒரு இடம் இருந்திருக்கலாம் என்பது ஏற்கத்தக்கது. எனினும் சடங்குகளில் தொடங்கிய இசையும் நடனமும் சமூகத்தின் பல வேறு செயற்பாடுகளையும் சார்ந்து விருத்தி பெற்றுள்ளன என்பது உண்மை. அதில் மக்களைக் களிப்பூட்டல் முக்கியமான பங்கு வகித்து வந்தது. அதை இன்றைய நாட்டார் கலை வடிவங்களிலும் நாம் காணலாம். எனவே சமூகத்தில் மேல் நிலையில் இருந்தோர் பேணி வந்ததாகக் கூறப்படுகிற செவ்வியல் நடன வடிவம் எப்படிப்பட்டதாக இருந்திருக்க முடியும்?

* மேலைநாடுகளில் பார்த்துக் களிப்பதற்கான நடன வகைகள் உள்ளன. அவற்றை விட மனிதர் ஆடிக் களிப்பதற்கானவையும் உள்ளன. இரண்டு வகையானவையும் சமூகத்தில் ஒப்பிடத் தக்க மதிப்புடன் விருத்தி பெற்றுள்ளன. நமது சூழலில் பார்த்துக் களிப்பதற்கானவை நீண்ட காலமாகவே முதன்மை பெற்று விளங்குகின்றன. மக்கள் தம்மிடையே ஆடிக் களிப்பன, நாட்டார் வடிவங்களாகவும் அவற்றுள் கணிசமான பகுதி ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்குரியதாகவும் உள்ளதை அறிவோம். செல்வமும் அதிகாரமும் பெற்றோர் பார்த்துக் களிப்பதற்கான நடனங்கள் அவர்களுடைய பக்தி உணர்வின் மேம்படுத்தலுக்கானவை என்று நம்ப இயலுமா?


* மக்கள் நடுவே ஆடித் தமக்கான பொருளைத் தேடும் ஆடல் பாடற் கலைஞர்கள் வழங்கும் கலைகள் வசதி படைத்தோரின் நுகர்வுக்கானவையாக மாறும் போது, அவை எத்தகைய உணர்வுகட்கு விருந்தளித்திருக்கக் கூடும்? உயர்நிலையில் இருந்தோருடைய நுகர்வுக்கான ஆடல் பாடல்களில் ஒரு பகுதி முற்றிலும் அவர்களுடைய அந்தரங்கமான மகிழ்ச்சிக்காகவும் இன்னொரு பகுதி விழாக்கள் போன்ற பொது நிகழ்வுகளுக்காகவும் அமைந்திருந்தமை நாம் விளங்கிக் கொள்ளக் கூடியது. இவற்றிற் பின்னையவற்றில் மதம் சார்ந்த பண்புகள் பலவும் காலக் கிரமத்தில் உட்புகுந்ததாகவே நாம் கொள்ள இயலும்.

* நடனத்துக்குரிய பாடு பொருள் ஒரு இறைவனாகவும் பாடல் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, ஒரு இறைவியோ இறைவன் மேற் காமுற்ற ஒரு பெண்ணோ ஏங்குவதாகப் பல இடங்களிலும் அமைவது தென்னிந்தியச் செவ்வியல் ஆடல் பாடற் கலைகளின் முக்கியமான ஒரு பண்பு. இது பிற பண்பாடுகளிலிருந்து இந்திய நடன மரபை (சிறப்பாகத் தென்னிந்திய நடன மரபை) வேறுபடுத்துவதாகும். நம்மிடையே உள்ள புராண இதிகாச மரபுகள் அதற்கு வாய்ப்பாக இருந்தாலும், அரசர்கட்கும் ஆதிக்க வர்க்கத்தினருக்கும் மதத்தின் மூலம் மக்களைக் கட்டுப்படுத்தும் தேவைக்குப் பரதமும் துணை போயுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

* பேரரசர்கள் தங்களை இறைவனின் மனித வடிவமாகக் காட்டுகிற போக்கு இந்து மதங்களில் மட்டுமே காணப்பட்ட ஒன்றல்ல. இந்து மதங்களின் செல்வாக்குக்குட்படாத பல சமூகங்களிலும் ஆட்சி அதிகாரத்திலிருப்போர் தமது அதிகாரம் மனித வலிமைக்கும் மேலான ஒரு சக்தியால் அருளப்பட்டது என்று கூறி, அதை மக்கள் ஏற்கும்படி செய்துள்ளார்கள். கோயில்கள், வழிபாட்டுத் தேவைகட்கும் மேலாக, மேட்டுக்குடிகளதும் அவர்களது கூட்டாளிகளாக அமைந்த பூசகர்களதும் ஆதிக்கத்தை அடையாளப்படுத்தின. குறிப்பிட்ட வரலாற்றுக் காலங்களில், கோவில்கள் ஆடல்

13ம் பக்கம் பார்க்க

# சட்டத் திருத்தமும்



நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி பதவி ஒழிக்கப்பட வேண்டுமென்பதில் மட்டும் எல்லா இடதுசாரிகளும் தெளிவாக இருந்து வருவதாக மக்கள் நினைந்திருந்தார்கள். அதைத் தங்கள் ஆதரவுடன் அதிகாரத்திற்கு வந்த சந்திரிகாவைச் செய்யும்படி சமசமாஜக்கட்சியினரோ தங்களைக் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்று சொல்லிக் கொள்ளும் திரிபுவாதிகளோ வற்புறுத்தத் தவறிவிட்டனர். ஒப்புக்கு அதைப் பற்றி பேசினார்களே ஒழியச் சந்திரிகாவை மறுத்து ஒரு சொல்லும் பேசத் துணிவில்லாதவர்களாகவே இருந்தார்கள்.



மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்பட்டது. பாராளுமன்ற இடதுசாரிகள் மகிந்த ராஜபக்சவை மறுத்துப் பேசவே துணிவில்லாதவர்களாக மாறிவிட்டார்கள். இந்த அடிமை விசுவாசம் அரசாங்கப் போரைத் தீவிரப்படுத்தி மனிதப் படுகொலைகளை பல ஆயிரக் கணக்கில் நடத்திய போதும் மாறவில்லை. இப்போது பதினெட்டாவது அரசியல் சட்டத் திருத்தம் அறிவிக்கப்பட்ட போது அதை எதிர்ப்பார்கள் என்ற அற்ப நம்பிக்கை மக்கள் மத்தியில் எழுந்தது. அதற்கான சாடைகளையும் அவர்கள் தங்களுடைய 'இடதுசாரிக் கட்சிகளின்' கூட்டமைப்பின் மூலம் சுதந்திரமாக வெளிப்படுத்தினார்கள்.

அவர்கள் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள் என்று அவர்கட்கு நன்றாகத் தெரியும். எனவே இதுவரை தான் ஏற்காத எதற்கும் ஆதரவாகப் பேசாதவரும் பகிரங்கமாகவே அரசாங்கத்தை விமர்சிக்கத் தவறாதவர் என்று அறியப்பட்டவருமான வாசுதேவ நாணயக்காரவைப் பயன்படுத்தினார்கள். வாசுதேவவின் அறிக்கைகளைக் கேட்டோர் இடதுசாரிப் பாராளுமன்ற

# சந்தர்ப்பவாதமும்



உறுப்பினர்கள் சனாதிபதியின் அதிகாரத்தையும் பதவிக் காலத்தையும் நீடிக்கப் போகும் 18வது சட்டத் திருத்தத்தை எதிர்த்து வாக்களிப்பார்கள் அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. வாக்களிப்புக்கு இரண்டு நாட்கள் முன்பு, பிற்போக்குவாதிகளின் சூழ்ச்சி வலையில் சிக்கி அரசாங்கத்தை பலவீனப்படுத்தாமல் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதாக நமக்கு வாசுதேவ சொன்னபோதே, சூழ்ச்சி ஒன்று நடப்பதைப் பற்றி ஊகிக்க முடிந்தது. சூழ்ச்சி வேறொன்றுமில்லை, பாராளுமன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதம் தான். எப்படி அரசாங்கத்தை ஒரே சமயத்தில் ஆதரித்தும் எதிர்த்தும் வசதிப்பட்டபோது மட்டும் வாயைத் திறந்தும் ஒரு போதும் தங்களுக்குப் பாராளுமன்றப் பதவிப் பேற்றை வழங்கிய ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கையை உயர்த் தாமலும் இதுவரை நடந்து கொண்டார்களோ, அப்படியே இப்போதும் நடந்து நாடகமாடியிருக்கிறார்கள்.

வாசுதேச நாணயக்கார தான் இம்முறை மக்களின் பார்வையில் தன்னை மிகவும் கேவலப்படுத்திக் கொண்டவரானார். மற்றவர்கள் இவ்வளவு காலமும் தங்களை கேவலப்படுத்தியதற்கும் மேலாக எப்படிக் கேவலப்பட இயலும்? இதுதான் பாராளுமன்ற ட்ரொட்ஸ்கிச திரிபுவாத இடதுசாரிகளின் கேடு கெட்ட சந்தர்ப்பவாதம். இதற்குச் சிவப்பு நிறம் ஒரு கேடா?

# அன்று இயக்கங்கள் பின்பு புலிகள் இப்போது......

தடியெடுத்தவன் எல்லாம் தண்டக்காரன் என்பதற்கு இணங்க ஆயுதம் தூக்கிய அனைவருமே போராளிகள் ஆகி ஒவ்வொரு இயக்கத்தின் பேரில் எதை எதையோ செய்தார்கள். எல்லாம் உங்கள் விடுதலைக்கு என்றார்கள். எல்லாத் தமிழ் இளைஞர் இயக்கத்தவரும் பஞ்மாபாதகங்களுக்கு அஞ்சா நெஞ்சர்களாகி வடக்குக் கிழக்கில் நடாத்தியவை கொஞ்ச நஞ்சமல்ல. இந்த இயக்கங்கள் சகோதரப் படுகொலைகள் நடாத்தியும் தங்களுக்குள் பிரிவு பட்டும் பேரினவாதத்தைக் சரணடைந்தும் கொண்டன. அதன் போக்கில் தூய்மையான உண்மையான போராளிகள் தாம் எனப் பறைசாற்றிய புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகி ஆயுதம், நிதி, நிர்வாகம் என சகலதையும் கண்மூடித்தனமாக நடாத்தினர். மக்கள் இவர்கள் எல்லோருக்கும் அஞ்சி நடுங்கி மௌனிகள் ஆயினர். எதிர்த்தவர்கள் பகிரங்கமாகவே தண்டிக்கப்பட்டனர். இவர்களது விடுதலைக்கான அராஜகங்களால் பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், கணவன்மாரை இழந்த மனைவியர், மனைவியரை இழந்த கணவன்மார் இப்படி இப்படி எத்தனை உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. எத்தனை பேர் காணாமற் போயினர். பேரினவாத ஒடுக்குமுறை, கொடூரச் சட்டங்களை வைத்து வதை செய்தது என்றால், தமிழ் இயக்கங்கள் தமிழ் ஈழ விடுதலைக்கு என்பதை வைத்த நடாத்திய கொடூரங்கள் தான் எத்தனை. ஒவ்வொரு தமிழக் கிராமமும் நகரமும் வடக்குக் கிழக்கில் இவற்றின் சோகக் கதைகளை சுமந்தே நிற்கின்றது. இவை இலகுவில் மறைக்கப்படக் கூடியனவும் அல்ல. மறுக்கப்படவும் முடியாதவையாகும்.

இன்றுங் கூட, அவற்றின் எச்சங்களும் மிச்சங்களும் தொடர்கின்றன. புலிகள் அழிந்ததும் அவர்கள் பின்பற்றிய நடைமுறைகள் தொடரப் படுகின்றன. அரசாங்க அதிகாரம் படைத்தோர் சட்ட ஒழுங்குக்கு அப்பால் புலிகளின் அன்றைய நடைமுறைகளைப் பின்பற்றுவது தான் வேதனை தரும் வேடிக்கையாகும். உதாரணம் ஒன்று கூறுகிறேன். அண்மையில் யாழ் நகர பெற்றோல் நிரப்பு நிலையமொன்றில் ஏதோ தடை காரணமாக நீண்ட வரிசையில் மோட்டார் சைக்கிள்கள் காத்திருந்து ஒவ்வொன்றாகப் பெற்றோல் நிரப்பிக் கொண்டிருந்தன. அவ் வேளை, வரிசையை மீறியபடி இரு தடியன் சாமிகள் மோட்டார் சைக்கிளில் வந்து தனியாகவே பெற்றோல் கேட்க, வழங்கியவரும் பணிவுடன் நிரப்பிக் கொடுக்க, அவ்விருவரும் கம்பீரமாகச் சென்றனர். வரிசையில் நின்றவர்கள் என்ன வேலை என முணுமுணுத்தனர். அப்போது ஒருவர், "அது மற்றவையள். கொடுக்காட்டி கரைச்சல் வரும்" என்றார். யார் அந்த மற்றவையள் என்பது வரிசையில் நின்றவர்களுக்கு புரிந்ததாலோ என்னவோ முணுமுணுப்பு அடங்கியது. அதிகாரத்தோடும் அரசோடும் யார் அனுசரித்து அரவணைத்து செல்கிறார்களோ அவர்களால் திமிரோடும் ஆணவத்துடனும் நடந்து கொள்ள முடியும். அன்று ஆயுதம். இன்று அத்துடன் கூடவே அதிகாரம். மக்கள் தான் பாவம். -இராமு-

# ஏ-9 பயணத்தில் அள்ளு கொள்ளை!

வடபுலம் இப்போது பணம் கறக்கும் முதலீட்டாளர்களுக்கு பழம் பழுத்த பெரு மரம்போல் காணப்படுகிறது. வெளிநாட்டுப் பண வருகை அங்கு இருந்து வருவதால் பல்வகை முதலீடுகளும் வர்த்தகமும் வியாபாரமும் பல தரங்களிலும் இடம்பெற்று வருகின்றன. இருபதுக்கு மேற்பட்ட வங்கிகளும் பன்னிரண்டு நிதி நிறுவனங்களும் கடை விரித்துள்ளன. இவை எல்லாம் காட்டப்படும் அபிவிருத்திக்குள் அடங்கும். பெரும் வர்த்தக நிறுவனங்களின் மிகப் பெரும் விளம்பரத் தட்டிகள் ஏ-9 பாதையில் இரு மருங்கிலும் காட்சி கொடுக்க. அவை தமது பணக் கறபடை நடத்தி வருகின்றன. இத்தகைய முதலீகளில் ஒன்றுதான் ஏ-9 நெடுஞ்சாலையின் நீண்டதூர பஸ் போக்குவரத்தாகும். இப் பாதையில் எண்பதுக்கு மேற்பட்ட பஸ்கள் பல தரங்களிலும் ஓடிக் கொண்டிருக்கின்றன. இ.போ.ச. பஸ்கள் ஒருபுறமாகவும் தனியார் பஸ்கள் மறுபுறமாகவும் பிரயாணத்தில் ஈடுபடுகின்றன. இ.போ.ச. பஸ்ஸில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வர 600 ரூபா அறவிடப்படுகிறது. தனியார் பஸ்காரர் 600 தொடக்கம் 900 ரூபா எனப் பெறுகின்றனர். இவை சாதாரண பஸ்களாகும். அதற்கு மேல் சொகுசு பஸ்காரர்கள் என்ற பெயரில் குளிரூட்டிகள், தொலைக்காட்சிகள், சாய்ந்திருக்கும் இருக்கைகள் எனக் காட்டி 1100, 1200, 1300, 1800 வரை அறவிடப்படுகிறது. இது கொழும்பிலிருந்து மட்டுமேயாகும். ஒன்பது அல்லது பத்து மணித்தியாலங்களில் கொழும்புக்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ சென்றடையக் கூடியதாக உள்ளது.

இங்கு எழும் கேள்வி யாதெனில் இவ்வாறு பணம் அறவிடப்படும் பெரும் தொகையான பஸ்கள் தனியாருடையவையாகும். அரசாங்கத்தின் ஆசியும் போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுசரணை மறைமுக நடமுறைகளுடன் இருந்தால் ஏ-9 பாதையில் பெரும் முதலாளிகள் பஸ் ஓடி பணத்தை அள்ளலாம் என்ற நிலைதான்.

இதில் இருக்கும் மற்றொரு மறைக்கப்படும் சுவாரசியம் யாதெனில் அமைச்சர்கள், அரசாங்க உயரதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போருக்கெல்லாம் வெவ்வேறு பெயர்களில் பஸ் ஓடுவதாக மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஒளிவுமறைவுமின்றி சில அரசியல் வியாபார முதலாளிகளின் பஸ்களும் ஓடுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகிய திருமதி மகேஸ்வரனின் குடும்பம் தேர்தல் முடிந்த கையோடு ஏ-9 பாதை அனுமதி பெற்று பஸ்களை வாங்கி ஓட விட்டார்கள். தன் அரசியல் நீதியானது அன்றி அரசாங்க உயர் மட்டத்தினருடன் சுமுகமான உறவும் பேச்சும் கொண்டு இருந்து வருவதை திருமதி மகேஸ்வரன் பகிரங்கமாக ஒத்துக் கொண்டார். அது எதுவாகவென்றால் தமிழ் மக்களின் அவலமோ துயரமோ மீள்குடியேற்ற இடர்பாடுகள் பற்றியதல்ல. தமது வியாபார வர்த்தக விரிவாக்கம் சம்மந்தமானதேயாகும். இது ஒரு உதாரணம் மட்டுமேயாகும்.

இவ்வாறுதான் புலம்பெயர்ந்த நாடுகளின் உதவிகள் மூலம் வடபுலத்துக்கு வந்துசேரும் பண வருவாயை வங்கிகள் நிதி நிறுவனங்கள் முதல் வர்த்தகர்களும் வியாபாரிகளும் பஸ் முதலாளிகளும் அள்ளுகொள்ளையாக அள்ளிச் செல்லப் போட்டி போட்டு நிற்கிறார்கள். இதற்குத் தோற்றம் காட்டுவதே அபிவிருத்தி, மீள் குடியேற்றம், வடக்கின் வசந்தம் என்பனவாகும். வாழ்வின் வசந்தத்தை அனுபவிப்போர் ஒரு சிலர், அதில் தமிழ், சிங்கள வேறுபாடு கிடையாது. அதே போல் துன்ப துயரங்களைப் பெற்று வாழமுடியாது அல்லாடி அல்லற்பட்டு ஏங்கி நிற்கும் மக்கள் கூட்டம் ஏராளம் ஏராளம். இதனை மக்கள் உணராது ஏமாற்றுக்களை உண்மையென மக்கள் நம்பும் வரை மக்களுக்கு விடிவே கிடையாது.

# அந்தோ பரிதாபம்

ஒரு நாளில் அந்நாட்டின் 8 வங்கிகள் மூடப்பட்டன என்ற அதிசயச் செய்தியை கேட்டிருக்கிறோமா? ஆம்! இப்படி நடந்தது உலகின் முதற் தர நாடு எனப்படும் ஐக்கிய அமெரிக்காவில் தான். அது மட்டுமன்றி இவ்வாறு ஒவ்வொரு மாதமும் பதினைந்து வங்கிகள் மூடப்பட்டு வரும் சோகமும் அந் நாட்டில்தான் நடைபெற்று வருகிறது. இவ்வாறு கடந்த எட்டு மாதங்களில் சுமார் எண்ணாயிரம் வங்கிகளுக்கு மேல் மூடப்பட்டன என்பதை அந்நாட்டின் ஃபெடரல் டிப்பொசிட் இன்சூரன்ஸ் காப்பரேசன் தெரிவித்துள்ளது.

இத்தகைய வங்கி நிதி நெருக்கடியானது சிறு முதலீட்டாளர்கள் கடன் பயனாளிகளை கடுமையாகப் பாதித்துள்ளதுடன், வேலை இழப்போரின் தொகையையும் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை ஓகஸ்ட் மாதம் மூன்றாம் வாரத்தில் ஐந்து இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இது அமெரிக்காவின் சராசரி மக்களின் வாழ்க்கையைக் கடுமையாகப் பாதித்து வருகிறது. இதனைச் சமாளிக்க அமெரிக்க ஆளும் வர்க்கம் உலக வளங்களை மேலும் கொள்ளையடிக்கவும் பொருளாதார அரசியல் இராணுவ மேலாதிக்கம் செலுத்தவும் முற்படுமே தவிர, தனது முதாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டல் பொருளாதார அமைப்பை இழக்க ஒருபோதும் முன்வரமாட்டாது.


""அமெரிக்கா ஆ! ஊ!" என அண்ணாந்து பார்த்து அந்தச் சொர்க்கத்தை அடைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய தகவல் சமர்ப்பணம். தகவல் தொகுப்பு: மண்மகன்

# த.தே.கூவின் செவிப்பறை பிளக்கும் மௌனம் பேசுவதற்கு எசமானவர்களின் அனுமதி கிடையாததாலா?

18வது சட்டத்திருத்தத்தின் அத்திவாரம் சனாதிபதித் தேர்தல் முடிந்த பின்பே இடப்பட்டுப் பொதுத் தேர்தலின் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பற்றி பேசப்பட்டபோதே அதற்கான திட்டம் ஆயத்தமென்பது எந்த ஆரம்பநிலை அரசியல் மாணவனுக்கும் விளங்கியிருக்க வேண்டும். ஆளும் கட்சி ஒரு சாதாரணச் சிறுபான்மையுடனேயே, ஆட்சி அமைத்துத் தனக்கு வேண்டிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விலைக்கு வாங்கி இருக்கும் என்பதும் ஊகிக்க முடியாத ஒன்றல்ல.

சனநாயகத்தைப் பற்றி அக்கறையுடைய எவரும் 18வது சட்டத் திருத்தம் பற்றிப் பேச்சுக்கள் அடிபட்ட வேளையிலேயே அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திராவிட்டால் அவர் சனநாயக அரசியலுக்கு தகுதியற்றவர் என்பது தான் கருத்து. யூ.என்.பியும் ஜே.வி.பியும் தமது நிலைப்பாடுகளைத் தெளிவாகவே சொல்லியிருந்தன. எனினும் யூ.என்.பிக்குள் ஏலவே இருந்து வந்த பிளவுகளாலும் தேர்தல் முடிவுகட்கு மறுநாளே கட்சித் தாவலுக்குப் பலர் தம்மை ஆயத்தப்படுத்தியிருந்ததாலும் ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பதவியை தக்க வைப்பதிலேயே கூடிய கவனங் காட்டி வந்ததாலும் தென்னிலங்கையில் ஒரு வலுவான எதிர்ப்பியக்கம் இயலாமற் போயிற்று. ஜே.வி.பியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பொலிஸ் தாக்குதல்களும் ஜே.வி.பியால் உடனடியாக ஒரு எதிர்ப்புக்குத் தடையாக இருந்தன. எனினும் ஜே.வி. பியினரே காத்திரமான ஒரு எதிர்ப்புக் குரலாக இருந்தனர்.

தமிழ்த் தலைவர்களைப் பொறுத்த வரை. ராஜபக்சவின் அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்தப் படுவதன் விளைவுகளை அவர்கள் அறியாத வர்கள் அல்ல. அரசாங்கத்துடன் நிற்பவர்களிடம் நாம் எதிர்பார்க்க எதுவுமில்லை எனினும், தமிழ் மக்களின் ஏறத்தாழ ஏகப்பிரதிநிதி களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளுகின்ற த.தே. கூட்டமைப்பின் தயக்கத்திற்கு நியாயமென்ன? எல்லாவற்றிற்கும் முந்திக் கொண்டு கருத்துக் கூறுகிற சுரேஷ் பிரமச்சந்திரனின் மௌனம் மிகவும் வியப்பளிப்பதாகவே இருந்தது. சம்பந்தனின் உடல்நலக் குறைவு மட்டுமே அவருடைய மௌனத்திற்குக் காரணம் என்று நான் சொல்லமாட்டேன். அவரும் அதைப் பற்றிப் பேச விரும்பாதவராகவே காணப்பட்டார். 18வது சட்டத் திருத்தம் பாராளும ன்றத்தில் கடுகதியில் சமர்ப்பிக்கப்பட்டு அது நிறைவேற்றப்ப டுவதற்கு இரண்டு நாட்கள் முன்னரே த.தே.கூ. எதிர்த்த வாக்களிக்குமென்று சொல்லப்பட்டது. அதை எதிர்த்துப் பேசிய தேசியப் பட்டியல் உறுப்பினர் சுமந்திரன், அச் சட்டத் திருத்தம் எவ்வாறு எதிர்காலத்தில் பாரிய சனநாயக மீறல்களுக்கான வழியென்றோ அதன் மூலம் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு ஏற்படக் கூடிய கேடுகள் பற்றியோ விளக்கிப் பேசுவதை விட்டு சட்ட நுணுக்கங்களைப் பற்றியே அதிகம் பேசினார். அவராவது பேசினார் என்பது ஒரு சிறு ஆறுதல் என்றாலும். எங்கும் அரசியல் பேசப்படவில்லை. அது ஏன்? அவர்களிடம் பேசுவதற்கு அரசியல் இல்லாததாலா? அல்லது அவர்களது இந்திய எசமானவர்கள் அது என்னவென்று இன்னமும் முடிவு செய்யா ததாலா? -நமன்-



# வடக்கில் இருந்து வரும் மடல்

அன்புள்ள தோழர்களே! எனது புரட்சிகர வணக்கம்.

உங்களோடு மனந்திறந்து பேச வேண்டும். ஆனாலும் சிலதைப் பேச முடியாத சுய தணிக்கை இருக்கத்தான் செய்கின்றது. இங்குள்ள நிலைமை என்பதிலும் பார்க்க இலங்கைச் சூழல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. நடந்துமுடிந்த போர் அதனால் உண்டான அனர்த்தங்களில் இருந்து எமது மக்கள் விடுபடவில்லை. ஜப்பான் ஹிரோஹிமா நாகசகி நகர்களின் மீது அமெரிக்காவால் போடப்பட்ட அணுகுண்டின் பாதிப்பு காலம் காலமாக நீடித்து வருவது போலத்தான் வடுக்கள் ஆழமாக உள்ளது.

அரசியல் உரிமைகள் பற்றி மக்கள் அதிகமாக கதைப்பதில்லை. காரணம் அதற்காக மக்கள் அதிக விலையை கொடுத்து விட்டனர். கொடுப்பதற்கு அவர்களிடம் ஒன்றும் இல்லை. தொடர்ச்சியான ஏமாற்றம் அவர்களிடம் நேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது. இன்று A9 பாதை திறக்கப்பட்டு அபிவிருத்தி பற்றி பேசுகின்றார்கள். அபிவிருத்தி யாருக்கு அபிவிருத்தி! சொந்த மக்கள் வாழிடம் இன்றி நடை பிணங்களாக திரிகின்றனரே அவர்களுக்கான வேலைத்திட்டம் எதுவும் கிடையாது. உல்லாச விடுதி, பல்தேசிய கம்பனி, வானுயரக் கட்டடம், நீச்சல் தடாகம், இதுதான் அபிவிருத்திக் பொருட்களைக் காட்சிப்படுத்த நல்ல சந்தையாக யாழ்ப்பாணத்தை தெரிவு செய்துள்ளனர் பினான்ஷியல் நிறுவனங்கள் பல எண்ணிக்கையில் இங்கு முகாமிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தவர் கடனாளியாக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தை நோக்கி இன்று பலரும் படையெடுக்கின்றனர். ஆட்சியாளர்களிடம் வெற்றிக்களிப்பு தெரிகின்றது. சாதாரண சிங்கள உழைக்கும் மக்களிடம் மகிழ்ச்சி தெரிகின்றது. அவர்கள் தமிழ் மக்களோடு உறவாட விரும்புகின்றனர். அவர்களை அன்பாகவே இங்குள்ளவர் உபசரிக்கின்றனர். இனங்களுக்கிடையில் ஒற்றுமை பற்றி பேசிக் கொண்டு இவர்களுக்கிடையில் பதற்ற நிலைமை தோற்றுவிக்கவும் அரசு இயந்திரம் சில சம்பவங்களை திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளது. "பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறார்களாம்".

தோழர்களே! உலகை இடையறாது கண்டு பிடிப்பதுதான் வாழ்க்கை நாங்கள் வாழப்பிறந்தவர்கள் அல்ல. மக்கள் துயர் கண்டு பயணிக்கப் புறப்பட்டவர்கள். இதுவெறும் உணர்ச்சிப் பெருக்கல்லப் உண்மை பெருக்கு இலங்கை உலக உழைக்கும் மக்களோடு பயணிக்கப் புறப்படுவோம். இது ஆரம்பமும் அல்ல முடிவும் அல்ல தொடர்ச்சி எங்கள் தோழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இப்பயணத்தைத் தொடங்கி விட்டார்கள் கம்னியூச உலகை அடைவதற்காக.

எமக்கிடையே காலத்துக்கு காலம் பல் வேறு ஆட்சியாளர்களும் (உள்ளூர் ஆட்சியாளர் உட்பட) பகைமையையும் எதிரான மனப்பாங்கையும் வளர்த்து வந்துள்ளனர். இதனால் பிரதேச பாகுபாடு தோட்டக் காட்டான், யாழ்ப்பாணத்தான் என்ற அநாகரிக சொல்லாடலும் செயலும் உருவாக்கப்பட்டது. இது சிங்கள, முஸ்லிம் மக்களையும் அந்நியப்பட வைத்தது. இவர்களுக்கு ஒன்று தெரிய வேண்டும் வடபகுதி தமிழர்களுக்கு அடிவிழும் போதெல்லாம் மலையகத் தமிழர்கள் அழுதார்கள் இந்த அடி அவர்கள் முதுகிலும் பட்டது.

இரண்டு தவளைகளை ஆய்வாளன் தனது ஆய்வுக்காக எடுத்துக் கொண்டான் அதனை அதனது வாழிடத்தில் இருந்து எடுத்து வந்து ஒன்றை சுடு நீரிலும், இன்னொன்றை குளிர்நீரிலும் விட்டபோது சுடுநீரில் விடப்பட்ட தவளை தனது எதிர்ப்பைக் காட்டி உடனே மேலே வந்து விடுகின்றது. குளிநீர் படிப்படியாக சூடாக்கப்பட்டது. தொடர்ந்தும் சகிக்கின்ற சூடு அதிகமானது. அந்தோ தவளை மரித்துப் போனது. இரண்டாவது தவளையின் நிலைமைதான் எமக்கு உருவாக்கப்பட்டுள்ளது. எமது சொந்த வாழிடத்தில் விரட்டப்பட்டு மாயக்கனவுகளோடு மக்கள் வாழவைக்கப்படுகின்றனர் மேல் கொத்மலை திட்டமென சம்பூர் அனல் மின் திட்டமென எல்லா திட்டங்களும் எம் மக்கள் மீது பரீட்சிக்கப்படும். எதிர்ப்பு குரல்கள் மௌனிக்கப் படுகின்றன. இதனைத் சிதனைத் தகர்க்கச் சாத்தியமான வழி வகைகள் பற்றி சிந்திக்க வேண்டும் சரியான தலைமையை இனங்காண வேண்டும்.

" ஆளில்லா வேலியென்று அடர
மிரி(தி)க்கினமே
முள்ளிலா வேலியென்று முறிய
மிரி(தி)க்கினமே"

இது இங்கு நெடுந்தீவுப் பகுதியில் பாடப்படும் ஒப்பாரிப் பாடலில் கணவன் இல்லாத பெண் படும் துன்பத்தை காட்டுகின்றது. அது போலத்தான் மக்கள் சரியான வழிகாட்டுதற்குரிய தலைமை இல்லாமல் தலைமை எனக் கூறியவர்களினால் பிழையாக வழிநடத்தப்பட்டதனால் உண்டான வேதனை இழப்புக்களினால் துன்பப்படுகின்றனர் இதற்குச் சரியான தலைமை பாட்டாளி வர்க்கத் தலைமை தான் என்று சிந்திக்கத் தொடங்கி விட்டனர் இலங்கை உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு இனரீதியான முரண்பாடுகளுக்குச் தாங்களே தீர்வுகாண வேண்டும்.

" பொழுதும் எறங்கிருச்சி
பூ மரமும் சாஞ்சிருச்சி
இன்னமும் இரங்கலையோ
எசமானே ஓங்கமனம்"

இது மலையக நாட்டார் பாடல் எசமான் தொடர்ச்சியா வேலை வாங்கிறான் நேரத்துக்கு வீட்ட போகணும் முடியேல எசமான்களின் மனம் எமக்காக இரங்காது, எமை மதிக்காது எமைமதிக்க புரட்சியாளர்களே ஒத்துழையுங்கள்.

எப்படி சாத்தியமாக்குவது?

1) தள்ளிப்போடுதல்

எப்படி?... எப்படி..? முடியுமென்று காலத்தை வீணாக்காது எந்தச் செயலையும் காலம் தாழ்த்தாமல் செய்து முடிப்போம். எமக்கு எதிராக பிரயோகிக்கப்படும் அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும் செயலை முன்னிறுத்துவோம். (குரலை அல்ல) எமக்குரிய காலம் சொற்பமானது.

2) செய்யாமல் இருப்பதை நியாயப்படுத்த வேண்டாம் அவர்கள் மோசமானலர்கள். எங்களிடம் நிதியில்லை, ஆட்புலம் இல்லை நேரமில்லை. இது நாங்கள் கூறும் நியாயங்கள் இதற்கு காரணம் எமது மனதில் வேரூன்றிப் போன எதிர்மறையான சிந்தனைகள் இதனை விடுத்து உடன்பாடு சிந்தனைகளை வளர்க்கும் போது பலம் பலம் பெறும் பலவீனங்கள் குறைக்கப்படும்.

3) நாங்கள் செய்கின்ற சிறு சிறு செயல்கள் காலப்போக்கில் பெரிய பயன்களை அளிக்க முடியும் அந்த எதிர்கால நம்பிக்கையோடு செயற்பட வேண்டும் இதற்காக குறுங்கால, நீண்டகால திட்டங்களை வகுத்து அதனை அமுல் படுத்தல் அவசியம்

சமூக அக்கறையற்றவர்களாக இருந்து கொண்டு சாதியின் பெயராலும், பணத்தின் பெயராலும், பிரதேசத்தின் பெயராலும் ஆட்சியின் பெயராலும் பலம் தேட முனைபவர்கள் ஒரு வகை நோயாளிகள் அவர்களைக் குணப்படுத்த வேண்டிய பொறுப்பும் எமக்கே உண்டு.

இது என் தவறு அல்ல என்று நாம் தட்டிக்கழித்து விட முடியாது. குழந்தை தரையில் தடக்கி விழுந்தாலும், அல்லது கதிரையில் அடிபட்டாலும் தாய் "என் பிள்ளைக்கு கதிரை அடிச்ச தோணை என்று கதிரைக்குத் தான் அடிகொடுப்பாள் அப்பொழுதே தட்டிக்களிக்கும் உபாயத்தை குழந்தை கற்றுக் கொண்டு விடுகின்றது. அது போலத்தான் இப்பொழுதும் எமது தவறு அல்ல என்று ஒதுங்கி விடுகின்றோம். வல்லவர்கள் மௌனமாக இருப்பதுதான் மோசமானது.

மலையகத் தோழர்களே! இளைஞர்களே! உங்களோடு இணைந்து செயலாற்ற எமது தோழ்களும் இளைஞர்களும் காத்து நிற்கின்றனர். வடபகுதிக்குப் புறப்பட்டு வாருங்கள். ஏனெனில் நாம் தேசங்களினால் பிரிக்கப்படாதவர்கள். நாங்கள் தயாராகி விட்டோம் அசாத்தியமானதைச் சாத்தியமாக்க.

தோழமையுடன்
செங்களரி

# பாதை சீர்கேட்டால் அவதிப்படும் மக்கள்

மலையகத்தில் பாதை சீர்கேடு புதிய விசயமல்ல. பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் கேட்டும் பார்த்தும் சலித்த விடயங்கள் தான். ஆயினும் அதைத் திரும்பத் திரும்ப எழுதவும் அதற்கெதிராக மக்களை அணிதிரட்டவும அறிவூட்டவும் வேண்டிய கடமை எம்மைச்சாரும். அந்த வகையில் அட்டனிலிருந்து ரொசல்ல சந்தி வழியாகப் பிரியும் பாதை தொடர்ச்சியாகச் சென்று கினிகத் சேனை சந்தியில் முடிவடைகிறது. இதற்கு இடைப்பட்ட தூரத்தில் சுமார் 20க்கு மேற்பட்ட தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் அட்டன் நாவலப்பிட்டி நகரங்களுக்குச் செல்ல பிரதானமாக பயன்படுத்து கிறார்கள்.

இப் பாதை தற்போது மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது. இதன் காரணமாக இப் பிரதேசத்து மாணவர்கள், நோயாளர்கள், குறிப்பாக கர்ப்பிணிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர். பாதை பழுது காரணமாக அரச தனியார் பேருந்து சேவைகளும் முறையாக இயங்குவதில்லை. இந்தப் பாதையின் நிலை குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையோ பிரதேச சபையோ எவ்வித அக்கறையும காட்டவில்லை.

கண்டி மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அதி கூடிய விருப்பு வாக்குக்களைப் பெற்று வென்ற மஹிந்தானந்த அளுத்கமகே இப்பாதைக்கு கார்ப்பட் செய்வதாக கூறியே இப் பகுதி வாக்குக்களை பொறுக்கினார். இப்பகுதி மக்களும் ஐயா வருவார் கார்ப்பட்ர போடுவார் என பார்த்துக் கொண்டிக்கிறார்கள். எல்லார் வாயிலும் மண் தான் என அவர்களுக்குப் புரிய காலமெடுக்கும்.

இப்பிரதேசத்தில் இயங்கும் தனியார் நீர்மின் உற்பத்தி செய்யும் நிறுவனம் இப்பாதையைச் செப்பனிட ரூபா 75 இலட்சம் அரசுக்கு வழங்கியதாகவும் அதை அமைச்சர் அவரின் கைக்கூலிகள் தின்று தீர்த்துவிட்டதாகவும் மக்கள் மத்தியில் அரசல் புரசலாக கதை அடிபடுகிறது. விரைவில் உண்மை அம்பலமாகும்.

மக்கள் காலத்துக்கும் ஏமாந்து போய்க் கொண்டிருக்காமல் தங்கள் உண்மை நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய அரசியல் நிலைவரம் எமக்கு தொடர்ச்சியாக உணர்த்துவது யாதென்றால், போராட்டாமல் எமக்கு இம்மியளவு கூட எதுவும் கிடைக்காது என்பதுதான் யதார்த்தத்தை புரிந்து கொண்டு மக்கள் போராடத் தயாராக வேண்டும். அதற்காக முற்போக்கு ஜனநாயக இடதுசாரிகளின் சக்திகள் ஐக்கியப்பட்டு களத்தில் இறங்க வேண்டும்.

அட்டன்- நாவலப்பிட்டி நிருபர்

# மம்பட்டியான் தோட்டம்

சம்பள உயர்வுப் போராட்டம் நடக்கின்றது. ஓர் தொழிற் சங்கவாதி, தனது அரசாங்கத்துடன் இருக்கும் தலைவரை பார்த்துக் கேட்கின்றார். "தலைவரே! நாமும் எவ்வளவு காலம் போராடுகின்றோம். நிறுத்தச் சொல்கின்றீர்கள். நிறுத்துகின்றோம். பேச்சு வார்த்தை, உடன்படிக்கை என்று, படம் காட்டுகின்றார்கள். இறுதியில் வழமையான காட்டிக் கொடுப்பு. அரசாங்கம் நினைத்தால் ஓர் நிலையான தரமான சம்பளத்தை, வழங்க முடியாதா?" என்றார். "அடேய் வாய மூடு! அரசாங்கம் வேற, கம்பனி வேற. அரசாங்கம் சொல்லி கம்பனி கேட்காது." தலைவரே! நான் கதை ஒன்று சொல்கிறேன் கேளுங்க.

மம்பட்டியான் தோட்டம், மிகவும் அழகியதொரு இடம். சுமார் 200 குடும்பங்களுக்கிடையில் மக்கள் வசிக்கின்றனர். நீர் வளம், மிகையாக கொண்ட இடம். அழகான குளம், சுற்றி இயற்கைக் காடுகள். பார்க்கவே சுற்றுலாத்தலம் போல் காட்சியளிக்கும் இடம். தோட்டத் துரை அவ்விடைத்தை, முதல் முதல் கண் வைத்தார். இடத்தை அழகுபடுத்தினார். பராமரிக்க ஆட்களை கிடத்தினார். எழில்மிகு இடத்தைப் பார்க்க மக்கள் கூட்டம் அலை மோதியது. ஒரு சிறு பணத்திற்கு அவ்விடத்தைப் பார்க்க, அனுமதிக்கப்பட்டனர். கிடைத்த வருமானம் ஓரளவு நேர் வழியில் பயன்படுத்தப்பட்டது. இந்த விடயம் முதலாளிகளுக்கு செல்ல, பேராசை கொண்ட அவர்கள், ஏதேதோ கணக்குப் போட்டனர். சிறு லாபம் பார்த்த இடத்தில் கொள்ளை லாபம் பார்க்க திட்டம் தீட்டினர். அரசாங்கத்திற்கு தயவான ஒருவர், இடத்தை வளைக்க முயற்சி செய்தார். அரசாங்கமும் இடத்தைப் பெற கம்பனிக்கு அழுத்தம் கொடுத்தது. சம்பள உயர்வுப் போராட்டம் என்றால், கம்பனிகளும் தொழிற்சங்க சம்மேளனங்களுக்கும் தான் அரசாங்கம் அதில் தலையிட முடியாது! என்கிறது. ஆனால் தனக்கு ஓர் இடம் வேண்டுமென்றால், அதை அபகரிக்க வேண்டுமென்றால் அந்த நேரம் கம்பனி தலையீடு பற்றி அரசாங்கத்திற்கு தெரியாதோ? என்ன நியாயம்டா இது? மக்களே தெளிவடையுங்கள். தோட்டத்தின் வளங்களை சூழ்ச்சியால் அபகரிப்பவர்கள் மீது எச்சரிக்கையாயிருங்கள்.

11ம் பக்கம் தொடர்ச்சி

## பரதமும் பண்பாட்டு

பாடல்கள் மூலம் மக்களைக் கவர முற்பட்ட ஒரு சூழலில் அரண்மனைகளைச் சார்ந்து மட்டுமன்றி கோவில்களைச் சார்ந்தும் ஆடல் மகளிரும் இசைக் கலைஞர்களும் சமூகங்களாக வாழுகிற நிலை ஏற்பட்டது. தேவதாசி முறை அதன் ஒரு பகுதியேயாகும். வசதி படைத்தோரதும் பூசகர்களதும் காம வேட்கயைத் தணிக்கும் கருவிகளாகவும் அதன் தொடர்ச்சியாக விலைமகளிராகவும் ஆடல் மகளிர் பரம்பரை பரம்பரையாகச் சுரண்டி இழிவு படுத்தப்பட்டனர். அதைக் கூடப் பண்பாட்டின் பேராலும் இந்து தருமத்தின் பேராலும் நியாயப்படுத்துவோர் இன்னமும் உள்ளனர்.

* இப்போது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாகப் பரதம் மிகவும் புனிதப்படுத்தப்பட்டுள்ளது. வறுமைப்பட்டுச் சுரண்டப்பட்ட ஆடல் மகளிரின் "சதிர்" இப்போது பரதநாட்டியம் என்று பேர் சூடியுள்ளது. அதனை ஆடுவது ஒழுக்கக் கேடானவர்கட்குரியதாகக் கருதப்பட்ட நிலை மாறிவிட்டது. அது பணமும் புகழும் கொண்டு வரக்கூடிய ஒரு ஆடம்பர நுகர்பொருளாக்கப்பட்டு விட்டது. திரைப் படங்களின் வருகை மூலம் பரதநாட்டியமும் பரதநாட்டியத்தின் மூலம் திரைப் படங்களும் மக்களிடையே பெற்ற செல்வாக்குக் காரணமாக, இக்கால மேட்டுக் குடிகளின் நுகர்வுக்கானதாக மட்டுமல்லாது புதிதாக உருவாகி வந்த, மேட்டுக்குடிச் சிந்தனையை உடைய நகர் சார்ந்த நடுத்தர வர்க்கத்தாலும் அது உள்வாங்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக அது உயர் வர்க்க அடையாளம் பெற்றுள்ளது. அதற்கும் மேலாக அதையே தமிழ் சமுதாயம் அனைத்தினதும் வரலாற்றுத் தொடர்ச்சியுடைய பண்பாட்டு அடையாளமாக்கும் ஒரு போக்கு மேலோங்கியுள்ளது. இதில் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் வசதி படைத்த பகுதியினரின் பங்கு கணிசமானது. அவர்கட்கும் இந்தியாவின் பண்பாட்டுத் துறை மேட்டுக்குடிகளுக்குமிடையே நெருக்கம் மிகுந்துள்ளது. அதே விதமான போக்கு இலங்கையின் புதிய வசதி படைத்த நடுத்தர வர்க்கத்தினரிடையிலும் வளரந்து வந்துள்ளது.

* பரதத்தைச் சமகாலச் சமூகப் பாங்கானதும் மக்களின் வாழ்வு பற்றிப் பேசுகிறதுமான ஒரு கலை வடிவமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் கார்த்திகா கணேசர் 1960களில் முன்னெடுத்த முயற்சியாலும் தமிழகத்தில் சந்திரலேகா போன்றோர் எடுத்த முயற்சியாலும் பரதத்தின் மரபுவாத, மதஞ் சார்ந்த படிமத்தை உசுப்ப முடியவில்லை. அதிகார வர்க்கம் தனது நிலவுடைமைச் சிந்தனையை முற்றாகக் கைவிடாமலே முதலாளிய, நவகொலனியச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்பதற்கு இந்துத்துவம் ஒரு சான்று. பரதமும் அவ்வாறு பயன்படுவது கவனிக்கத்தக்கது.

* பரதம் மக்களின் கலை வடிவமாக மாறுவதற்கான சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லை. எனினும் பரந்துபட்ட மக்களின் ஆடல்பாடல் வடிவங்களின் மூலம் மக்கள் தமது அழகியல் உணர்வையும் சமூகத் தேவைகளையும் மேலும் வலுவாக உணர்த்தி அவற்றை மக்கள் பண்பாட்டின் முக்கியமான பகுதியாக வளர்த்தெடுக்க இயலும். ஒரு பாரிய பண்பாட்டு மாற்றச் சூழலின் பின்னணியிலேயே பரதம் மக்களுக்கான ஒரு கலையாக உருமாற இயலும். அதுவரை அது எல்லாருடைய பேரிலும் மேட்டுக்குடிகளின் பழமைவாத அடையாளங்களைத் தொடர்ந்து பேணுவது பெருமளவும் தவிர்க்க இயலாததே.

# அமெரிக்க அக்கறையும் ஈராக்கின் எதிர்காலமும்

அமெரிக்கப்படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறின இதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்கள் மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுத்தன. இவை அமெரிக்கா முற்றிலுமாக ஈராக்கிலிருந்து வெளியேறிவிட்டன என்ற தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. ஈராக்கில் இருந்த அமெரிக்க தாக்குதல் படை செயற்பாடுகள் அனைத்தும் முற்றிலுமாக முடிவுக்கு வந்து விட்டதாகவும் ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகளை திரும்பப்பெறும் முடிவு ஈராக்கின் நலன் கருதி மட்டும் எடுக்கப்படவில்லை என்றும் அமெரிக்காவின் நலன் கருதியும் எடுக்கப்பட்டது எனவும் அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்தார். ஒருவகையில் வெல்லமுடியாது என்ற உண்மையை ஒப்புக்கொண்ட அதே நேரம் தாக்குதல் தவிர்ந்த படைகள் நிலைகொண்டிருக்கும் என்பதையும் அவர் சொல்லாமல் விட்டிருக்கிறார். ஈராக்கில் அண்மைக்காலங்களில் அளவுக்கதிகமான உயிரிழப்புக்களை அமெரிக்க படைகள் சந்தித்தன, அமெரிக்கப் படைகளால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத ஒன்றாக ஈராக் மாறியுள்ள நிலைமை, அமெரிக்காவால் தொடர்ந்தும் போரை நடாத்த முடியாத நிலையில் அமெரிக்கப் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளமை என்பனவே உண்மையான காரணங்கள். இப்போது விளங்க வேண்டும் யாருடைய நலன் கருதி அமெரிக்க படைகளை திரும்பப்பெறப்பட்டன என்று: பரவாயில்லை விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை.



அமெரிக்காவின் கடந்த எழு ஆண்டுகால ஆக்கிரமிப்பின் விளைவாக சராசரியாக நாளொன்றுக்கு 124 பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இதுவரை 12%மான ஈராக்கியர்கள் உயிரிழந்து விட்டனர். அண்மையில் ஈராக் சிறைச்சாலை ஒன்றினுள் கைதியை சித்திரவதை செய்யும் காட்சிளை உள்ளடக்கிய ஒளிநாடாவொன்று வெளியாகியிருந்தது. அதில் கைதியை நிர்வாணமாக்கி மின்சார அதிர்ச்சி அளிக்கும் கொடுமையான காட்சிகள் பதிவாகியிருந்தது. ஈராக்கின் மனித உரிமைகளை பற்றி அறிக்கையொன்றை விடுத்துள்ள சர்வதேச மன்னிப்பு சபை அண்ணளவாக 30,000 மேற்பட்டோர் குற்றச்சாட்டுக்கள் ஏதும் பதிவு செய்யப்படாமல் ஈராக் சிறைகளில் சித்திரவதை செய்யப்படுவதாக தெரிவித்திருந்தது. இதேவேளை ஈராக் போர் பற்றி அமெரிக்காவில் நிறையவே பேசப்படுகிறது. ஈராக் போர் பற்றிய அமெரிக்க அரசியல்வாதிகளது விவாதம் போர் சரியானதா இல்லையா என்பது பற்றியதல்ல போர் சரிவர நடத்தப்பட்டதா இல்லையா என்பது பற்றியதே. இதே அமெரிக்கா தான் ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் வாய்கிழியப் பேசுகிறது.

தற்போது ஈராக்கின் உள்ளக அரசியல் மிகவும் சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளது. கூட்டுப் படைகளால் தூண்டிவிடப்பட்ட சியா – சுன்னி மோதல்கள் தற்போது சுன்னி – குர்திஷ் மோதலாக விரிவடைந்துள்ளது. சமய, இன, அடிப்படையில் மோதல்கள் கூர்மைப்படுத்தப்பட்டுள்ளதால் ஈராக்கில் மிகப் பெரும் மனித அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இவை ஈராக்கின் நிரந்த அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதாகவே இருக்கும். இவை அமெரிக்கா ஈராக்கிய மக்களுக்கு வழங்கிய பரிசுகள். ஈராக்கின் நிரந்தர அமைதி அமெரிக்க நலன்களுக்கு மிகவும் கேடானது. ஈராக்கிலிருந்து அமெரிக்க தாக்குதல் படைகள் வெளியேறினாலும் தொடர்ந்தும் அமெரிக்காவின் இராணுவ, பொருளாதார ஆதிக்கம் ஈராக்கில் நிலைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அமெரிக்கா செய்து முடித்துவிட்டது. ஈராக்கிய பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட எண்ணெய் வளம் தொடர்பான சட்டத் திருத்தம் தொடர்ந்தும் அமெரிக்க எண்ணெய் கம்பனிகள் ஈராக்கின் எண்ணெய் வளத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. அமெரிக்காவின் முன்னணி கம்பனியான ஹெலிபேர்டன் போன்றவற்றின் கீழ் ஈராக்கிய எண்ணெய் வளம் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளது. எண்ணெயை ஏற்றுமதி செய்கின்ற அமெரிக்கக் கம்பனிகள் தொடர்ந்தும் ஈராக்கிய எண்ணெய் வளத்தில் தமது நிலையை உறுதிசெய்து கொண்டுள்ளன. எனவே, ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவது ஒரு வெளிப்படையான தோற்றமே தவிர, அமெரிக்க ஆக்கிரமிப்பு முடிந்து விட்டதற்கான அடையாளம் அல்ல.

அமெரிக்காவின் பாதுகாப்பின் பேரால் எந்த நாட்டின் மீதும் போர் தொடுக்கலாம். அமெரிக்க மக்கள் தேசபக்தியின் பேரால் அதை ஏற்கப் பழகிவிடுகின்றனர். போர் எதிர்பார்த்த வெற்றிகளைத் தராத போதும் அமெரிக்காவின் மக்களுக்குக் கெடுதல்களை விளைவிக்கும் போதும். எதிர்ப்பு அலை எழுகிறது. அத்துடன் அது முடிந்துவிடும். இதன் விளைவால் சில பதவிகள் பறிபோகலாம். அதற்கு மேல் எதுவும் நிகழாது. ஏனெனில் அமெரிக்காவிற் கருத்துச் சுதந்திரம் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும் அந்த கருத்துகள் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிற ஆற்றலும் அதிகாரமும் தகவல் ஊடகங்கள் மீதும் கல்வி நிறுவனங்கள் மீதும் எவரது அதிகாரம் உள்ளது என்பதில் தான் தங்கியுள்ளன. நிலைமைகள் கட்டுக்கடங் காமற் போகும் வரை அமெரிக்க ஊடக ங்கள் அமெரிக்க மக் களை உண்மைக ளிடமிருந்து பாதுகாப்பாக வைத்திருக்க வல்லன.

இதுவரை அமெரிக்கா, எத்தனையோ நாடுகளில் வலிந்து சென்று போர் நடத்தியுள்ளது. எவ்வளவோ பெரிய பொருளிழப்பிற்கும் உயிரிழப்பிற்கும் காரணமாகியுள்ளது. எனினும், இதுவரை ஒரு சதங்கூட நட்டஈடாக வழங்கப்பட்டதில்லை. அதே வேளை பல்லாயிரக் கணக்கான அமெரிக்க ஏழை, கறுப்பு இன உயிர்கள் (போர்வீரர்களாக) பயனற்ற ஒரு போருக்கு இரை யான பின்பும் ஈராக்கிலிருந்து தாமாக வெளியேறும் நோக்கம் அமெரிக்காவுக்கு இருக்கவில்லை. எனவே அமெரிக்க அக் கறை என்றும் மனித உயிர்கள் பற்றிய தாக என்றுமே இருந்ததில்லை. தனது நாட்டு மக்களின் உயிர்கள் குறித்தே கவ லைப்படாத அமெரிக்கா தான் ஆக்கிரமித்த நாட்டு மக்கள் பற்றி கவலையா கொள் ளப்போகிறது.

அமெரிக்காவின் வெறித்தனமான நடவடி க்கைகள் அமெரிக்காவின் வலிமையின் அளவுகோல்களல்ல. மாறாக, அவை அமெரிக்காவின் அச்சத்தின் வெளிப்பா டுகளே. ஈராக் போரின் விளைவாக நிச்சய மின்மையும், அமெரிக்கச் செல்வாக்கிற்கு நேர்ந்துள்ள சரிவும் காரணமாக அமெரிக்காவுக்குப் புதிய போர்களும் புதிய வெற்றிகளும் தேவைப்படுகின்றன. இர ண்டாம் உலகப் போரின் பின்பு அமெரிக்க ஆதிக்கத்தின் வளர்ச்சியையும் அதை உறுதிப்படுத்திப் பேண அமெரிக்கா எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளையும் நோக்கி னால் நாம் மூன்றாம் உலகப் போர் மூளு கிற அபாயம் பற்றி அஞ்ச வேண்டிய தில்லை. ஏனெனில், நாம் மூன்றாம் உல கப் போருக்குள்ளே தான் வாழ்ந்து கொண் டிருக்கிறோம்.

ஒரு நாடு பிற நாடுகள் மீது அடுத்தடுத்துப் போர் தொடுக்கிறது என்றால், அது அதன் அரசியல் வலிமையினால் அல்ல, ஒரு அதிகாரபீடம் தனக்குத்தானே உருவாக்கிக் கொள்ளுகிற நெருக்கடிகள் அதைப் போரு க்குள் தள்ளிவிடுகின்றன. எந்த ஆக்கிர மிப்புப் போரும் "இத்துடன் போதும்" என்கிற திருப்தியை அளிப்பதில்லை. ஆக் கிரமிப்புப் போரில் தோல்வியின் அளவுக்கு வெற்றியும் பாதுகாப்பின்மை உணர்வை வலுப்படுத்துகிறது. பெரும்பாலும் ஒரு போர் இன்னொரு போருக்கு இட்டுச் செல் கிறது. கைப்பற்றப்பட்ட எல்லைப் பகுதி எதுவுமே போதிய பாதுகாப்பை உத்தர வாதப்படுத்த மாட்டாது என்பதால் விஸ்த ரிப்பு என்பது இறுதியாக ஒரு பெருந் தோல்விக்கும் அழிவுக்கும் இட்டுச் செல் லும் வரை ஆக்கிரமிப்பாளர்களால் போரை நிறுத்த இயலுவதில்லை. இது எல்லா ஆக்கிரமிப்பாளர்களுக்கும் பொரு ந்தும்.

பல வேளைகளிற் போர்கள் ஏன் தொடக் கப்பட்டன என்பது பற்றிய நினைவே அழிந்து போய்ப் போர்கள் தொடர்கின்றன. போருக்கு கற்பிக்கப்படுகிற காரணங்களும் வேறுபடுகின்றன. அமெரிக்கா ஈராக்கில் தொடக்கிய போர் ஈராக்கில் உள்ள பேரழிவு ஆயுதங்களை இல்லாதொழிப் பதாகத் தொடங்கி ஈராக்கில் ஆட்சி மாற்ற த்தைக் கொண்டுவருவதற்காக என்று மாறி, இன்று பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பேரில் தொடருகிறது. அமெ ரிக்காவின் ஆள்வலிமையும் ஆயுத வலி மையும் போரை வெல்ல உதவ வில் லை. இது உறைக்க வேண்டிய உண்மை உலகின் மிகப் பலம் பொருந்திய நாட் டால் ஒரு போரை வெல்ல முடியவில்லை என்றால் அதற்கான முக்கிய காரணம் ஆக்கிரமிப்பாளர்களால் போரை வெல்ல முடிவதில்லை என்பதே.


– யாதவன் –

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## உலகின் கெட்ட மனிதர்கள்




மேற்குலகம் பற்றியும் அதனது ஜனநாயக நடைமுறைகள் பற்றியும் சிலாகித்துப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களது நோக்கங்கள் வேறுபட்டவை. அதேபோலவே மேற்குலகமும் நல்லவர்களையும் கெட்டவர்களையும் வகைப்படுத்துகிறது. அமெரிக்கா தனது ஆதிக்கத்தை இழந்துவரும் நிலையில் இவ்வாறான வகைப்படுத்தல்களில் இடம்பெறுபவர்கள் யார் என்று நோக்கினால் அவர்கள் இந்த நூற்றாண்டின் புகழ்பெற்ற வாக்கியமான "ஒன்றில் நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள் அல்லது எதிரிகளோடு இருக்கிறீர்கள்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டவர்களாகவே இருப்பார்கள். இந்த வகைப்படுத்தல்களின் நோக்கங்களும் தீங்கானவையே. கல்வியியலாளர்கள் மத்தியிலும், பல்கலைக்கழகங்களிலும் அரச கொள்கை வகுப் பாளர்கள் மத்தியிலும் பரவலாக வாசிக்கப்படும் மாத சஞ்சிகை 'Foreign Policy'. குறிப்பாக மேற்குலக மற்றும் அதன் ஆதரவு தேசங்களின் அயலுறவுக் கொள்கை வகுப்பாளர்கள், ஆய்வாளர்கள் தொடர்ச்சியாக கவனத்துடன் வாசிக்கும் ஒரு சஞ்சிகை என்ற வகையில் இது சர்வதேச அரசியலின் போக்குகளை விளங்கிக்கொள்ள பயனுள்ளது. இன்னொருவகையில் மேற்குலகம் உலகை எப்படிப் பார்க்கிறது என்று விளங் கிக்கொள்ளவும் இது மிகவும் உதவக்கூடும்.

கெட்டவர்கள் பற்றிய இதழாக (Bad Guys issue) வெளியாகியிருந்த ஆகஸ்ட் மாத இதழ், "உலகை நாசம் செய்வதற்கான குழு" (The committee to destroy the world) என்று தலைப்பிடப்பட்ட முன்னட்டையுடன் மிகுந்த கவனத்தைப் பெற்றது. இதில் உலகின் மிகவும் மோசமான 23 தலைவர்கள் பட்டியலிடப்பட்டிருந்தார்கள். அதில் முதலாம் இடத்தை வட கொரியத் தலைவர் கிம் ஜொங் இல்லும் இரண்டாவது இடத்தை ஸிம்பாப்வேயின் ஜனாதிபதி ரோபேட் முகாபேயும் பெற்றிருந்தார்கள். அதைவிட எட்டாவது இடம் ஈரானிய ஜனாதிபதி அகமதி நிஜாட்டுக்கும் பத்தாவது இடம் சீனாவின் தலைவர் ஹு ஜின்தாவோவுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

அணு ஆயுத தயாரிப்பு விவகாரத்தில் தனக்கு அடங்க மறுக்கும் வட கொரியாவுக்கு எதிராக கடந்த மாதம் மீண்டும் பொருளாதாரத் தடையை அறிவித்துள்ளது அமெரிக்கா. வட கொரியாவின் தலைவர் சீனா சென்று திரும்பிய அடுத்த நாளே இந்தத் தடை யை அமெரிக்கா அறிவித்து தனது நோக்கங்களை அமெரிக்கா வெளிப்படுத்தியது. வட கொரியாவின் அணு ஆயுத உற்பத்தியையும், வர்த்தகத்தையும் முடக்கும் நோக்கிலேயே மீண்டும் இந்தப் பொருளாதாரத் தடையை விதித்துள்ளதாக அமெரிக்கா விளக்கம் தெரிவித்துள்ளது. ஈரானினதும் வடகொரியாவினதும் அணுசக்தி விருத்தி முயற்சிகளைத் தடுக்க எந்த உலக நாட்டுக்கும் உரிமையில்லை. ஈரான் அணு ஆயுத உற்பத்தித் திட்டமிடுகிறது என்று குற்றச்சாட்டுகிற இஸ்ரேல் இன்று நானூறு அணு குண்டுகளைத் தன் வசம் வைத்திருக்கிறது. அது பற்றி எதுவுமே செய்யாத அமெரிக்காவுக்கு ஈரானையோ வடகொரியாவையோ கண்டிக்க என்ன உரிமை உள்ளது? அணு ஆயுதக் கட்டுப்பாடு பற்றிய உலகளாவிய உடன்பாடு ஏற்படு முன்பு அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் அணு ஆயுதங்கள் இருந்தன. இந்தியாவும் பாக்கிஸ்தானும் இரகசியமாகவே அணு ஆயுத உற்பத்தியில் இறங்கின. அமெரிக்காவின் மிரட்டலின் பின்னணியிலேயே வட கொரியா தற்காப்பிற்காக அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கியது. முதலில் இஸ்ரேலின் அணு ஆயுதங்களைக் களையாமல் மத்திய கிழக்கில் எந்த நாட்டின் மீதும் ஆயுதக் கட்டுப்பாடு பற்றிப் பேசுவது யோக்கியமில்லை. ஆனால் உலகின் ஆபத்தானவர்கள் பட்டியலில் இஸ்ரேலியர்களோ அமெரிக்கர்களோ கிடையாது உலக அமைதிக்காக அரும்பாடுபடும் இருவரும் எவ்வாறு இந்தப் பட்டியலில் இடம்பெற முடியும்?

ஸிம்பாப்வேயின் பொருளாதாரம் மிகவுஞ் சீர்குலைந்துள்ளது என்பது உண்மை. உணவு ஏற்றுமதி செய்து வந்த நாடு உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குகிறது. இதற்கான பழி முழுவதும் முகாபே ஆட்சியின் மீது சுமத்தப்படுகிறது. இந்த நிலை எப்படி ஏற்பட்டது என்பது பற்றி எதுவுஞ் சொல்லப்படுவதில்லை. ஸிம்பாப்வேயின் பொருளாதாரச் சீர்குலைவுக்கு முக்கியமான காரணம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஸிம்பாப்வே மீது விதிக்கப்பட்டுள்ள பல்வேறு வணிகத் தடைகளும் பொருளாதார நெருக்குவாரங்களுமே இவற்றுக்கான காரணம் ஸிம்பாப்வே மக்களின் உழைப்பை உறிஞ்சி ஸிம்பாப்வேயின் பயிர்ச்செய்கை நிலங்களையெல்லாம் அங்கு ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆண்டு அனுபவித்து வாழ்ந்த வெள்ளையர்களின் வசம் இருந்த நிலங்கள் முழுவதையும் பறித்த ஆபிரிக்கர்களுக்குப் பங்கிட்டது தான். இந்தக் கொடும் பாவச் செயலைத் செய்த ரோபேட் முகாபே உலகின் இரண்டாவது மிகப்பெரிய கெட்டவரானது அதிசயமல்ல.

சீனத்தலைவர் உலகின் பத்தாவது மிகவும் மோசமான தலைவராக குறிப்பிடப்பட்டதற்கு சொல்லப்படுகின்ற காரணம் சீனாவின் மனித உரிமை மீறல்களும் திபெத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுமே. சீனாவில் அமெரிக்க அக்கறை ஜனநாயகமின்மையோ மனித உரிமை மீறல்களோ பற்றியதல்ல. சீனா, அமெரிக்க மேலாதிக்கத்திற்கு ஆசி யாவில் மட்டுமின்றி மூன்றாமுலக நாடுகள் பலவற்றிலும் சவாலாக உள்ளது. அதனாலேயே தாய்வானை நிரந்தரமாகவே பிரிக்கவும், திபெத்தில் பிரிவினையை ஊக்குவிக்கவும், உய்கூர் இனத்தவர் உட்பட்ட சிறுபான்மைத் தேசிய இனங்களிடையே கிளர்ச்சிகளை மூட்டவும் அமெரிக்கா முயன்று வருகிறது.


திபெத் பற்றியும் திபெத்திற்கும் சீனாவுக்கும் இருந்து வந்துள்ள உறவு பற்றியும் தலாய்லாமா பற்றியும் ஏற்படுத்தப்பட்டுள்ள படிமங்களின் அடிப்படையிலேயே இன்றைய திபெத் பிரச்சினை பற்றிய செய்திகள் வழங்கப்படுகின்றன. இந்தப் படிமங்கள் எவ்வளவு தூரம் உண்மைக்குப் பொருந்திவருவன என்பதை நாம் கவனத்தில் எடுக்காமல் திபெத் பற்றியோ திபெத்தின் அரசியற் பிரச்சினை என்று நமக்குச் சொல்லப்படுவது பற்றியோ சரியான முடிவுகளை வந்தடைய இயலாது. திபெத்திய மக்கள் மத உரிமையோ மொழி உரிமையோ பண்பாட்டு உரிமையோ மறுக்கப்பட்ட ஒரு தேசிய இனமல்ல திபெத்திய மக்களின் வாழ்க்கைத் தரமோ சமூக நலன்களோ சமூக மேம்பாட்டுக்கான வாய்ப்புகளோ சீன மத்திய அரசாலோ பேரினாவாத அரசியலாலோ மறுக்கப்படவில்லை சீனக் குடியரசு நிறுவப்பட்டபோதே ஹான் பேரினவாதம் பற்றி எச்சரிக்கப்பட்டு சிறுபான்மைச் சமூகங்களின் அடையாளம் முதலான சகல உரிமைகளும் பேணப்படும் தேவை வற்புறுத்தப்பட்டது. இதுவரை அந்த நிலையில் மாற்றமில்லை. சீன அரசாங்கம் தலாய் லாமாவைச் சீனாவுக்குள் போக அனுமதிக்காது என்ற ஒரு அபிப்பிராயம் உருவாக்கப்பட்டு வருகிறது. இது உண்மைக்கு முரணானது. எந்த நிலையிலும் சீனா தலாய் லாமா திபெத்திற்குள் ஒரு மதத்தலைவராகத் திரும்பிச் செல்வதை மறுத்ததில்லை. இவை சொல்லப்படாத செய்திகள். எமக்கு கிடைக்கின்ற செய்திகள் பலசமயங்களில் சரியானதாக இருப்பதில்லை. அதனால் தானோ என்னவோ அமெரிக்காவும் அது சார் மேற்குலகும் உலகை அமைதியைக்காப்பதாக நம்பவைக்கப்படுகிறது. உண்மையில் அமெரிக்கா உலக அமைதிக்கெதிராகப் போர் தொடுத்துள்ளது. அவர்களால் சொல்லப்படுகின்ற 'உலகின் கெட்ட மனிதர்களால் எதுவித ஆபத்தும் இல்லை'. ஆபத்து நல்லவர்கள் என்று நம்பப்படுகிறவர்களாலேயே இருக்கிறது. அதைவிட அவர்களை நல்லவர்கள் என்று சொல்லுகிறவர்களும் நம்பச்சொல்கிறவர்களும் அதைவிட ஆபத்தானவர்கள்.

# ஆபிரிக்க பற்றிய தெளிவான பார்வை

ஆபிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா. கலையரசன். கீழைக்காற்று வெளியீடகம், சென்னை 600002, தமிழ்நாடு, 2009, 112 ப, இந்திய ரூ. 50.00.

ஆபிரிக்காவைப் பற்றி நமக்குக் கொலனிய எசமானர்களே அறிமுகப்படுத்தினார்கள். ஆபிரிக்கா காப்பிரியர்களின் (கீழானவர்கள் என்ற பொருளுடைய சொல்) தேசம் என்று நமக்குக் கூறப்பட்டது. காட்டுமிராண்டிகளே அங்கு வாழ்ந்தனர் என்று கூறப்பட்டது. அங்கே நடந்த எதுவுமே நமக்கு அக்கறைக்குரியதாக இருந்ததில்லை. வட ஆபிரிக்காவின் நாடுகள் சில பற்றி, முக்கியமாக எகிப்து பற்றிப், பல தொடர்புகளில் கேள்விப்பட்டிருக்கிறோம். மற்றப்படி ஆபிரிக்காவின் எந்த வரலாற்று நிகழ்வைப் பற்றியும் நமக்கு வழங்கப்பட்டு வந்த படிமம் ஆபிரிக்கர்கள் மிகவும் பின்தங்கியவர்கள். அவர்களால் தங்களைத் தாங்களே ஆள இயலாது என்பதுதான். தென்னாபிரிக்காவைப் பற்றி நமக்கு கொஞ்சம் தெரியும். ஏனென்றால் மண்டேலா பற்றி நமது ஊடகங்கள் பேசி வந்துள்ளன. ஆபிரிக்கா வழங்கிய உன்னதமான அரசியல் தலைவர்களான க்வாமே ந்க்ருமா, அமில்கார் கப்ரால், ஜுலியஸ் ந்யெரேரே போன்றோர் பற்றி வெகு சிலருக்கு கலங்கலான நினைவு இருக்கும். ரஷ்யாவில் உள்ள லுமும்பா பல்கலைக்கழகம் யாருடைய பெயரைக் கொண்டிருக்கிறது என்று அங்கு போய் வந்த நம்மவர்கட்குக் கூட அறிய அக்கறை இருந்திருக்குமா என்று யோசிக்கின்றேன். மேற்குலகையே நமது நவீன அறிவுக்கும் பண்பாட்டுக்குமான ஊற்று மூலமாக நோக்கும் பழக்கம் கொலனிய ஆட்சிக் காலத்தில் தொடங்கிக் கடந்த அறுபது வருட நவகொலனிய ஆட்சியினூடும் தொடருகிறது.

* ஆபிரிக்காவில் நவ கொலனியச் சுரண்டலும் ஆக்கிரமிப்பும் ராணுவ அரசியல் குறியீடும் முழு ஆபிரிக்கக் கண்டத்தினதும் அமைதியையும் வளர்ச்சியையும் தொடர்ந்தும் சீர்குலைத்து வருகிறது. எனினும் எல்லாத் தவறுகளும் ஆபிரிக்கச் சமூகங்களின் தவறுகளாகவே நமக்குக் காட்டப்படுகின்றன. இத்தகைய ஒரு பின்னணியில் கலையரசன் எழுதி வந்த 'வினவு' இணையத்தளக் கட்டுரைத் தொடர் நூல் வடிவம் பெற்றுள்ளது. அதன் முக்கியத்துவம் இருவழிகளிலானது. ஒன்று ஆபிரிக்காவின் நாடுகள் சிலவற்றின் வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தித் தருவதன் மூலம் ஆபிரிக்கா பற்றிய ஒரு பயனுள்ள அறிமுகம் நமக்குக் கிட்டுகிறது. மற்றது ஆபிரிக்காவைப் பற்றி ஓரளவு அறிந்தவர்கள் நடுவே இன்னமும் தொடருகிற மேற்குலகச் சார்பான வியாக்கியானங்களுக்கு மாற்றான ஒரு பார்வையை ஆதாரங்களுடன் வலியுறுத்துகிறது. இன்று இந்த இரண்டாவது பங்களிப்பு முதலாவதினும் முக்கியமானது. ஏனெனில் அது நமது ஊடகங்கள் சிந்தனையின்றி வழங்குகிற தவறான வியாக்கியானங்களைத் திருத்த உதவுகிறது. தகவல்கள் இல்லாததை விடப் பொய்த் தகவல்கள் கெடுதலானவை.




* இந்த நூல் ஆபிரிக்கா பற்றிய முழுமையான சித்திரமல்ல. நூலாசிரியரின் நோக்கமும் அத்தகைய நூலொன்றை வழங்குவதுமல்ல. ஆபிரிக்காவை இருண்ட கண்டமென்று இழிவு செய்த ஐரோப்பிய கொலனி த்துவ நவகொலனித்துவ அரசியலின் இருண்ட பக்கத்தை காட்டுவதில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார். அவர் பிற ஆபிரிக்க நாடுகளிலும் ஏகாதிபத்தியச் சூறையாடலும் சூழ்ச்சிகளும் பற்றி எழுதுவது அவசியம்.

* நூலின் கட்டுரைகள் சுருக்கமாக அமைவது இற்றைக் கால வாசிப்புக்கு வசதியானது. எனினும் விடயங்களைச் சுருக்கிக் கூறும் போது சில தகவல்களை முழுமையாக வெளியிட இயலாது. தவறான புரிதல்கட்கும் உதவலாம். அவ்வாறே சில முக்கியமான வரலாற்று நிகழ்வுகள் கவனிக்கப்படாமலே போகலாம்.

* நூலில் அயற் பேர்களைத் தமிழில் வழங்குவதில் சில பிழைகள் தென்படுவதால் பேர்களை மூலத்தில் ஆங்கில எழுத்துருவில் பெற்றவாறே அடைப்புக்குறிகளிலோ பின்னிணைப்பாகவோ தந்திருக்கலாம். ஒரு சில எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் நூலாக்கத்தின் போது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

* எவ்வாறாயினும் இன்று தமிழ் பேசும் மக்கள் வாசித்துப் பயனடையக் கூடிய ஒரு நூலாக இந்த நூல் அமைகிறது என்பதில் ஐயமில்லை.

-சிவா

# பொருத்தமில்லாத தலைப்புடன் ஒரு நூல்

**மலையகம் தேசியம் சர்வதேசியம். லெனின் மதிவானம். குமரன் புத்தக இல்லம். கொழும்பு- சென்னை, 2010, ப. 221 + x, ரூ. 450.00**

நூலின் தலைப்புக்குக் கீழே, "கலை இலக்கிய சமூகவியல் நோக்கு" என்று துணைத் தலைப்புப் போடப்பட்டிருக்கிறது:

இந்த நூலில் மலையகம் பற்றி ஒரே ஒரு கட்டுரைதான் உள்ளது. அதுவும் இலக்கியம் பற்றியது என்று கட்டுரைத் தலைப்புச் சொல்லுகிறது. தேசியம் பற்றி ஒரு கட்டுரையுமே இல்லை. ஆறு கட்டுரைகள் நூல்கள் பற்றிய திறனாய்வுகள். பேராசிரியர் கைலாசபதியைப் பற்றிய இரண்டு கட்டுரைகள், அவருடைய சமூகப் பார்வையை விளங்கப்படுத்துகின்றன.

டானியல் பற்றியும் சாருமதி பற்றியும் சிறிது விளக்கமான குறிப்புகளும் முருகையனைப் பற்றிய ஒரு நினைவுக் குறிப்பும் உள்ளன.

வாசிப்புப் பற்றிய ஒரு குறிப்பும் மலேசிய இனத்துவ முரண்பாடுகளைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரையும் விஞ்ஞானி பவ்லோவ் பற்றி ஒரு கட்டுரையும் உள்ளன.

* இந்த நூலின் தலைப்புச் சொல்லுவது போல இந்த நூலில் உள்ள கட்டுரைகள் அமையவில்லை. நூலின் தலைப்பு ஒரு வியாபார நோக்கங் கொண்டது போலவே தெரிகிறது. துணைத் தலைப்பு கூடுதலாகப் பொருத்தமானது. நூலாசிரியர் நூல் பல குறைபாடுகளைக் கொண்டமைந்துள்ளது என்று சொன்னாலும் ஈழம் பற்றித் தனது அறியாமையைத் தனது அணிந்துரையில் மறுபடியும் பிரகடனப்படுத்தியிருக்கிற ஆதவன் தீட்சண்யா நூலை முழுமையாகவே வாசிக்காமல் எதையெல்லாமோ எழுதித் தீர்த்திருக்கிறார். கலாநிதி ந. இரவீந்திரன் கவிஞர் முருகையனை இனத் தேசியங்களின் சுயநிர்ணயத்துக்கான குரலாக அடையாளம் காட்டுகிறார். நூலாசிரியரோ முருகையன் குறுந்தேசியத்துக்குப் பலியானார் என்று பேராசிரியர் நு.்.மானைச் சாட்சிக்கு அழைக்கிறார்.

* கைலாசபதியை விமர்சித்து எழுதுகிறவர்களுக்கும் அவருடன் சிறு விடயங்களில் உடன் படாதவர்களுக்கும் தவறான நோக்கம் கற்பிக்கிற மதிவானம், சண்முகதாசனை 1960களின் இறுதி ஆண்டுகளிலும் 1970களிலும் தத்துவங்களுக்குள் 'தலை புதைத்து நின்றவர்' என்றும் நடைமுறைக்கு உகந்த வழிமுறைகளை முன் வைக்க முடியாதவர் என்றும் இழிவுபடுத்துகிறார். அதுவும் போதாமல் அவர் கூறுகிற குற்றச்சாட்டுக்கள் முழுவதும் வெகுஜனனும், இமய வரம்பனும் எழுதிய நூலிலிருந்து பெறப்பட்டவை என்ற தோற்றத்தையும் உண்டாக்குகிறார்.




* தன்னோடு உடன்படாதவர்களை நிந்திப்பதும், உடன்படுவோரை மிகையாகப் புகழ்வதும் நூலில் பல இடங்களில் காணப்படுவதாகும்.

* இந்த நூலின் மூலம் வெளிப்படும் ஒரு விடயம் புரட்சியை மெச்சி எழுதிக் கொண்டே ஆயுதப் போராட்டங்களை முன்னெடுப்பவர்களுக்குத் தீவிரவாத முத்திரை குத்திக் கண்டனம் செய்யும் மதிவானத்தின் அணுகுமுறை. அது போலவே தலித் தேசியம் என்ற குழப்பமான கோட்பாட்டுக்கு ஆதாரங்கள் தேடுகிற ஒரு போக்கையும் காணலாம். கலாநிதி இரவீந்திரனின் குருட்டுத்தனமான கைலாசபதி வழிபாடும் பாரதி வழிபாடும் தலித் தேசியமும் (இப்போது இரட்டைத் தேசியமும்) போன்றவற்றில் காணப்படும் பகுத்தறிவுக்கு முரணான சிந்தனைகளை மதிவானமும் கேள்வி எதுவுமில்லாமல் ஏற்கிறார் போலவே தெரிகிறது.

* பவ்லோவ் பற்றிய கட்டுரை வேறெவரோ எழுதிய கட்டுரையை நினைவூட்டுகிறது. இக் கட்டுரை சொந்தச் சரக்கா, தழுவலா, இரவலா, தமிழாக்கமா என்று சொன்னால் நல்லது.

* "மக்கள் கலை இலக்கிய எழுச்சி வலுவோடு தொடர்ந்து வீறு நடை போடும் என்பதற்குத் தீர்க்கமான எடுத்துக்காட்டாக இந்த நூல் திகழும்" என்று வாழ்த்தியிருக்கிற கலாநிதி ரவீந்திரன் என்ன அடிப்படையில் அதைச் சொல்லுகிறார்? அவரை இவரும் இவரை அவரும் மாறி மாறி மலையுச்சியில் ஏற்றி வைப்பதை விட வேறு நியாயம் தெரியவில்லை. மொத்தத்தில் பலவீனமான கட்டுரைகளே அதிகமாக உள்ள இந்த நூலில் மலையகமும் தேசியமும் சர்வதேசியமும் நமக்குக் காட்டப்படவில்லை

- மலைநாடன

## தாலாட்டு வரிகள்

கண்ணே என் கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு
ஆரடித்து நீயழுதாய்
ஆரையெண்ணி நீயழுதாய்
அமுதூட்டும் கையாலுன்
அம்மை அடிப்பாளோ
அணைத்தெடுக்கும் கையாலுன்
அப்பன் அடிப்பானோ
கட்டிமுத்தம் தருங்கையால்
அக்காள் அடிப்பாளோ
பொட்டுவைக்கும் கையாலுன்
பாட்டி அடிப்பாளோ
மாலையிடுங் கையாலுன்
மாமி அடிப்பாளோ
மல்லிகைப்பூங் கொத்தெடுத்துன்
மாமன் அடிப்பானோ
அடிப்பதற்கும் அணைப்பதற்கும்
ஆருமில்லைக் கண்மணியே

பட்ட மரக்கிளைக் கீழ்
பழஞ்சீலை ஏணையினைப்
பவளக்கால் தொட்டிலெனப்
படுத்திருந்தாய் கண்மணியே
பட்ட மரமுமில்லை
படுத்துறங்கப் பாயுமில்லை
கூடாரக் கொட்டிலுள்ளே
காற்றுமில்லைக் கண்ணுறங்கு

(புவனம்)

## உலகை மாற்றுவோம்

ஏழை அழுத கண்ணீர்
கூரியவாள் என்போரே
கூரிய வாள் யாரேனும்
கையேந்தத் துணியாமல்
அறம் வெல்லும் அறம் வெல்லும்
என்றலறிப் பயனில்லை
தானாக அறம் வென்ற
வரலாறு எதுமில்லை

தானாக வருவதில்லை
வரமெவரும் தருவதில்லை
தீதான தீமையெதும்
தானாக அகல்வதில்லை
போராட மனந்துணிந்து
நீதிக்காய் எழுந்தீரேல்
மாந்தரெனும் மாசக்தி
மாநிலத்தை மாற்றி வைக்கும்

ஒப்பாரி ஓலங்கள்
அத்தனையும் ஓய்ந்திடுக
சோர்ந்து கிடப்பவர்கள்
நிமிர்ந்து எழுந்திடுக
போராடத் துணிந்தெழுக
பழம் பிழைகள் களைந்திடுக
புதியதொரு வழி தேர்ந்து
புதுவுலகம் படைத்திடுவோம்


ஏகன்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

செப்டம்பர் ஒக்டோபர் 2010

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



றுமேனியாவில் சம்பளக் குறைப்பை எதிர்த்து பொல்ஸார் வேலை நிறுத்தம் செப்றெம்பர் 2010.



ஸ்பெயினின் தலைநகரமான மட்றிடில் அரசாங்கத்தின் ‘சிக்கன‘ நடவடிக்கைகளை எதிர்த்துத் தொழிலாளர் ஆர்ப்பாட்டப் பேரணி 29.9.2010.





பெல்ஜியத்தின் தலைநகரமான பிரஸல்லில் ‘சிக்கன‘ நடவடிக்கைகளை எதிர்த்துத் தொழிலாளர் ஆர்ப்பாட்டப் பேரணி 29.9.2010.



பிரான்சில் ‘சிக்கன‘ நடவடிக்கைகளை எதிர்த்துத் தொழிலாளர் ஆர்ப்பாட்டப் பேரணி 29.9.2010.



காசுமீரில் தொடரும் ஆயுதப் படைகள் மீதான கல்லெறிதல்.







01.09.2010 இடம் பெற்ற தோழர் நாராயணனின் 31 வது நாள் நினைவு நிகழ்வு இடம்பெற்ற போது தோழர் மகேந்திரன் தலைமைதாங்குவதையும் பு.ஜ.ம.லெ.கட்சியின் சர்வதேச அமைப்பாளர் இ.தம்பையா மற்றும் சி.கா. செந்திவேல் அகியோர் மலர்அஞ்சலி செலுத்துவதையும் சி.கா.செந்திவேல் நினைவு உரை ஆற்றுவதையும் புத்தக கண்காட்சி நடைபெற்றதையும் படத்தில் காணலாம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.